
# அரங்கம்




யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
வல்வெட்டித்துறை

# சீலைன்ஸ் கொம்பிளைக்ஸ்
# Sea Lines Complex

பாடசாலை உபகரணங்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
அழகுசாதனப் பொருட்கள்
வாழ்த்து மடல்கள்
தையல் பொருடட்கள்



எவர் சில்வர் பொருட்கள்
அலுமினியப் பொருட்கள்
பிளாஸ்ரிக் பொருட்கள்
மின்சாரப் பொருட்கள்

இன்றைய நங்கையரின் நாகரீக
பட்டின்கள் கவறிங் செய்திடவும்
நாடுடுவீர்

## தொலைத் தொடர்பு சேவை

☎ (கு) ப்க்ஸ்
☎ போட்டோ பிரதிகள்
☎ அடையாள அட்டைகள்



❋ 070- 212881
❋ 070- 212402

I.D.D. - 0094 - 70-212881
I.D.D. - 0094 - 70-212402

ப்க்ஸ் 070- 212881

வதிரி வீதி,
உடுப்பிட்டி.

# அரங்கம்

## 2001 - 2002

இதழாசிரியர்கள்

செல்வி வி. கௌசியா
செல்வன் இ. விஜயதாஸ்

கலைவர்த்தக மன்றம்
யா / உடுப்பிட்டி அ. மி. கல்லூரி
வல்வெட்டித்துறை.

# ARANGAM


| | | |
|---|---|---|
| Volume | : | I |
| Study Year | : | 2001 - 2002 |
| Published on | : | 13 - 03 - 2002 |
| Editors | : | Mast. E. Vijayathas<br>Miss. V. Gowshika |
| Address | : | J / Uduppiddy A. M. College. |
| Press | : | Kanathiban Press - Karanavai |

## கல்லூரிக்கீதம்

இராகம்:- கல்யாணி தாளம்:- ஆதி

*பல்லவி*

வாழிய வாழிய வாழியவே
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி - வாழிய

*அனுபல்லவி*

ஏழிசை போலவும் இன்றமிழ் போலவும்
இசைபல திசைதொறும் இசைவுற - வாழிய

*சரணம்*

ஓது கலைத்துறை யோடுவிஞ் ஞானமும்
ஓங்கு முயிர்நலந் தாங்கு மெய்ஞ் ஞானமும்
நாத இசையொடு நங்கள் சமூகமும்
நாடும் வளம் பெறப் பீடும் பெருக்கி - வாழிய

உத்தம ஒழுக்கமும் உண்மை விழுப்பமும்
உயிரினும் மேலாய் உன்னு தகவதும்
சுத்த மனத்தொடு தொண்டு செய் ஊக்கமும்
சோம்பலில் லாவுழைப் போம்பலும்பெருக்கி- வாழிய

தன்னலம் நீக்கி இன்னலைப் போக்கித்
தாயத்திரு நாடினுக் காய்த் தினம் வாழ்ந்திடும்
உன்னத வீரரை ஓய்விலா தாக்கி
ஊழிதொ றூழி ஊழிதொ றூழி -வாழிய

# அரங்கத்தினுள்ளே......


| | | |
|---|---|---|
| பொருளியல் | | பக்கம் |
| | பொருளாதார உலக மயமாக்கல் | 1 |
| | நுகர்வோன் சமநிலை | 3 |
| | National Income | 5 |
| | Role of Government In the Economy | 11 |
| கணக்கியல் | | |
| | கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வு | 14 |
| | பாதீடு | 25 |
| வணிகக்கல்வி | | |
| | விளையிடற் கொள்கை | 30 |
| | மனித வளத் திட்டமிடல் | 36 |
| | நுகர்வோர் பாதுகாப்பு | 40 |
| | ஊக்கப்படுத்தல்... | 44 |
| | Management Thoughts | 49 |
| தமிழ் | | |
| | சங்கமருவியகால இலக்கியம் | 52 |
| | புதுக்கவிதை | 56 |
| | வெண்புறாவும் வல்லூறுகளும் | 58 |
| இந்துநாகரீகம் | | |
| | குப்த பேரரசர் காலமும் இந்து மறுமலர்ச்சியும் | 59 |
| | இந்தியத் தத்துவங்களின் வளர்ச்சிக்கு உபநிடதங்களின் பங்களிப்பு | 66 |
| | அறுபத்து நான்கு கலைகள் | 70 |
| விஞ்ஞானத்தின் வரம்பு | | 72 |
| கர்நாடக சங்கீதத்திற்கும்... | | 75 |
| கலையின் தொடர்பியலும் குறியீடும் | | 77 |
| நீங்களும் நாடகம் நடிக்கலாம் | | 80 |
| திருவிவிலியம் | | 83 |

# கலைவர்த்தக மன்றம் - நிர்வாகக் குழு

# 2001 -2002

| | |
|---|---|
| *காப்பாளர்கள்:-* | திரு. கி. நடராசா |
| | திரு. சு. தங்கராசா |
| | திரு. க. தர்மலிங்கம் |
| *உபகாப்பாளர்கள்:-* | திரு. மா. லோகசிங்கம் |
| | திரு. ப. ஜோதீஸ்வரன் |
| | திரு. க. பார்த்தீபன் |
| | திரு. சு. முரளிதரன் |
| | திரு. க. கனகேஷ்வரன் |
| | திரு. க. செபநேசன் |
| | திரு. ஆ. விமல்ராஜா |
| | திரு. A.D. அரியரஞ்சன் |
| | திருமதி ப. குமாரசாமி |
| | செல்வி சி. சண்முகதாஸ் |
| | திருமதி வி. இராஜேந்திரன் |
| | திருமதி ம. சிவராஜா |
| *மன்றப் பொறுப்பாசிரியர்:-* | திரு. மா. லோகசிங்கம் |
| *தலைவர்:-* | செல்வன் சு. ஸ்ரீராம் |
| *உபதலைவர்:-* | செல்வன் வி. மணிமாறன் |
| *செயலாளர்:-* | செல்வன் த. குமார் |
| *உபசெயலாளர்:-* | செல்வி தே. வித்யா |
| *பொருளாளர்:-* | செல்வன் பா. பாலமுரளி |
| *கணக்காய்வாளர்:-* | திரு. க. பார்த்தீபன் |
| *இதழாசிரியர்கள்:-* | செல்வி வி. கௌசிகா |
| | செல்வன் இ. விஜயதாஸ் |
| *மலர்க்குழு:-* | செல்வி ச. தீபிகா |
| | செல்வி து. சிவரோஜினி |
| | செல்வி சி. கஸ்தூரி |
| | செல்வன் சி மயூரன் |
| | செல்வன் இ. சுவேந்திரன் |
| | செல்வன் த. ஸ்ரீரங்கராஜ் |
| *விளம்பர சேகரிப்பாளர்கள்:-* | செல்வன் இ. எழில்ரமணா |
| | செல்வன் தி. டொன்றொலோஜான் |
| | செல்வன் ந. கோபிநாத் |

# அதிபரின் வாழ்த்துரை

அறிவியல் கலையின் வெளிப்பாடு இலக்கியம் என்று கூறுவர். இது சமூகத்தின் பல மட்டங்களின் எல்லாப் பிரிவினரும் பங்கேற்றுக் கொள்ள வேண்டும். இம்முயற்சியின் பிரதிபலிப்பாக எமது கல்லூரியின் கலை வர்த்தக மாணவர் ஒன்றியம் முதன்முதலாக "அரங்கம்" என்ற பெயரில் ஒரு மலரை வெளியிடுவதை முன்னிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்லூரியின் பணி தனிநபரின் உள்ளார்ந்த சக்திகளை விருத்தி செய்வதன் மூலம் ஒவ்வொருவரிடமும் காணப்படும் அதியுயர்ந்த பயனைப் பெறுவதாக இருத்தல் வேண்டும். அப்பணியை "அரங்கம்" நிறைவேற்றுகின்றது என நினைக்கின்றேன்.

ஒரு வயல் நிலமானது எவ்வளவு வளமுடையதாக இருந்தாலும் பயிர் செய்யப்படாத விடத்து அது பயன் தருவதில்லை.அது போன்று ஆக்கத்திறன் இல்லாமல் மனம் வளம் பெறுவதில்லை. மாணவர் எந்தளவிற்கு வளம் பெற்றுள்ளார் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு "அரங்கம்"

"அரங்கம்" உலகெல்லாம் அரங்கேற வாழ்த்துவதில்என்னையும் இணைத்துக் கொள்கின்றேன்.


கி. நடராசா

*அதிபர்*

*யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி*
*வல்வெட்டித்துறை*

## எங்கள் அதிபர்



திரு. கி. நடராசா B.A. M.A. (Ed)

# பிரதி அதிபரின் வாழ்த்து



தமிழ் பிரதேசங்களின் விடிவு இன்றைய தமிழ் மாணவர்களின் கையிலேயே தங்கியுள்ளது. அதிலும் உயர்தர மாணவர்களின் பங்கு மிகவும் இன்றியமையாததாகும். கல்லூரிக் கல்வியில் மட்டும் தங்கிநில்லாது சகலதுறைகளிலும் உயர்தர மாணவர்களின் ஆக்கங்கள் வலுவூட்டுவனவாக அமைய வேண்டும். பலவித சாதனைகளைப் பெற்று வரும் எமது கல்லூரியில் "அரங்கம் " வெளிவருவதும் ஒரு சாதனைதான். இம்முயற்சியில் அயராது உழைத்த உயர்தர மாணவர்களையும் அவர்களிற்கு வழிகாட்டிகளாக உள்ள பொறுப்பாசிரியர்களையும் பாராட்டுவதுடன் "அரங்கம்" தொடர்ந்து வெளிவந்து கல்விச் சமூகத்திற்கு பயனுள்ளதாக அமைய இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

"வாழ்க அரங்கம் " வளர்க அரங்கம்

சு. தங்கராஜா

யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
வல்வெட்டித்துறை.

*13-03-2002 இல்*

**60 வது அகவை எய்தி**

**தன் சேவையிலிருந்து இளைப்பாறும்**

எங்கள் பிரதி முதல்வர்

*சுப்பிரமணியம் தங்கராஜா*
*அவர்களிற்கு*

நன்றியுடன் வணக்கத்தைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

*கலை வர்த்தக மாணவர் மன்றம்*

## உதவிக்கல்விப் பணிப்பாளரின் ஆசியுரை



உலக வங்கி இலங்கையின் கல்வி அபிவிருத்தி தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டபொழுது இலங்கைக் கல்வி அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள தேக்கத்திற்கு இலங்கை மாணவர்களினதும் ஆசிரியரினதும் வாசிப்புத்திறன் குறைபாடே அடிப்படைக் காரணம் என்பதைச் சுட்டிக்காட்டியது.

இதற்குப் பாடசாலைகளின் மீது குற்றம் சுமத்துவது அர்த்தமற்றது. கடந்த சில வருடங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த கல்விக் கொள்கைகளின் போக்கே வாசிப்புத்திறனை வளர்த் தெடுக்க உதவவில்லை என்பதே உண்மையான காரணமாகும்.

மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் வாசிப்புத்திறன் ஆக்கத்திறன் என்பவற்றை வளர்க்கும் வகையிலான வழிகாட்டல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. ஒரு சமூகத்தின் ஜனனத்தின் பிரமாக்களான ஆசிரியர்களிடையே வாசிப்புத்திறன் அருகிவருவதை அவதானிக்கும் பொழுது அவர்களாற் சிருஷ்டிக்கப்படும் ஒரு சமூகத்தின் உணர்வுகள் எப்படி இருக்கும்?

ஒரு ஆசிரியர் என்றும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்..... எப்பொழுதும் எதையாவது புதிது புதிதாக வாசித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களால் வழி நடத்தப்படுகின்ற மாணவர் சமுதாயத்திற் புதிய சிந்தனைகளையும் எழுத்தாக்கத்திறனையும் வளர்த்தெடுக்க முடியும்.

வாசிப்புத்திறனை வளர்ப்பதிலும் எழுத்தாக்கத்திறனை மேம்படுத்துவதிலும் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும், முக்கிய பங்கு வகிக்கின்றன. சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் தொடர்ந்து வாசித்து வரும் பழக்கம் அதிகரித்து வரும் பொழுது படைப்பிலக்கியத் திறனும் வளர்ந்து வரும் என்பது அனுபவரீதியாக கண்ட உண்மை! இவ்வாறான எழுத்து ஊடகங்களால் வாசிக்கும் பயிற்சிகளையும் கிரகித்தல் திறனையும் வழங்குவதில் ஆசிரியர்கள் முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும். பாடசாலைகளில் இத்தகைய திறன்களை வளர்ப்பதிற் கையெழுத்துச் சஞ்சிகைகள் உந்து சக்திகளாக விளங்குகின்றன.

அந்தவகையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் மாணவர் மன்றத்தினரால் கடந்த எட்டு ஆண்டுகளிற்கு முன் கையெழுத்துச் சஞ்சிகையாக தோற்றம் பெற்ற "அரங்கம்" அன்று பல மாணவர்களின் எழுத்தாக்கத் திறனுக்கும் மனவெழுச்சி வெளிப்பாடுகளிற்கும் களம் அமைத்து கொடுத்து வந்தது. அன்று இப்பெரு முயற்சியில் பங்குகொண்ட ஆசிரியர்களையும், மாணவர்களையும் நினைவு கூரும் பொழுது நெஞ்சமெலாம் நிறைகின்றது. எட்டு ஆண்டுகளின் பின்பு இன்று "அரங்கம்" ஒரு புதிய பரிமாணத்தை எடுத்து அச்சுவடிவில் வெளிவருவது மனதுக்கு நிறைவையும் மகிழ்ச்சியையும் தருகின்றது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷனின் **"அரங்கம்"** எமது இளம் சமூகத்தினிடையே வாசிக்கும் பழக்கத்யையும் படைப்பிலக்கியத் திறனையும் வளர்த்தெடுக்கும் களமாகச் செயற்பட்டுவருகின்றது. அதன் ஜனனத்தில் பங்குகொண்ட ஆசிரியர்களையும் மாணவர்களையும் மனதாரப் பாராட்டுகின்றேன்.

கையெழுத்து வடிவில் வந்து அனைவரையும் கவர்ந்திழுத்த அந்த **"அரங்கத்தை"** அச்சுவடிவில் ஏற்றி அவனி எல்லாம் பவனிவர முன்னின்று உழைக்கும் அதிபரின் முயற்சி போற்றுதற்குரியது.

"வாழ்வதற்காக வாசிப்போம்" என்ற அந்த தாரக மந்திரத்தை **"அரங்கம்"** முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அச்சு இலக்கியத்துறையில் காலடிவைக்க விரும்பும் புதியவர்களிற்கும் களம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று ஆசி கூறுகின்றேன்.

***மாகாணக்கல்வித் திணைக்களம்***
***வடகிழக்கு மாகாணம்***
***திருகோணமலை.***

**ந. அனந்தராஜ்**
முன்னாள் அதிபர்
யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி



## உதவிக்கல்விப் பணிப்பாளரின்
# வாழ்த்துரை

யா. உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் க.பொ.த. (உ/த) கலை வர்த்தகப் பிரிவு மாணவர்களின் **"அரங்கம்"** எனும் இச் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

**"அரங்கம்"** பல வருடங்களின் பின் மீள அரங்கேறுவது வரவேற்கத்தக்கது. ஆரம்பத்திற் கையெழுத்து சஞ்சிகையாக வெளிவந்தபோது மாணவர்களின் சுய ஆக்கங்களே அதில் நிறைந்திருந்தது. இன்று அச்சுருவில் அழகுற வடிவமைக்கப்பட்டு மீள அரங்கேறும்போது அதை விடக் கூடுதலான தரத்தை **"அரங்கம்"** கொண்டிருக்கும் என்பது எனது நம்பிக்கை.

ஒவ்வொரு உயர்தர பாடசாலையிலும் இவ்வாறான சஞ்சிகைகள் வெளிவருவதன் மூலம் மாணவர்களின் சுய ஆக்கத்திறன்கள் வெளிக்கொணரப் படுவதுடன் ஒவ்வொரு மாணவனும் மாறிவரும் விஞ்ஞான உலகிற்கு முகம் கொடுக்கக் கூடியவனாகவும் அன்பு, இரக்கம், பொறுமை, ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, நேர்மை, போன்ற நற்பண்புகளையுடையவனாகவும் வெளிவருவான் என்பது திடம்.

இதற்கு **"அரங்கம்"** தொடர்ந்து பல்லாண்டு காலங்களிற்கு சிறப்பான பொலிவுடன் வெளிவரவேண்டுமென ஆசிகூறி எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

*வலயக்கல்வித் திணைக்களம்,*
*வடமராட்சி, புலோலி.*
2002-02-07

**சி. நந்தகுமார்**
உதவிக்கல்விப் பணிப்பாளர்
வடமராட்சி வலயம்.

## மன்றப் பொறுப்பாசிரியரிடமிருந்து



கடந்த சில தசாப்தங்களாக மேற்குலகில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் இன்று எமது சமூக அமைப்பினையும் வெகுவாகப் பாதித்துள்ளது. இம்மாற்றங்களின் பின்னணியில் உலகம் எதிர்நோக்கும் சவால்களிற்கு எமது இளம் சமுதாயமும் முகம் கொடுக்க வேண்டிய அவசியம் உண்டு. இல்லையேல் அவர்களது எதிர்காலம் இருள்மயமாகி விடும். இந்தவகையில் மாணவர்களிற்குரிய அறிவையும் திறனையும் வளர்க்க வேண்டியது ஒவ்வொரு கல்லூரிகளினதும் கடப்பாடாகும். அதற்குரிய ஓர் களப்பயிற்சியாகவே நமது கல்லூரியின் கலை, வர்த்தக மன்றம் **"அரங்கம்"** எனும் கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டு வந்தது. இச்சஞ்சிகைக்குரிய பூர்வாங்க முயற்சியை நமது முன்னாள் அதிபர் திரு. ந. அனந்தராஜ் அவர்கள் எடுத்திருந்தார். எனினும் நாட்டின் யுத்தங்களும் இடம் பெயர்வுகளும் அதன் வெளியீட்டைச் சொற்பகாலத்திற்குத் தடைப்படுத்தியது. எனினும் கல்லூரியை இன்று அலங்கரித்து நின்கின்ற எங்கள் அதிபர் திரு. கி. நடராசா அவர்கள் காட்டிய ஊக்கத்தினால் இச்சஞ்சிகையை இன்று அச்சக்ப்பதிப்பாக வெளியிடமுடிகின்றது. இம்முயற்சியிலே பங்கெடுத்த மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் கல்விச்சிறப்புக்கு மனம் நிறைந்து வாழ்த்துவதோடு இப்பணி தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**மா. லோகசிங்கம்**

*யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி*
*வல்வெட்டித்துறை.*

## இதழாசிரியர்களிடமிருந்து


உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் கலை வர்த்தக மன்றத்தினால் இதுவரைகாலமும் கையெழுத்து சஞ்சிகையாக வெளியிடப்பட்டு வந்த "அரங்கம்" இன்று அச்சகப்பதிப்பாக உங்கள் கரங்களில் தவழவிடுவதில் நாம் பெருமை கொள்கின்றோம். இவ்வெளியீட்டினை கடந்த ஆண்டு மேற்கொள்வதாக கடும் முயற்சி செய்த எமது மதிப்புக்குரிய முன்னாள் ஆசிரியர் திரு. கு. தெட்சணாமூர்த்தி அவர்களையும் 2001 பிரிவைச் சேர்ந்த கலை வர்த்தக மாணவர்களையும் மனதார வாழ்த்துகின்றோம். இவர்களிற்கே இம் மலரை வெளியிடுவதில் பெரும் பங்கு உண்டு.

அரங்கத்திற்கு ஆசிகளையும் ஆலோசனைகளையும் தந்துதவிய உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், அதிபர், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சகமாணவர்கள், பெற்றோர்கள் யாபேருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"அரங்கம்" வெளிவர நிதிஉதவி செய்தவர்களிற்கும், விளம்பரம் மேற்கொண்டோர்களுக்கும், நலன்விரும்பிகளுக்கும், பழைய மாணவர் சங்கத்தினருக்கும், சிறந்த முறையில் அச்சுவாகனம் ஏற்றித்தந்த கணாதிபன் அச்சகத்தினருக்கும் இரு கரம் கூப்பி நன்றி செலுத்துகின்றோம்.

*கலைவர்த்தக மன்றம்,*
*யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி,*
*வல்வெட்டித்துறை.*

***வி. கௌசியா*** (2002 வர்த்தகம்)
***இ. விஜயதாஸ்*** (2003 கலை)



# பொருளாதார உலகமயமாக்கல்

குறைவிருத்தி நாடுகளில் காணப்படுகின்ற வறுமை, வேலையின்மை, வருமான சமமின்மை, பணவீக்கம் போன்ற பிரச்சினைகள் அவற்றின் அபிவிருத்திக்கு சவாலாக இருக்கின்றன. இந்நெருக்கடிகளை விடுவிப்பதற்கும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் குறைவிருத்தி நாடுகள் பாரிய பொருளாதார சீர்திருத்தங்களை கடந்த 3 தசாப்தங்களாக மேற்கொள்கின்றன. இதன் பின்னணியாகவே குறைவிருத்தி நாடுகள் உலகமயமாக்கலில் சிறிது சிறிதாக பிரவேசித்தன. ஆனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளோ தமது நலன்களைப் பேணும் முகமாக உலகமயமாக்கலை வலுப்படுத்தத் தயாராகின. இவ்விதம் 3 தசாப்தங்களுக்கு முன்னர் கருக்கட்டிய உலக மயப்படுத்தல் செய்முறைகள் கடந்த ஒரு தசாப்தமாகவே "உலகமயமாக்கல்" என்ற எண்ணக்கருவாகவும் பொருளாதாரங்களின் மைய விசையாகவும் பரிணமித்துள்ளது.

ஒவ்வொரு தனிப்பட்ட நாடுகளும் தாம் மேற்கொள்கின்ற பொருளாதார செயற்பாடுகளை தமது நாட்டின் அரசியல் எல்லைகளை நிராகரித்து உலக சந்தைவரை எடுத்துச் செல்கின்ற விடயமே உலக மயமாக்கல் என்ற எண்ணக்கருவை உருவாக்கியது. முக்கியமான பொருளாதார செயற்பாடுகளான வர்த்தகம், முதலீடு, தொழிநுட்பம் போன்றவற்றில் நாடுகள் அதிகளவு தொடர்புகளைப் பேணி ஒன்றிணைந்து செயற்படுதலே பொருளாதார உலகமயமாக்கல் எனக் கூறலாம்.

இதன் காரணமாகவே தேசிய உற்பத்தி, வர்த்தகம் தொடர்பாடல் என்று குறிப்பிடுவது போல உலக உற்பத்தி, உலகதொடர்பாடல், உலகதொழில் நுட்பம் என்றும் மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

குறைவிருத்தி நாடுகள் உலகமயமாக்கல் செய்முறைக்குள் நுழைந்து வருகின்ற பொழுது பின்வரும் நடவடிக்கைகளில் படிப்படியாக ஈடுபட்டுக் கொள்கின்றன.

(1) சர்வதேச வர்த்தகம் தொடர்பில் ஏற்றுமதி இறக்குமதிகளை தாராள மயப்படுத்தல்
(2) சந்தை மயமாக்கப்பட்ட பொருளாதார முறையை முழு அளவில் அனுமதித்தல்
(3) தனியார் மயமாக்கல் நடவடிக்கைகளிற்கு படிப்படியாக இட்டுச் செல்வதல்
(4) வெளிநாட்டு முதலீடுகளை வரவழைத்தல்
(5) நாணய மாற்று வீதங்களை மிதக்கவிடுதல்

## உலக மயமாக்கலை வலுப்படுத்துகின்ற காரணிகள்

### (1) பல்தேசியக் கம்பனிகளின் தோற்றம்:-

பல்தேசியக் கம்பனிகள் நாடுகளின் உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் முக்கிய பங்கினை வகிப்பதன் மூலம் உலக மயமாக்கலுக்கு இட்டுச் செல்கின்றன. பல்தேசிய கம்பனிகளிற்கு உதாரணமாக கொக்கோ கோலா, பெப்ஸிக் கோலா, சிங்கர், மெக்டோனால்ட், பீசாகட், நிசான், கொண்டா, யமாகா, சொனி, நஷனல், பியூஜி, கொடெக், மைக்ரோ சொவ்ற், எவரெடி, ரொயோட்டா, அமெரிக்கன், எக்ஸ்பிரஸ்வங்கி, சிற்றி பாங்க், ஐபி, எம்.

### (2) பொருளாதார ஒருங்கமைப்புக்களின் தோற்றம்:-

பிராந்தியரீதியாக நாடுகள் குழுக்களாக ஒன்றிணைவதன் மூலம் உற்பத்தி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் தனிப்பட்ட நாடுகளின் எல்லைகள் நிராகரிக்கப்படுகின்றன. இது உலகமயமாதல் நடவடிக்கைக்கு இட்டுச் செல்கின்றது. இவ்வொருங்கிணைப்புக்களுக்கு உதாரணம்:- SAARC, EC, NAFTA, ASEAN.

மோ.வசந்தன் (2001)
க. மகேன் (2002)
*வர்த்தகப்பிரிவு*

**(3) நவீன தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்:-**

இத்தொழில் நுட்பக் கண்டுபிடிப்புக்கள் விரைவான தொடர்பாடல் குறைந்த செலவிலான போக்குவரத்து, கணனிமயப்படுத்தல், சர்வதேச வலைப்பின்னல் முறை என்பவற்றுக்கு வழிவகுத்தன. இவற்றின் மூலம் உலக மயமாதல் சாத்தியமாகியது.

(4) குறைவிருத்தி நாடுகளில் அரசின் தலையீடுகள் குறைந்தமை குறிப்பாக வர்த்தகம், முதலீடு ஆகியவற்றில் அரசின் தலையீடுகள் குறைந்ததால் அவை உலக நாடுகளுடன் இணைந்து கொள்கின்றன. இது உலக மயமாக்கலிற்கு இட்டுச் செல்கின்றது.

(5) சர்வதேச நாணயநிதியம், உலகவங்கி, உலக வர்த்தக அமைப்பு (WTO) போன்ற அமைப்புக்களின் செயற்பாடுகள் குறைவிருத்தி நாடுகளை உலகமயமாக்கலுக்குள் உள்வாங்குகின்றன. இத்தகைய அமைப்புக்களால் குறைவிருத்தி நாடுகள் மீது மேற்கொள்ளப்படும் அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டம் உள்நாட்டுப் பொருளாதாரங்களை உலக பொருளாதாரங்களுடன் இணைத்து விடுகின்றன.

**குறைவிருத்தி நாடுகளில் உலகமயமாக்கலின் பாதிப்பு:**

இலங்கை போன்ற பல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் நிறுபாட்டி வைக்க முடியாத உலகமயமாக்கல் செய்முறையில் தவிர்க்கமுடியாமல் இணைந்து வருகின்றன. இதனால் இத்தகைய நாடுகளின் வர்த்தகம், முதலீடு, தொழிநுட்பம் என்பன உலக பொருளாதாரங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் பல்தேசியக் கம்பனிகளின் ஆதிக்கம் இத்தகைய நாடுகளில் ஊடுருவிப் போயுள்ளன. இது தேசிய பொருளாதாரங்களின் உள்ளார்ந்த விரிவாக்கத்திற்குத் தடையாக இருக்கின்றது. அதனால் பல்வேறு சமூக பொருளாதார சவால்களுக்கும் முகம் கொடுக்கவேண்டியுள்ளது.

**உலக மயமாதலின் பயன்கள்**

(1)பெருமளவு முதலீடுகளையும், தொழில் நுட்ப வசதிகளையும் பெற்றுக்கொள்ளலாம். இதனால் குறைவிருத்தி நாடுகளின் மூலதனபற்றாக்குறை தொழில்நுட்ப பிரச்சினை ஓரளவுக்குத் தணிகின்றன.

(2)நுகர்வு வசதிகளை அதிகரிப்பதன் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைகிறது.

(3) வறுமையைத் தணித்துள்ளது.

(4)உள்நாட்டு உற்பத்தியின் தரம் சர்வதேச தரங்கட்கு ஏற்ப உயர்ந்துள்ளது.

(5)சந்தை வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

(6)பல்தேசியக் கம்பனிகளினூடாக வருகின்ற முதலீடுகள் தொழிநுட்ப மாற்றங்களை ஏற்படுத்தி விடுகின்றது.

**உலகமயமாதலின் சவால்கள்**

(1)உலக சந்தையில் தங்கியிருக்கும் தன்மையை ஏற்படுத்தி விடுகின்றன. அதன் பலவீனங்கள் அதிகரிக்கின்றன.

(2)பல்தேசியக் கம்பனிகள் உள்நாட்டுப்பொருளாதார நடவடிக்கைகள்மீது ஆதிக்கம் செலுத்துகின்றன.

(3)குறைவிருத்தி நாடுகள் உலகமயமாதலில் சேர்ந்து இயங்குவதும் பிரச்சினையாக உள்ளது. விலகி இயங்குவதும் பிரச்சினையாக உள்ளது.

(4)உலக மயமாக்கபட்ட புதிய வறுமை ஏற்பட்டுள்ளது.

(5)குறைந்த தரமுடைய தொழிநுட்ப உற்பத்தியாளர் உலக சந்தையை அடைவது மிகவும் கடினமாகும்.

---

உசாவியவை:-

பசுபதி சிவநாதன்
தலைவர், பொருளியல் துறை
யாழ்பல்கலைக்கழகம்
" **உலகமயமாக்கலும் குறைவிருத்தி நாடுகளும்**"
இன்றைய உலகு.

S.H.M. நவ்பல்
"**பொருளாதார உலகமயமாக்கல்** "
24-07-21998 தினக்குரல்
வார வித்தியாரம்

# நுகர்வோன் சமனிலை


பண்டங்களின் விலை, நுகர்வோன் வருமானம், பண்டங்களை நுகருவதனாற் பெறக்கூடிய பயன் என்பவை தரப்பட்ட நிலையில் நுகர்வோன் தனது கொள்வனவினூடாக உச்சப்பயன்பாட்டை அல்லது உச்சத்திருப்தியைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலை நுகர்வோன் சமனிலை எனப்படும். இதனை வரைப் படத்தினூடாக வெளிப்படுத்துகின்ற பொழுது சமபயன் கோடும் வரவு செலவுத்திட்டக் கோடும் தொட்டுச் செல்லும் புள்ளியில் நுகர்வோன் சமனிலை எய்தப்படும்.

### சமபயன்கோடு:

இரண்டு பொருட்கள் தரப்பட்ட நிலையில் வேறுபட்ட சேர்க்கையான அளவுகளை அவற்றில் கொள்வனவு செய்கின்ற பொழுதும் ஒவ்வொரு சேர்க்கையிலும் கிடைக்கின்ற பயன்களின் அளவானது ஒரே அளவாக இருக்கும் இதனால் இது சமபயனாகும். இவ்விரு பொருட் சேர்க்கைகளையும் இணைத்து வரையப்படுகின்ற கோடு சமபயன்கோடு ஆகும்.

### வரவு செலவுத்திட்டக் கோடு:

வருமானம், பண்டங்களின் விலை என்பன தரப்பட்ட நிலையில் வீட்டுத்துறை தமது வருமானத்தைப் பயன்படுத்தி அப்பண்டங்களில் கொள்வனவு செய்யக் கூடிய வேறுபட்டசேர்க்கைகளைப் புலப்படுத்தும் கோடு வரவுச்செலவுத்திட்டக்கோடு ஆகும்.




* புள்ளி E யில் நுகர்வோன் சமனிலை எய்தப்படுகின்றது.

### விலை விளைவு

விலை விளைவு என்பது குறித்த பொருளொன்றின் விலை மாற்றமடையும் போது அம்மாற்றத்தின் காரணமாக பொருட்கொள்வனவில் ஏற்படும் மாற்றத்தினைக் குறிப்பிடும். இத்தகைய விலை விளைவினை விளக்குகின்ற பொழுது நுகர்வோன் வருமானம், ஏனைய பண்டத்தின் விலை போன்றன. மாற்றமடைவதில்லை என எடுகோள் கொள்ளப்படுகின்றது. இவ்விலை விளைவானது பின்வரும் இரு எண்ணக் கருக்களையும் உள்ளடக்கியதாகும்.

1). பதிலீட்டு விளைவு
2). வருமான விளைவு

### பதிலீட்டு விளைவு

பதிலீட்டு விளைவு என்பது நுகர்வோன் கொள்வனவு செய்கின்ற ஒன்றுக்கொன்று பதிலீடான பொருட்களின் விலைகளில் மாற்றம் ஏற்படுகின்ற போது அவற்றின் கொள்வனவு அலகுகளிலும் மாற்றங்கள் ஏற்படுவதாகும். பண்டமொன்றின் விலை வீழ்ச்சியடைந்தால் ஒப்பீட்டு ரீதியில் அப்பண்டம் மலிவாக இருக்க அதன் கேள்வித் தொகை அதிகரிக்கும். குறித்த பண்டம் ஏனைய பண்டத்திற்குப் பதிலாக கொள்வனவு செய்யப்படு மாயின் அதனை பதிலீட்டு விளைவு என்பர். இதனால் இப்பெறுமதியானது எப்பொழுதும் நேர்க்கணியமானதாகவே இருக்கும்.

### வருமான விளைவு

குறித்த பண்டத்தின் விலையில் ஏற்படும் மாற்றம் வருமானத்தின் மீதும் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது. மெய்வருமானமானது பணவருமானங்களினால் மாத்திரமல்லாது நுகர்வுப்பண்டங்களின் விலையினாலும் தீர்மானிக்கப்படுவதால் வருமானவிளைவு, ஏற்படுகின்றது. குறித்த பொருளின் விலையானது

ச. கேசவன் ~ ஜெ. சுகந்தன்
தரம் - 13 (2001)

குறைவடைகின்ற பொழுது மெய்வருமானமட்டம் உயர்வடைந்து குறித்த பொருளை மேலதிகமாகக் கொள்வனவு செய்யத்தூண்டும் விரும்பினால் மேலதிக வருமானத்தைப் பயன்படுத்தி மற்றைய பண்டத்தினையும் கொள்வனவு செய்ய முடியும். இதனால் இதன் பெறுமதியானது நேர்க்கணிய மானதாகவோ எதிர்கணியமானதாகவோ காணப்படுகின்றது.

### பண்டங்களின் வகைப்படுத்தல்

விலை வீழ்ச்சியடைவதன் மூலம் பெறப்படும் மேலதிக வருமானத்தை அடிப்படையாகக் கொண்டே பொருட்கள் வகைப்படுத்தப்படுகின்றன. அவை

1. சாதாரண பண்டம்
2. இழிவுப்பண்டம்
3. கி∴பன் பண்டம்

### சாதாரண பண்டம்

விலை குறைவதனால் மேலதிக வருமானம் அதிகரிக்க கொள்வனவும் அதிகரிக்கும் இங்கு வருமானம் கூட கொள்வனவும் கூடுவதனால் இது சாதாரண பொருள் எனப்படுகின்றது. இங்கு பதிலீட்டு விளைவு, வருமான விளைவு என்பன நேர்க்கணியப் பெறுமதி யினைக் கொண்டிருப்பதனால் தேறிய விலைவிளைவும் நேர்க்கணியமானதாக இருக்கும்.

### இழிவுப்பண்டம்

விலை குறைய வருமானம் அதிகரிப்பினும் கொள்வனவுத் தொகை குறையும். இதனால் வருமானவிளைவு எதிர்க்கணியமாகும். எனினும் பதிலீட்டு விளைவில் காணப்படும். நேர்க்கணியம் எதிர்க்கணிய வருமான விளைவை விஞ்சுவதால் தேறிய விலைவிளைவு நேர்க்கணியமாக இருக்கும்.

### கி∴பன் பண்டம்

விலை குறைய வருமானம் அதிகரிப்பினும் கொள்வனவுத்தொகை குறையும் இதனால் வருமான விளைவு எதிர்க்கணியமாகும். இது பதிலீட்டு விளைவில் காணப்படும் நேர்க்கணியப் பெறுமதியையும் விஞ்சுவதால் தேறிய விலைவிளைவு எதிர்க்கணியமாகவே இருக்கும். ஆதலால் பெரியளவிலான எதிர்க்கணிய வருமான விளைவினைக் கொண்ட அதியுயர் இழிவுப் பொருட்கள் மட்டும் கி∴பன் பண்டமாக அமைகின்றது.

உசாவியவை.

Modern Economic Theory
Micro Macro Analysis
K.K. Dewatt & A. CHAND.

*இன்று செய்யக் கூடியதை நாளைக்கென்று ஒத்தி வைக்காதே. இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறாயோ அதைப் பற்றி மட்டுமே நினைக்க வேண்டும்.* - சைரஸ்

*சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கையை உயர்த்தும் இரண்டு கருவிகள்.*

- ஜோர்ஜ் ஹெர்பெட்

# NATIONAL INCOME

National income is the money value of all final goods and services produced by a particular country in a particular period of time (usually one year).

The size of national income of a country is very important. Because it influences the level of employment, the level of output and people's standard of living. Usually an increase in national income will lead to more jobes, more out put (income) and a better standard of living.

In Sri Lanka, national income is calculated by the central bank. Department of census and statistics also calculates the national income in Sri Lanka.

***MEASUREMENT OF NATIONAL INCOME***

There are three methods to calculate the national income. They are

1. Output method.
2. Income method and
3. Expenditure method.

In Sri Lanka, the central bank calculates following ways.

1. Output method and
2. Expenditure method.

***OUTPUT METHOD***

This method approaches national income from the output side according to this method, economy is divided in to different sector such as agriculture, industry and service sector. Then the national income is found out by adding up all final goods and services produced by every sector. The following table shows the out put method calculation.

| | | |
|---|---|---|
| Agriculture. forestry and fishing | | 25000.00 |
| Mining and Quarring | 4000 | |
| Manufacturing | 12000 | |
| Construction | 9000 | 25000.00 |
| Electricity, gas,water and sanitary services. | 1000 | |
| Whole sale and Retail trade | 21000 | |
| Transport, Storage and Communication | 12000 | |
| Banking, Insurance and realestates | 6000 | |
| Ownership of dwellings | 4000 | |
| Public administration and defence | 4000 | |
| Other services. | 2000 | 50000.00 |
| Gross Domestic Product | | 100000.00 |
| (+) Net Factor Income From abroad | | - 3000.00 |
| Gross National Product. | | 97000.00 |

M.LOGASINGAM B.B.A.(Hons) Dip in Ed

*NET FACTOR INCOME FROM ABROAD*

Domestic people may invest in foreign countries. These people are entitled to receive interest, profit and dividends from abroad. These incomes are called " Factor income receiving from abroad". Similarly the foreign investors can invest in local enterprises. Foreign investors are entitled to receive interest, profit and dividends from that country. These incomes are called "Factor income sending to abroad". The difference between factor income receiving from abroad and factor income sending to abroad is"net factor income from abroad'. It will either be positive value or negative value.

*GROSS DOMESTIC PRODUCT.*

Gross domestic product is the money value of all final goods and services produced in a political boundary of a country in a particular period of time. It is produced in political boundary of a country but it is produced by both domestic factor and foreign factors.

*GROSS NATIONAL PRODUCT.*

Gross national product is the money value of all final goods and services produced by a particular country in a particular period of time. It is produced in both political and out of political boundry but it is produced by only the domestic factor.

*NET NATIONAL PRODUCT*

Factors of productions (Land, Labour, Capital and Enterprise.) are necessary to produce the goods and services. When the goods and services are produced the capital assets may be depreciated. When charges for depreciation are deducted from the gross national product we get net national product. There fore **gross national product-depreciation = Net national product.**

*DOUBLE COUNTING PROBLEM*

When we evaluate the national income of a country, all goods and services produced in any period must be counted once. Some time that may be counted more than once. It is called the Double counting problem. Most of the time the output of a firm becomes the input of other firm. This activity leads to the double counting problem.This problem is avoided by using the following methods

1. Value added method and
2. Final product method.

*VALUE ADDED METHOD*

Manufacture of a commodity has many stages. Values created at each stages are called value added. There fore each firm's value added is the value of its output minus the value of inputs that it purchases from other firms.

*FINAL PRODUCT METHOD*

Final goods are produced for final use. It is not used for futher processing. It includes value of inter mediate goods. So we should take only the final product to calculate the national income.

Inter mediate products are used as inputs into a further stages of Production. There fore it is included in final product. so we should not take the value of intermediate products to calculate the national income.If we add up the value of the inter mediate products there must be a double counting problem.

*NATIONAL INCOME AT CURRENT PRICE AND NATIONAL INCOME AT CONSTANT PRICE.*

When we express the national income of a country during a particular year in terms of current prices, it is known as the

national income at current price. This estimation includes the effect of two changes.

1. Change in units of output.
2. Change in price level.

When we express the national income of a country during a particular year in terms of base year prices, it is known as the national income at constant price. This estimation does not include the change in price level. So the national income at constant price include the effect of change in units of output only. There fore, it is called Real national income

### *NATIONAL PRODUCT AT MARKET PRICE, AND NATIONAL PRODUCT AT FACTOR COST PRICE.*

When we evaluate the national product of a country at market price,it is known as national product at market price. There fore it includes the indirect taxes and Subsidies.

When we evaluate the national product of a country at factor cost price, it is known as National product at factor cost. Factor cost means the sum of all incomes earned by the resources suppliers (rent, wages, interest and profit) It does not include the indirect texes and subsidies.

### *INCOME METHOD*

This method approaches national income from the distribution side. According to this method national income is calculated by adding up the rent of land, wages of employees, interest on capital and profit of entrepreneurs. The following table shows the income method calculation.

| | |
|---|---|
| Rent | 15000 Rs |
| wages | 45000 Rs |
| interest | 18000 Rs |
| Gross profit | 22000 Rs |
| Gross Domestic income | 100000 Rs |
| (+) Net Factor income from abroad | - 3000 Rs |
| Gross national income | 97000 Rs |

### *FACTOR INCOME AND TRANSFER INCOME*

Factor incomes include rent, wages, interest and profits which are received by using the factors of production in manufacturing activities. So this income leads to the production. There fore factor income is included in national income calculation

Transfer income is not currently earned. So it is not involving in current production activities. So the transfer income should not be included in national income calculation eg. Old age pension.

### *PERSONAL INCOME*

Personal income is the sum of all incomes received by the house holds of a country from all sources. So the personal income includes both factor income and transfer income. National income does not include the transfer income. So we calculate the personal income in the following ways from the national income.

| | | |
|---|---|---|
| Gross national income | | 97000 Rs |
| (-) Depreciation | | 4000 Rs |
| Net National income | | 93000 Rs |
| (-) Social Security fund | 2000 | |
| Corporate income tax | 1000 | |
| Government property income | 7000 | |
| Undistributed profit | 2000 | 12000 |
| | | 81000 |
| (+) Transfer income for individuals | | 6000 |
| Personal income | | 87000 Rs |

### *DISPOSABLE INCOME*

Disposable income which is used consumption and savings by the individuals of a country is called disposable income. There fore disposable income can either be consumed or saved.

### *EXPENDITURE METHOD*

According to this method, National income is fonud out by adding up all expenditure on final goods and services produced by the particular country in a particular period of time. These expenditures include both consumption expenditure and investment expenditure. The following table shows the expenditure method calculation.

| | |
|---|---|
| Private consumption | 60000Rs |
| Government Consumption | 20000Rs |
| Gross Domestic fixed Capital formation | 25000Rs |
| Changes in stock | 4000Rs |
| Gross domestic expenditure | 109000Rs |
| (+) exports of goods and non factor services | 6000 |
| | 115000 |
| (`-) imports of goods and non factor services | 15000 |
| expenditure on gross demostic product | 100000 |
| (+) Net factor income from abroad | -3000 |
| Expenditure on gross national product | 97000Rs |

### *EXPENDITURES*

Expenditure are done by an economy is divided into two divisions. They are.

1. Expenditure on goods and services.
2. Transfer payment

### *EXPENDITURE ON GOODS AND SERVICES*

This Category of Expenditure is made on goods and services. There fore it leads to production. This category of expenditure is further divided into two division. They are

1. Expenditure on final goods and services
2. Expenditure on intermediate goods and services.

Expenditure on final goods and servies only is included in national income calculation. But the Expenditure on intermediate goods and services is not included in national income calculation because this includes in Expenditure on final goods and services.

### *TRANSFER PAYMENT.*

Transfer payments are not included in national income calculation, because they are not made in return for any contribution to current output. For example old age pension.

### *PRIVATE CONSUMPTION AND GOVERNMENT CONSUMPTION.*

Individuals of a country spend on consumable goods and service to fulfil their day to day needs. This kind of expenditure is called private consumption .

The central government and local authorities spend on consumable goods and services to provide their day to day service. This kind of expenditure is called government consumption

There fore, we should add up the private consumption and government consumption to findout the total consumption expenditure of a country.

### *GROSS DOMESTIC FIXED CAPITAL FORMATION*

Private sector and government sector spend on investment goods and services. It is called gross domestic fixed capital formation. It includes the following items.

1. Planting, Replanting and land develop ment.
2. Building and other construction
3. Plants and mechinery.
4. Transport equipment
5. Other capita! goods.

### *CHANGES IN STOCK.*

The difference between opening stock and closing stock of private and public enterprises are called changes in stock. It is a part of the gross domestic capital formation.

### *USES OF NATIONAL INCOME STATISTICS*

1. National income statistics help us to know the economic growth rate an increase in total output of an economy is called economic growth. So the real national income helps to measure the growth rate.

2. National income estimates show the contribution made by the various sectors of the economy, such as agriculture, industry and service sector. These sectoral performance reveal the structure and strucural changes of economy.

3. National product estimates help us to know the total resources available as well as total resource utilization. Total resources available will be equal to the total resource utilization.

Total resource available.

i. Gross domestic product

ii. imports of goods and non factor service.

Total resource utilization.

i. Consumption

II. Gross domestic capital formation

III. Exports of goods and non factor servies.

4. National income estimates show the income received by every factor owners in national income. Factor owners may be property income owner or personal income owner. rent, interest, and profits are property income. wages are personal income.

5. We can compare the developmental level of a country with another country or within country by using national product estimates.

6. National product estimates are valuable instrument to analyze the past performance of the economy and it's help to form the future plan.

### *DIFFICULTIES IN THE MEASUREMENT OF NATIONAL INCOME*

i. Non monetised transection such as the services of house wives to the members of their families does not include in the national income calculation. It is an error, because if a man work as servant in a house for the house wife we must pay the wages to the servant. This wages is included in national income calculation. So the services of house wives to the members of their family must be included in national income calculation.


2. Illegal productions are not included in national income measurementation. It is also error. because factors of production are used to the illegal production.

3. It is not desirable to include the expenditure on defence. because today most of countries of world spend more money in defence but they leads to physical or moral ruin.

4. External effects such as pollution, environmental damages are not included in national income calculation it is an anthor error.
5. The error of double counting is another obstacles
6. Statistical errors are affected to the national income measurementation.

***THE CIRCULAR FLOW OF INCOME***

We define the circular flow of income as the flow of payments and receipts for the factor services and for currently produced and output passing between firms and house holds. These explain the following diagram




According to the above diagram factor services are sold by the house holds to firms. This is shown by the left broken line. This leads to a flow of income from firms to house holds. This is shown by the left solid line.

Goods and services are sold by the firms to house holds. This is shown by the right broken line. This leads to a flow of payment from house holds to firms. We can get the following results from the above diagram.

1 National income can be calculated in three ways
Right broken line - output method
Right solid line - expenditure method
left soild line - income method

2. National income calculated by three ways will be same amount.

If we get the above results the following assumptions are necessary to explain the circular flow of income.

1. There are two sectors in the economy. One is house holds and another one is firms. House holds are owners of the factors of production. They earn income by providing the factor services to firms. They spend this income by buying goods and services from firms.

Firms are producers. They produce the goods and services by using the factor services which are bought from house holds. They sell goods and services to house holds. Only the one firm is in the economy.

2. We assume the spend thrift economy
(no savings)
3. There is no goverment intervention
(No taxes and no subsidies)

4. No export and no import because we assume the closed economy.

---

References:

1. கற்றல் கற்பித்தல் வழிகாட்டி G.C.E. A/L பொருளியல் வழிகாட்டி I (N.I.E.)
2. Macro Economics - Sankaran
3. Introduction to possitive economics - R. G. Lipsey
4. Review of the economy central bank of Sri Lanka
6. Economic theory micro and macro analysis - K.K.Dewatt, A. Chand
7. Modern economics - J. Harvey

---

*In First, you find the peace in your mind*
*Then we find the peace in the world*

# ROLE OF GOVERNMENT IN THE ECONOMY

There are many reasons for the Government to intervene in the economy. The following reasons are important:-

1) To maintain the macro economic stability
2) To reduce the economic inequalities
3) To regularize the market system or private sector.
4) To promote economic growth and dcvelopment
5) Providing public goods
6) Providing the social welfare sevices
7) Providing the infrastructure facilities

## *TO MAINTAIN THE MACRO ECONOMIC STABILITY*

Economic instability will lead to less investment. Less investment leads to less economic growth and development. So the governments intervene in the economy to maitain the economic stability. The stability means the following matters.

i. To maintain a relativity stable price level.
ii. To maintain a Satisfactory balance of payments position at a fixed rate of exchange
iii. To sustain a high rate of growth
iv. To maintain a low and stable level of unemployment.

The Governments have many policies to achieve the above targets. The followings are the policies and its instruments.

i. *Monetary policies*
a) Bank rate
b) The statutory reserve ratio
c) Open market operations
d) Direct controls
e) Moral suasion

ii. *Fiscal policy*
a) Taxes
b) Public expenditure
c) Public debt

iii. *International trade policies*
a) Customs duties
b) Exchange rate

## *TO REDUCE THE ECONOMIC INEQUALITIES*

An extreme inequalities of income and wealth of house holds are socially unjust because it splits the whole society into two warring camps-the rich and the poor. The rich exploit the poor,and also it creates inequalities of opportunities for education, health and

**THEVKI ANANTHARAJ**
*ECON SPECIAL*
*FINAL YEAR*
*UNIVERSITY OF JAFFNA.*

The followings are some ways for the reduction of inequalities of income and wealth of house holds.

1) Government levies the progressive taxation on higher income and wealthy groups.
2)Government provides the relief such as *samurdhi* to the poor people.
3) The ceiling on property laws are passed by the Government. eg: land reforms act, ceiling on housing property law.
4) Government implements the develop ment programmes on behalf of poor people.
5) Minimum wages are fixed by the Government to protect the poor labour.

### *TO REGULARIZE THE MARKET SYSTEM OR PRIVATE SECTOR*

In order to get the national benifit, the Government regularize and guides the private sector. though the capitalist country, the Government controls some private firms. Such as monopoly market. Monopolists use their monopoly power to exploit the consumer. The Government tries to control and regulate monopolies in order to remove the above evils and make them function in public interest. eg: Price controls
Quality controls
Environmental protect laws.

### *TO PROMOTE ECONOMIC GROWTH AND DEVELOPMENT*

Economic growth means growth of national income of the Country. It implies an increaase in the national product of a country. But the increase in national product must be maintained for a long time. It signifies the sustained increase in the national product of a country. The Government can upgrade the economic growth through the following ways.

i. Promote the savings and investment. For this purpose the government gives rebates and tax concessions and credit facilities at low and reasonable rate.
ii. Providing the economic infrastructure facilities.
eg: Eleclricity ,Roads, Rail tracks, irrigations.
iii. Allocate the funds to the human development. These allocations make the working population healthy, efficient and responsible
iv. In order to induce the private investors, the govrnments maintain the economic stability and as wel as the political stability.

### *PROVIDING PUBLIC GOODS*

Public goods are consumed with out price. (free of charge) Market system cannot compel payment for a public good. Since there is no way to prevent a person who refuces to pay for the goods from receiving its services. Thus private profit seeking firms will fail to produce public goods. So the government should provide the public goods. For this purpose the government can collect the money from the people as taxes.

### *PROVIDING SOCIAL WELFARE SERVICES*

The governments have to intervene in the economy to provide some

social welfare goods such as education and health. These goods are provided by the market system but the poor people may be unable to pay. Thus poorer members of the society cannot consume the essential goods. So the government provides these goods on the basis of individual need and ability rather than on the basis of want and ability to pay.

### *PROVIDING THE INFRA-STRUCTURE FACILITIES*

Economic infrastructure such as roads, rail roads, harbour, irrigation and communications are necessary to facilitate the production activities. These facilities have to be provided by the government because it confers positive externalities. Private sector can also provide economic infra structure facilitles when they covcr cost from its profit.

The following benifits emphasize the importance of economic infrastructure.

i. It helps to reduce the cost of produc tion

ii. It helps to increase the prodoctivity

iii. It helps to save the time.

iv. It atracts and promotes the private investment.

The above benifits lead to the high rate of economic growth.

### *REFERENCES*

*1.* Economics - Questions & An swers Graham walker

*2.* பொதுப் பொருளாதாரம்
வே. கருணாகரன்

*3.* An Introduction to Possitive eco nomics R. G. Lipsey

*4.* Modern Economic Theory
Micro and macro analysis
K. K. Dewett
A. Chand

Red Time Should be Avoided
Green Time Should be Increased
- *Time manegement*

# கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வு

நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படுகின்ற நிதிக் கூற்றுக்களான வியாபார இலாப நட்டக் கணக்கு ஐந்தொகை போன்றவை நிறுவனத்தின் இலாபத்தன்மை நிதி நிலமை பற்றிய தகவல்களை வெளியிடுகின்றன. எனவே நிறுவனத் தொடர்புபடுகின்ற உரிமையாளர், முகாமையாளர், எதிர்கால முதலீட்டாளர், கடன் கொடுத்தோர் போன்ற பல்வேறு தரப்பினர்களும் இந்நிதிக் கூற்றுக்களில் இருந்து பெறப்படுகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டே தத்தமது தீர்மானங்களை எடுக்கின்றனர். எனினும் இந்நிதிக் கூற்றுக்களில் இருந்து பெறப்படுகின்ற தரவுகளை மட்டும் கொண்டு நாம் பின்வருவன பற்றி உடனடியாகத் தீர்மானிக்க முடியாது. அவையாவன:

(1) நிறுவனம் போதியளவு இலாபத்தை உழைக்கின்றதா?
(2) நிறுவனத்தின் வளங்கள் உரியவாறு பயன்படுத்தப்படுகின்றனவா?
(3) நிறுவனம் தனது பொறுப்புக்களை தீர்க்கக் கூடிய இயலுமையைக் கொண்டுள்ளதா?

எனவே நாம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட விடயங்களை மேலும் ஆய்வு செய்து அதில் காணப்படும் திறன்களையும் திறமையீனங்களையும் கண்டு கொள்ளல் வேண்டும். இந்நடவடிக்கையை "பகுப்பாய்வு செய்தலும் வியாக்கியானம் செய்தலும்" என்பர். இவ்வாறு நிதிக் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்து வியாக்கியானஞ் செய்வதற்கு பின்வரும் நுட்பங்களைக் கையாளலாம்.

(1) கணக்கீட்டு விகிதப் பகுப்பாய்வு
(2) பொதுவான அளவீட்டு நிதியறிக்கைகள்
(3) ஒப்பீட்டு ரீதியான நிதியறிக்கைகள்
(4) காசுப் பாய்ச்சல் கூற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்றும்

### கணக்கீட்டு விகிதம்

இடைநிலைத் தொடர்புகள் கொண்டுள்ள இரண்டு கணக்கீட்டுத் தரவுகளுக்கிடையிலான தொடர்புத் தன்மையை கணித ரீதியாக சமர்ப்பித்தல் கணக்கீட்டு விகிதம் எனப்படும். நிறுவனத்தின் இலாபத்தன்மை, நிதிநிலமை, செயற்பாட்டுத்திறன் போன்ற பல்வேறு அம்சங்களையும் கணக்கீட்டு விகிதங்களைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்தல் கணக்கீட்டு விகிதப்பகுப்பாய்வு எனப்படும்.

இக்கணக்கீட்டு விகிதத்தினை பின்வரும் மூன்று வடிவங்களில் தயாரித்து சமர்ப்பிக்கலாம்
1) பின்ன வடிவம்
2) வீத வடிவம்
3) விகித வடிவம்

நிறுவனம் ஒன்றின் இலாபத்தன்மை நிதிநிலமை தொடர்பாக சிறந்த தீர்மானங்களை எடுப்பதற்கு கணக்கீட்டு விகிதங்களின் கணிப்பீடு அவசியமாகும். எனினும் கணித்துக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு விகிதங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நிறுவனம் பற்றி சிறந்த முடிவுகளை எடுக்க முடியாது. எனவே கணித்துக் கொள்ளப்பட்ட விகிதங்களை வேறு விகிதங்களுடன் ஒப்பீடு செய்வதன் மூலமே சிறந்த முடிவுகள் எடுக்கப்பட முடியும். இவ்வாறு வேறு விகிதங்களுடன் ஒப்பீடு செய்வதற்கு பின்வரும் முறைகள் கையாளப்படலாம்.

(1) கணிக்கப்பட்ட விகிதங்களை வேறு நிறுவனங்களின் விகிதங்களுடன் ஒப்பிடல்
(2) கணிக்கப்பட்ட விகிதங்களை குறித்த நிறுவனத்தின் கடந்த கால விகிதங்களுடன் ஒப்பிடல்
(3) கணிக்கப்பட்ட விகிதங்களை நியம விகிதங்களுடன் ஒப்பிடல்
(4) கணிக்கப்பட்ட விகிதங்களுடன் குறித்த நிறுவனத்தின் ஏனைய திணைக்களங்களின் விகிதங்களுடன் ஒப்பிடல்

**ஜெ.ஜெயசதீஸ்**
*2001 - வர்த்தகம்*

### கணக்கீட்டு விகிதங்களின் அனுகூலங்கள்

1) நிறுவனத்தின் இலாபத்தன்மையையும் வினைத்திறனையும் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.
2) பெருந் தொகையான புள்ளிவிபரங்களைப் பொழிப்பாக்கி வழங்கக் கூடிய திறனையும் அவற்றை எளிதாக சமர்ப்பிக்கக் கூடிய திறனையும் பெற்றுக் கொள்ளல்
3) தகவற் தொடர்பாடலை வினைத்திறனாக மேற்கொள்ள உதவுதல்.
4) தனிப்புள்ளி விபரங்களை மாத்திரம் எடுத்துக் கொள்வதால் ஏற்படக் கூடிய பிழையான வழிகாட்டுதலை நீக்கிக் கொள்ளக்கூடிய திறன் ஏற்படல்.
5) கடந்த ஆண்டுகளுடன் அல்லது வேறு நிறுவனங்களுடன் ஒப்பீடுகளை இலகுவாக மேற் கொள்ள முடிதல்
6) நிறுவனத்தின் போக்கைப் பற்றி இலகுவாக கருத்துரை வழங்க முடிதல்
7) தீர்மானங்களை எளிதாகவும் விரைவாகவும் எடுக்க முடிதல்
8) எதிர்கால திட்டங்களை மேற்கொள்வதற்காகப் பயன்படுத்தக் கூடிய திறன் ஏற்படல்

### கணக்கீட்டு விகிதங்களின் வகைகள்

பல்வேறு பட்ட தரப்பினர்களின் பயன்பாட்டுக்காக கணக்கீட்டு விகிதங்கள் கணித்துக் கொள்ளப்படுவதால் அவற்றைப் பல்வேறு விதமாக வகைப்படுத்தலாம். நிதிக்கூற்றுக்களை வியாக்கியானம் கூறி நிறுவனம் சம்மந்தமான முடிவுகளை எடுப்பதற்காக கணக்கீட்டு விகிதங்களைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கொள்ளமுடியும்.

(1)திரவத் தன்மை விகிதங்கள்
- அ) நடைமுறை விகிதம்
- ஆ) திரவ விகிதம்

(2) இலாபத் தன்மை விகிதங்கள்
- அ) மொத்தலாப வீதம்
- ஆ)தேறியலாப வீதம்
- இ) உபயோகித்த மூலதனத்தின் மீதான வருவாய்வீதம்
- ஈ) மொத்தச் சொத்துக்கள்மீதான வருவாய்வீதம்
- உ) உரிமை மூலதனத்தின் மீதான வருவாய் வீதம்

(3) செயற்பாட்டு விகிதங்கள்
- அ) இருப்பு புரள்வு விகிதம்
- ஆ) கடன்பட்டோர் புரள்வு விகிதம்
- இ) சராசரி கடன் சேகரிப்புக் காலம்
- ஈ) மொத்த சொத்துப் புரள்வு விகிதம்
- உ)நிலையான சொத்துப் புரள்வு விகிதம்

(4) முதலீட்டு விகிதங்கள்
- அ) பங்கு ஒன்றுக்கான உழைப்பு
- ஆ)பங்கு ஒன்றுக்கான பங்குலாபம்
- இ) உழைப்பு விளைவு விகிதம்
- ஈ) பங்குலாப விளைவு விகிதம்
- உ) விலை உழைப்பு விகிதம்
- ஊ) வட்டிக்காப்பு விகிதம்
- எ) பங்கு லாபக்காப்பு விகிதம்

(5) இணைப்பு விகிதம்

***நடப்பு விகிதம் அல்லது தொழிப்படு மூலதன விகிதம்***

நிறுவனத்தின் குறுங்கால கடன் செலுத்தும் ஆற்றலை வெளிப்படுத்துவதற்காகக் கணிக்கப்படுகின்ற விகிதம் இதுவாகும். அதாவது நிறுவனம் தனது நடைமுறைச் சொத்துக்களைக் கொண்டு நடப்புப் பொறுப்புக்களைத் தீர்க்கக் கூடிய இயலுமை கொண்டுள்ளதா என்பதனை இவ்விகிதத்தினைக்கணிப்பீடுவதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

***இந்நடைமுறை விகிதத்தைப் பின்வருமாறு கணிப்பிடலாம்***

நடைமுறை விகிதம்= நடைமுறைச் சொத்து : நடைமுறைப் பொறுப்பு

அல்லது

$$\text{நடைமுறை விகிதம்} = \frac{\text{நடைமுறைப் பொறுப்பு}}{\text{நடைமுறைச் சொத்து}}$$

இவ்விகிதத்தின் சிறப்பு விகிதம் 2:1 ஆக அமையும் அதாவது 2பங்கு நடப்புச் சொத்துக்களுக்கு நடப்புப் பொறுப்பு ஒரு பங்காக அமைதல் வேண்டும்.

திரவ விகிதம்/ விரைவு விகிதம்/அமிலப்பரிசோதனை விகிதம்/ உரைகல் சோதனைவிகிதம்

இதுவும் நிறுவனத்தின் குறுங்காலக் கடன் தீர்க்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதற்காக கணிப்பிடப்படுகின்ற விகிதமாகும். அதாவது நிறுவனம் தனது திரவச் சொத்துக்களைக் கொண்டு நடைமுறைப் பொறுப்புக்களை தீர்க்கக் கூடிய

இயலுமையைக் கொண்டள்ளதா என்பதை அறிவதற்கு இவ்விகிதம் கணிப்பீடப்படுகிறது.

இவ்விகிதத்தைப் பின்வரும் சமன்பாடின்மூலம் கணிப்பீடு செய்யலாம்.
திரவ விகிதம் = திரவச் சொத்து : நடைமுறைப்பொறுப்பு
அல்லது

$$\text{திரவ விகிதம்} = \frac{\text{நடைமுறைப் பொறுப்பு}}{\text{திரவச் சொத்து}}$$

திரவச் சொத்து = நடைமுறைச் சொத்து –(இருப்பு + செலவு முற்பணம்)

இத்திரவ விகிதத்தின் சிறப்பு விகிதம் 1:1 ஆக அமைதல் வேண்டும். அதாவது நிறுவனம் தனது நடைமுறைப் பொறுப்புக்களைத் தீர்க்கக்கூடியளவுக்கு திரவச் சொத்துக்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதாகும்.

### மொத்தலாப வீதம் / இலாப எல்லை

நிறுவனத்தின் விற்பனையில் உள்ளடக்கப் பட்ட இலாபத்தின் அளவை மதிப்பீடு செய்வதற்காக கணிப்பிடப்படுகின்ற விகிதம் மொத்தலாப வீதம் எனப்படும். இதனை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடப்படும்.

$$\text{மொத்தலாப வீதம்} = \frac{\text{மொத்தலாபம்}}{\text{விற்பனை}} \times 100$$

மொத்தவீதம் கணிப்பானது பின்வரும் காரணங்களுக்கான அனுகூலமாக காணப் படுகின்றது.

(1) நிறுவனத்தின் செயற்பாட்டுத் திறனை அறியலாம்
(2) முகாமைத்துவத்தின் திறனை அறியலாம்
(3) விலையீடற் கொள்கையை வெளிப்படத்தலாம்
(4) விற்பனைப் பொருட்களின் கிரயத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
(5) கடந்த காலங்களுடன் ஒப்பீடுகளை மேற்கொள்ளல்

பின்வருவனவற்றை மேற் கொள்வதன் மூலம் இம் மொத்தலாப வீதத்தை அதிகரிக்கலாம்
(1) உயர்ந்த விற்பனை விலையை தீர்மானித்தல்
(2) விற்பனைப் பொருட்களின் கிரயத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல்
(3) மேற் கூறிய இரண்டு நடவடிக்கைகளையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ளல்

### தேறிய இலாப வீதம்

நிறுவனத்தின் இலாபத்தன்மையையும் செயற்பாடுகளின் வினைத்திறணையும் அளவிடுவதற்கு உதவும் விகிதம் தேறிய லாப வீதமாகும்.

$$\text{தேறிய லாப வீதம்} = \frac{\text{தேறியலாபம்}}{\text{விற்பனை}} \times 100$$

இவ்விகிதத்தினை கணிப்பதற்கு பொதுவாக தேறிய லாபம் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் வரிக்குப் பின்னரான தேறிய இலாபமும் பயன்படுத்தப் படலாம். நிறுவனத்தின் மொத்தலாப வீதமானது மாறாது இருக்கின்றபோது தேறியலாப வீதமானது குறைவடையுமாயின் நிறுவனத்தின் செயற்பாட்டுச் செலவுகள் அதிகரித்து செயற்பாட்டு நடவடிக்கைகளின் வினைத்திறன் குறைவடைந்து செல்வதாக தீர்மானிக்கலாம்.

*முதலீட்டுக்கான வருவாய்வீதம் /உபயோகித்த மூலதனத்தின் மீதான வருவாய் வீதம்*

நிறுவனத்தில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனத்திற்கு உழைக்கப்பட்ட இலாபத்தின் அளவை மதிப்பீடு செய்வதற்காக கணிப்பிடப்படகின்ற விகிதம் இதுவாகும். இங்கு ஈடுபடுத்தப்பட்ட மொத்த மூலதனம் என்பது உரிமை மூலதனத்தையும் கடன் மூலதனத்தையும் குறிக்கும். இதனை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடப்படடம்.

$$\text{உபயோகித்த மூலதனத்தின் மீதானவருவாய் வீதம்} = \frac{\text{வரிக்குப்பின் தேறியலாபம் + கடன்வட்டி}}{\text{உபயோகித்த மொத்த மூலதனம்}} \times 100$$

*மொத்தச் சொத்துக்கள் மீதான வருவாய் வீதம்*

நிறுவனத்தில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த சொத்துக்களுக்கு உழைக்கப்பட்ட இலாபத்தின் அளவை மதிப்பீடு செய்வதற்காக கணிப்பிடப்படுகின்ற விகிதம் இதுவாகும்.இங்கு மொத்த சொத்துக்கள் என்பது நிலையான சொத்துக்களையும் நடைமுறைச் சொத்துக்களையும் கூட்டி கற்பனைச் சொத்தக்களை கழித்த பின் பெறப்படும் தொகையாகும். இச் சொத்துக்களினுள் நன்மதிப்பினை சேர்ப்பதோ அல்லது தவிர்ப்பதோ ஏற்றுக் கொள்ளக் கூடியது. இவ் விகிதத்தினை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடலாம்.

$$\text{மொத்தச்சொத்து மீதான வருவாய்} = \frac{\text{வரிக்குப்பின் தேறியலாபம் + கடன்வட்டி}}{\text{மொத்த சொத்துக்கள்}} \times 100$$

*தேறிய சொத்துக்கள் மீதான வருவாய்வீதம்*

$$\text{தேறிய சொத்துக்கள் மீதான வருவாய்} = \frac{\text{வரிக்குப்பின் தேறியஇலாபம் + கடன்வட்டி}}{\text{தேறியசொத்துக்கள்}} \times 100$$

குறிப்பு:-
தேறிய சொத்துக்கள் = மொத்தசொத்துக்கள் - நடைமுறைப்பொறுப்புக்கள்

*உடமையாளர் உரிமை மீதான திரும்பல் வீதம்*

உடமையாளரது உரிமை மூலதனத்திற்கு உழைக்கப்பட்ட இலாபத்தின் அளவை மதிப்பீடு செய்வதற்காக கணிப்பிடப்படுகின்ற விகிதம் இதுவாகும். இங்கு உரிமை முதல் என்பது சாதாரண பங்கு மூலதனத்தையும் ஒதுக்கங்களையும் கூட்டிப் பெறப்படும் தொகையாகும். முன்னுரிமைப் பங்கு மூலதனமானது கடன் மூலதனமாகவே கருதப்படும். இவ் விகிதத்தினை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடலாம்.

$$\text{உடமையாளர் உரிமை மீதானதிரும்பல்வீதம்} = \frac{\text{வரிக்குப்பின் தே.இலாபம் - முன்னுரிமைபங்குலாபம்} \times 100}{\text{உரிமைமூலதனம்}}$$

இங்கு உரிமை மூலதனத்துடன் உரிமையாளர்களுக்கான இலாபத்தை தொடர்பு படுத்துவதற்காகவே வரிக்குப் பின் இலாபத்திலிருந்து முன்னுரிமைப்பங்கு இலாபம் கழிக்கப்பட்டு உரிமையாளர்களுக்கான இலாபம் பெறப்படுகின்றது.

### இருப்புப் புரள்வு விகிதம்

நிறுவனத்தின் வியாபார இருப்புக்கள் விற்பனையாக மாறக் கூடிய வேகம் இவ்விகிதத்தின் மூலம் கணிப்பிடப்படுகின்றது. இவ்விகிதத்தினை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடலாம்.

$$\text{இருப்புப்புரள்வு விகிதம்} = \frac{\text{விற்பனைக்கிரயம்}}{\text{சராசரிக்கையிருப்பு}}$$

இங்கு சராசரி கையிருப்பானது ஆரம்ப இருப்பினையும் இறுதியிருப்பினையும் கூட்டி 2 ஆல் வகுப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளப்படும். விற்பனைக்கிரயம் தரப்படாத சந்தர்ப்பத்தில் விற்பனையை சராசரிக் கையிருப்பினால் வகுப்பதன் மூலம் கணிப்பிடப்படும் சராசரிக் கையிருப்பினை கணிக்க முடியாத போது இறுதி இருப்பு மாத்திரம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

### கடன் பட்டோர் புரள்வு விகிதம்

குறித்த காலத்தினுள் கடன் பட்டோர் எத்தனை தடவைகள் பணமாக மாற்றம் பெறுகின்றனர் என்பதைக் காட்டும் விகிதம் இதுவாகும். இதனை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடலாம்.

$$\text{கடன்பட்டோர்புரள்வு வீதம்} = \frac{\text{கடன் விற்பனை}}{\text{சராசரிகடன்பட்டோர்}}$$

### சராசரி கடன் சேகரிப்பு காலம்

கடன் பட்டோரிடமிருந்து பணத்தைப் பெறுவதற்கு சராசரியாக எடுக்கும் காலத்தினை மதிப்பிடுவதற்காக கணிப்பிடப்படுகின்ற விகிதம் இதுவாகும்.

$$\text{சராசரிகடன் சேகரிப்புகாலம்} = \frac{\text{சராசரிக்கடன்பட்டோர்}}{\text{கடன் விற்பனை}} \times \text{காலம்(12மாதம் or 365 நாட்கள்)}$$

### மொத்த சொத்துப் புரள்வு விகிதம்

நிறுவனத்தின் மொத்தச் சொத்துக்களுக்கும் விற்பனைக்குமான தொடர்பை மதிப்பீடு செய்வதற்காக கணிப்பிடப்படுகின்ற விகிதம் இதுவாகும். அதாவது நிறுவனத்தின் சொத்துக்கள் எத்தனை தடவைகள் விற்பனையாக மாற்றமடைந்துள்ளன என்பது இவ் விகிதத்தின் மூலம் கணிப்பிடப்படும்.

$$\text{மொத்த சொத்து புரள்வு விகிதம்} = \frac{\text{விற்பனை}}{\text{மொத்த சொத்து}}$$

### நிலையான சொத்துப் புரள்வு விகிதம்

நிறுவனத்தின் நிலையான சொத்துக்களும் விற்பனைக்கும் இடையிலான தொடர்பினை மதிப்பீடு செய்வதற்காக கணிப்பிடப்டுகின்ற விகிதம் இதுவாகும்.

$$\text{நிலையான சொத்துப் புரள்வு விகிதம்} = \frac{\text{விற்பனை}}{\text{நிலையான சொத்து}}$$

### பங்கு ஒன்றுக்கான உழைப்பு

ஒரு சாதாரண பங்குக்குரிய மொத்த உழைப்பினை கணிப்பீடு செய்வதற்கான விகிதம் இதுவாகும். வரிக்குப்பின் தேறிய இலாபத்திலிருந்து முன்னுரிமைப் பங்குலாபத்தை கழிக்க வருகின்ற லாபம் முழுவதும் சாதாரண பங்குதாரர்க்கு உரியதாகும். இதனை சாதாரண பங்குகளின் எண்ணிக்கையால் பிரிப்பதன் மூலம் பங்கு ஒன்றிற்கான உழைப்பு கணிப்பிடப்படும்.

பங்கு ஒன்றுக்கான உழைப்பு = $\frac{\text{வரிக்குப்பின்இலாபம் - முன்னுரிமைபங்குலாபம்}}{\text{சாதாரண பங்குகளின் எண்ணிக்கை}}$

### பங்கு ஒன்றுக்கான பங்குலாபம்

ஒரு சாதாரண பங்குக்கு வழங்கப்பட்ட பங்குலாபத்தின் அளவை மதிப்பீடு செய்வதற்காக கணிப்பிடப்படுகின்ற விகிதம் இதுவாகும்.

பங்கு ஒன்றுக்கான பங்குலாபம் = $\frac{\text{வழங்கப்பட்ட சாதாரணபங்கு லாபம்}}{\text{சாதாரண பங்கு எண்ணிக்கை}}$

பங்கு ஒன்றுக்கான பங்கு இலாபம் பங்கு ஒன்றுக்கான உழைப்பு ஆகிய விகிதங்கள் இக் கம்பனியில் முதலீடு செய்வதா இல்லையா என்ற தீர்மானத்தை மேற்கொள்வதற்கு முக்கியமானதாகும்.

### உழைப்பு விளைவு விகிதம்

பங்கு ஒன்றிக்கான உழைப்பினை சந்தை விலையில் மதிப்பீடு செய்வதற்காக கணிப்பிடப்டுகின்ற விகிதம் இதுவாகும்.

உழைப்பு விளைவு விகிதம் = $\frac{\text{பங்கு ஒன்றின் உழைப்பு}}{\text{பங்குகடன் ஒன்றின் சந்தைவிலை}} \times 100$

### பங்கு இலாப விளைவு விகிதம்

பங்கு ஒன்றிற்கான பங்கு இலாபத்தினை பங்கு ஒன்றிற்கான சந்தை விலையில் மதிப்பீடு செய்வதற்காக கணிப்பிடப்படுகின்ற விகிதம் இதுவாகும்.

பங்கு இலாப விளைவு விகிதம் = $\frac{\text{பங்கு ஒன்றிற்கான பங்குலாபம்}}{\text{பங்கு ஒன்றின் சந்தை விலை}} \times 100$

### விலை உழைப்பு விகிதம்

பங்கு ஒன்றிற்கான சந்தைவிலையில் அதன் உழைப்பு எத்தனை மடங்குகள் உள்ளடக்குகின்றது என்பதைக் கணிப்பிடுவதற்கான விகிதம் இதுவாகும்.

விலை உழைப்பு விகிதம் = $\frac{\text{சந்தைவிலை}}{\text{பங்குஒன்றிற்கான உழைப்பு}}$

### இணைப்பு விகிதம்

நிறுவனத்தில் ஈடுபடுத்தப்பட்ட உரிமை முதலுக்கும் கடன் முதலுக்கும் இடையிலான விகிதத்தை விளக்கும் விகிதம் இதுவாகும்.

இணைப்பு விகிதம் = உரிமை முதல் : கடன் முதல்

இங்கு உரிமை முதல் என்பது சாதாரண பங்கு மூலதனத்தையும் ஒதுக்கத்தையும் கருத கடன் முதல் என்பது நீண்டகாலப் பொறுப்புக்களையும் முன்னுரிமைப் பங்கு மூலதனத்தையும் கருதும். அவ் இணைப்பு விகிதமானது. உயர்வாக காணப்படுகின்ற போது கடன் கொடுத்தோர் பாதுகாப்பு உயர்வாக காணப்படும்.

உதாரணம்:-

வரையறுத்த ஜெனா கம்பனியின் ஏடுகளில் இருந்து 31.3.2001 ல் பின்வரும் நிதிக் கூற்றுக்கள் பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| விற்பனை (கடன்) | | 1200,000 |
| (-) விற்பனைக் கிரயம் | | (600,000) |
| மொத்தலாபம் | | 600,000 |
| (-) செலவுகள்:- நிர்வாகம் | 220,000 | |
| - விற்பனை விநியோகம் | 60,000 | |
| - வட்டி | 20,000 | (300,000) |
| தேறியலாபம் | | 300,000 |
| வருமானவரி | | (150,000) |
| வரிக்குப்பின் தேறியலாபம் | | 150,000 |
| பங்குலாபம் - சாதாரண பங்கு | | (80,000) |
| - முன்னுரிமைப் பங்கு | | (40,000) |
| பகிரப்படாத இலாபம் | | 30,000 |

### 31. 3. 2001 இல் ஐந்தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10/= ஆன சாதாரணபங்கு | 500,000 | | நிலையான சொத்து | | |
| 20/= முன்னுரிமைப்பங்கு | 200,000 | கிரயம் | 800,000 | | |
| பங்கு வட்டம் | 25,000 | ஏற்பாடு | (150,00) | 650,000 |
| பொது ஒதுக்கம் | 15,000 | நன்மதிப்பு | | 150,000 |
| இலாப நட்டக் கணக்கு | 60,000 | இருப்பு | 110,000 | 100,000 |
| 10% திபெஞ்சர் | 200,000 | தேறாதஇலாபஏற்பாடு | (10000) | 100,000 |
| கடன் கொடுநர் | 50,000 | கடன் பட்டோர் | | 150,000 |
| வரிஏற்பாடு | 20,000 | செலவு முற்பணம் | | 15,000 |
| பங்குலாப ஏற்பாடு | 30,000 | காசு | | 35,000 |
| | 1100,000 | | | 1100,000 |

வினா - தேர்தரப்பட்ட விகிதங்களை அனைத்தையும் கணிப்பிடுக
(சாதாரண பங்கு ஒன்றின் சந்தை விலை 31.3.2001 ல் 20/= ரூபாவாகும்)

(1) நடைமுறை விகிதம் = நடைமுறைச் சொத்து : நடைமுறைப்பொறுப்பு
= 300,000 : 100,000
= 3 : 1 or 1/3

(2) திரவ விகிதம் = திரவச் சொத்து : நடைமுறைப் பொறுப்பு
= 200,000 : 100,000
= 2 : 1 or 1/2

செய்கை - திரவச் சொத்து = நடைமுறைச் சொத்து - (இருப்பு + முற்பணம்)
= 300,000 - (85000 + 15000)
= 200,000

(3) மொத்தலாப வீதம் $= \frac{\text{மொத்தலாபம்}}{\text{விற்பனை}} \times 100$

$= \frac{600,000}{1200,000} \times 100$

$= 50\%$

(4) தேறியலாப வீதம் $= \frac{\text{தேறியலாபம்}}{\text{விற்பனை}} \times 100$

$= \frac{300,000}{1200,000} \times 100$

$= 25\%$

(5) உபயோகித்தமூலதனத்தின் மீதானவருமானம் $= \frac{\text{வரிக்குப்பின் இலாபம் + கடன்வட்டி}}{\text{உபயோகித்த மொத்தமூலதனம்}} \times 100$

$= \frac{150,000 + 20,000}{1000,000} \times 100$

$= 17\%$

(6) மொத்த சொத்து மீதான வருவாய் $= \frac{\text{வரிக்குப்பின் இலாபம் + கடன்வட்டி}}{\text{மொத்த சொத்து}} \times 100$

$= \frac{150,00 + 20,000}{1100,000} \times 100$

$= 15.4\%$

(7) உரிமையாளர் உரிமை மீதானதிரும்பல் $= \frac{\text{வரிக்குப்பின் லாபம் - முன்னுரிமைபங்குலாபம்}}{\text{உரிமைமுதல்}} \times 100$

$= \frac{150,000 - 40,000}{600,000} \times 100$

$= 18.3\%$

(8) தேறிய சொத்துக்கள் மீதானவருவாய்வீதம் $= \frac{\text{வரிக்குப்பின் லாபம் + கடன் வட்டி}}{\text{தேறிய சொத்து}} \times 100$

$= \frac{150,000 + 20,000}{100,000} \times 100$

$= 17\%$

(9) இருப்பு புரள்வு விகிதம் $= \frac{\text{விற்பனைக் கிரயம்}}{\text{சராசரிக்கையிருப்பு}}$

$= \frac{600,000}{100,000}$

= 6 தடவைகள்

(10) கடன்பட்டோர் புரற்வுவிகிதம் $= \frac{\text{கடன்விற்பனை}}{\text{சராசரிகடன்பட்டோர்}}$

$= \frac{1200,000}{150,000}$

= 8 தடவை

(11) கடன் சேகரிப்புக்காலம் $= \frac{\text{சராசரிகடன் பட்டோர் x காலம்}}{\text{கடன் விற்பனை}}$

$= \frac{150,000 \times 12}{1200,000}$

= 1.5 மாதம்

அல்லது

$\frac{\text{காலம்}}{\text{கடன் பட்டோர் புரள்வு வீதம்}}$

$= \frac{12}{8}$

= 1.5 மாதம்

(13) மொத்த சொத்துப் புரள்வு விகிதம் $= \frac{\text{விற்பனை}}{\text{மொத்தசொத்து}}$

$= \frac{1200,000}{1100,000}$

= 1.09 தடவை

(14) நிலையான சொத்து புரள்வு விகிதம் $= \frac{\text{விற்பனை}}{\text{நிலையான சொத்து}}$

$= \frac{1200,000}{800,000}$

= 1.5 தடவை

(15) பங்கு ஒன்றுக்கான உழைப்பு $= \frac{\text{வரிக்குப்பின்லாபம் - முன்னுரிமைப்பங்குலாபம்}}{\text{சாதாரணபங்கு எண்ணிக்கை}}$

$= \frac{150,000 - 40,000}{50,000}$

$= \frac{90000}{50000}$

= ரூபா 1.80

(16) பங்குஒன்றுக்கான பங்குலாபம் $= \frac{\text{வழங்கப்பட்ட சாதாரயபங்குலாபம்}}{\text{சாதாரணபங்கு எண்ணிக்கை}}$

$= \frac{80,000}{50,000}$

= ரூபா1.60

(17) உழைப்பு விளைவு விகிதம் $= \frac{\text{பங்கொன்றுக்கான உழைப்பு}}{\text{பங்கொன்றில் சந்தைவிலை}} \times 100$

$= \frac{1.8 \times 100}{20}$

= 9%

(18) பங்குலாப விளைவு விகிதம் $= \frac{\text{பங்கு ஒன்றுக்கானபங்குலாபம்}}{\text{பங்குஒன்றின் சந்தைவிலை}} \times 100$

$= \frac{1.60 \times 100}{20}$

= 8%

(19) விலை உழைப்பு விகிதம் $= \frac{\text{சந்தைவிலை}}{\text{பங்கு ஒன்றின் உழைப்பு}}$

$= \frac{20}{1.8}$

= 11 தடவை

(20) இணைப்பு விகிதம் = உரிமைமுதல் : கடன்முதல்

= 600,000 : 400,000

= 1.5 : 1

(21) வட்டிக்காப்பு விகிதம் / வட்டி மீட்பு விகிதம்

ஆண்டுக்கான தேறிய இலாபத்தைப் பயன்படுத்தி எத்தனை தடவை வட்டியை செலுத்த முடியும் என்பதை கணிப்பிடும் விகிதம் இதுவாகும்.

இதனை பின்வருமாறு கணிப்பிடலாம்:

$$\text{வட்டிக்காப்பு விகிதம்} = \frac{\text{வரிக்குப்பின் இலாபம் + கடன்வட்டி}}{\text{கடன்வட்டி}}$$

உதாரணத்தின் படி

$$\text{வட்டிக்காப்பு விகிதம்} = \frac{150{,}000 + 20{,}000}{20{,}000}$$

$= 8.5$ தடவைகள்

(22) பங்குலாப காப்பு விகிதம்:

பங்கு ஒன்றுக்கான உழைப்பைக் கொண்டு எத்தனை தடவை பங்கு ஒன்றுக்கான பங்குலாபத்தை செலுத்த முடியும். என்பதைக் கணிப்பிடும் விகிதம் இதுவாகும். இதனை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிபிடலாம்.

$$\text{பங்புலாப காப்பு விகிதம்} = \frac{\text{பங்கு ஒன்றுக்கான உழைப்பு}}{\text{பங்கு ஒன்றுக்கான பங்குலாபம்}}$$

உதாரணத்திப்படி

$$\text{பங்குலாப காப்பு விகிதம்} = \frac{1.80}{1.60}$$

$= 1.12$ தடவைகள்

Reference:

Management Accounting - T. Lucey

# பாதீடு (BUDGET)

நாம் எத்தகைய ஒரு செயற்பாட்டையும் எதிர் காலத்தில் செய்ய முற்படும்போது நிகழ்காலத்திலேயே அது பற்றிய திட்டம் ஒன்றைத் தயாரித்து செயற்படுத்துகின்றோம். இவ்வாறு அச்செயற்பாடு பற்றி முற்கூட்டியே திட்டம் ஒன்றை தயாரித்து அத்திட்டத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை முற்கூட்டியே இனங்கண்டு அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகளையும் ஆராய்ந்து திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது அச்செயற்பாடானது வெற்றி பெறுவது இலகுவானதாகக் காணப்படும். எனவே இவ்வாறு எதிர்காலத்தில் மேற்கொள்ள இருக்கின்ற செயற்பாடுகள் பற்றி கூட்டியே திட்டமிட்டுக் காட்டும் அறிக்கையை பாதீடு என குறிப்பிடலாம். இப்பாதீடு தயாரித்தலானது அக்காலத்துக்கு முன்பாகவே மேற் கொள்ளப்படும். எனவே நிறுவனங்களின் நோக்கங்களை அடைவதற்கும் பாதீடானது முக்கியமான ஒரு விடயமாகக் காணப்படுகின்றது.

இந்த வகையில் பாதீடு என்பதனை நாம் பின்வருமாறு வரைவிலக்கணப் படுத்தலாம். "நிறுவனத்தின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நிறுவனத்தினால் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ள இருக்கின்ற செயற்பாடுகள் பற்றி அக்காலத்துக்கு முன்பாக தயாரிக்கப்பட்டு அனுமதியளிக்கப்பட்ட அளவு ரீதியானதும் பண ரீதியானதுமான ஒரு திட்டம்" பாதீடு எனலாம். பட்டய முகாமைக் கணக்கறிஞர் நிறுவனம் (CHARTERED INSTITUTION OF MANAGEMENT ACCOUNTING) பாதீடு என்பதனைப் பின்வருமாறு வரையறுக்கின்றது. நிறுவன குறிக்கோளினை அடைந்து கொள்ளும் பொருட்டு குறிப்பிட்ட காலப்பகுதியில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளை அக்காலத்திற்கு முன்னரே நிதி அல்லது கணியவடிவில் தயார் செய்து அங்கீகாரம் செய்யப்பட்ட கூற்று" பாதீடு எனப்படும்.

### பாதீட்டுக் காலம் (Budget Period)

குறிப்பிட்ட செயற்பாட்டுத் திட்டமானது எவ்வளவு காலத்துடன் தொடர்புடையதோ அது பாதீட்டுக் காலம் எனப்படும். பொதுவாக பாதீட்டுக் காலம் ஒரு நிதிவருடமாகவே காணப்படும். எனினும் அது 6மாதம், 3மாதம், 1மாதம், போன்ற பல்வேறு காலப்பகுதிகளாகவும் காணப்படலாம்.

### பாதீட்டுக் குழு (Budget Committee)

பாதீட்டைத் தயாரிப்பதற்கென அமைக்கப்படும் குழு பாதீட்டுக் குழு எனப்படும். பொதுவாக பாதீட்டுக் குழுவில் முகாமையாளர்களும் கணக்காளர்களும் காணப்படுவர். இவர்களே பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தைத் தயார் செய்தல் அதனை மீளாய்வு செய்தல் நடவடிக்கைகளுக்கான கால அட்டவணைகளை நிர்ணயம் செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

### பாதீடு தயாரித்தலின் நன்மைகள் (Advantages of Budget)

(1) எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களை பாதீட்டில் உள்ளடக்க வேண்டி இருப்பதால் பாதீடு தயாரித்தலானது திட்டமிடலுக்கு தூண்டுதலாக அமையும்.

(2) பிரதான பாதீட்டினுடாக நிறுவனத்தின் பல்வேறு திணைக்களங்களின் செயற்பாடுகளும் ஒருங்கிணைக்கப்படுவதால் திணைக்களங் களுக்கிடையிலான முரண்பாடுகள் நீக்கப்படும்

(3) பாதீட்டில் காணப்பட்ட விளைவுகளுடன் உண்மை விளைவுகள் ஒப்பீடு செய்யப்பட்டு வேறுபாடுகள் கண்டறியப்படும். இதன் மூலம் கட்டுப்படுத்தல் நடவடிக்கைக்கு பாதீடு உதவுகின்றது.

(4) எதிர்காலத்தில் மேற்கொள்ள இருக்கும் செய்ற்பாடுகள் திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதால் நிறுவன நோக்கம் இலகுவாக அடையப்படும்.

(5) நிச்சயமற்ற எதிர்கால நிலமைகளை இலகுவாக வெற்றி கொள்ளமுடியும்.

S. மயூரன்
*2002 வர்த்தகம்*

(6) எதிர்கால செயற்பாடுகள் திட்டமிடப்படும்போது அச் செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது ஏற்படக்கூடிய பிரச்சனைகளை முற்கூட்டியே அறிந்து அவற்றுக்கான தீர்வுகளையும் முற்கூட்டியே தீர்மானிக்கலாம்.

### பாதீட்டுக் கட்டுப்பாடு (Budgetary Control)

பாதீடுகள் தயார் செய்யப்பட்டு இடம் பெற்ற உண்மை விளைவுகள் பாதீட்டின் படியான திட்டமிட்ட விளைவுகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அவற்றுக்கிடையிலான முரண்கள் (Variances) கணிப்பிடப்பட்டு அதனை திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் பாதீட்டுக் கட்டுப்பாடு எனப்படும்.

### பாதீட்டின் வகைகள் (Types of Budget)

பாதீடுகளை பொதுவாகப் பின்வருமாறு இரு வகைப்படுத்தலாம்

1) பிரதான பாதீடு (Master budget)
2) செயற்படு பாதீடு (Funtional budget)

பிரதான பாதீடு (Master budget)

நிறுவனத்தின் முழு நடவடிக்கைகளையும் மதிப்பீடு செய்து தயாரிக்கப்படுவது பிரதான பாதீடு எனப்படும். இப்பிரதான பாதீடானது ஏனைய செயற்படு பாதீடுகளை விபரங்களை இணைப்பதன் மூலம் தயாரிக்கப்படும். நிறுவனத்தின் திட்டமிடப்பட்ட இலாபநட்டக்கணக்கு திட்டமிடப்பட்ட ஐந்தொகை என்பனவே பிரதான பாதீடுகளாகும். இது உயர்மட்ட முகாமையால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

### செயற்படு பாதீடு (Funtional budget)

நிறுவனத்தின் ஒவ்வொரு சிறு செயற்பாடுகளுக்குமென தயாரிக்கப்படும் பாதீடு செயற்படு பாதீடு எனப்படும். இந்தவகையில் நிறுவனங்களால் தயாரிக்கப்படும் செயற்படு பாதீடுகளைக் கீழ்வருமாறு நிரற்படுத்தலாம்.

1) மூலப்பொருள் கொள்வனவு பாதீடு
2) நேர்க்கூலி பாதீடு
3) உற்பத்தி மேத்தலைச் செலவுப் பாதீடு
4) நிலைய நிர்வாக செலவுப் பாதீடு
5) விற்பனை விநியோகச் செலவுப் பாதீடு
6) உற்ப்த்திப் பாதீடு
7) விற்பனைப் பாதீடு
8) மூலதனச் செலவுப் பாதீடு
9) காசுப் பாதீடு

### காசுப் பாதீடு (cash Budgct)

குறித்த எதிர்காலம் ஒன்றில் நிறுவனத்தினால் எதிர்பாக்கப்படும் பணப் பெறுவனவுகளையும் எதிர்பாக்கப்படும் பணக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியதாக அக்காலத்துக்கு முன்பாக தயாரிக்கபட்டு அனுமதிக்கப்பட்ட ஒரு அறிக்கை காசுப் பாதீடு எனப்படும்.

எனவே இக்காசுப் பாதீட்டில் எதிர்பாக்கப்படும் காசு உட்பாச்சல்களும், காசு வெளிப்பாய்ச்சல்களும் காட்டப்பட்டிருக்கும் இக்காசுப்பாதீடு ஏனைய செயற்படு பாதீடுகள் தயாரிக்கப்பட்ட பின்னர் அச்செயற்படு பாதீடுகளிலுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றது.

### காசுப்பாதீட்டினால் ஏற்படும் நன்மைகள் (Advantages of cash Budget)

(1)எதிர்பாக்கப்படும் காசுப் பெறுவனவுகளையும் எதிர்பாக்கப்படும் காசுக் கொடுப்பனவுகளையும் அறியலாம்.

(2)எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பணப் பற்றாக்குறையை முற்கூட்டியே திட்டமிட்டுக் கொள்ளவதால் அப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான வழிகளையும் முற்கூட்டியே திட்டமிட்டுக் கொள்ளலாம்.

(3)எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய காசுமிகையை முற்கூட்டியே அறிந்து கொள்வதால் அக்காசு மிகையை எத்தகைய பயன்மிக்க முதலீடுகளில் முதலீடு செய்யலாம் என்பதை முற்கூட்டியே திட்டமிட்டுக் கொள்ளலாம்.

(4) கடன் கொடுப்பனவுகளை அட்டவணைப்படுத்த முடியும்

(5)திரவத்தன்மையைப் பிரச்சனை ஏற்படாத வகையில் நிறுவனத்தைப் பாதுகாக்க முடியும்.

### காசுப்பாதீட்டில் உள்ளடக்கப்படும் விடயங்கள்

காசுப்பாதீடு ஒன்றில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படும்

(1) எதிர்பாக்கப்படும் காசுப் பெறுவனவுகள்

உ+ம்: (1)காசுவிற்பனையும் கடன்பட்டோரிடம் பெற்றகாசும்

(2) ஏனைய வருமானங்கள்
(3) பங்கு தொகுதிக்கடன் வழங்கல்
(4) சொத்து விற்பனைப் பெறுவனவுகள்

(2) எதிர்பாக்கப்படும் காசுக் கொடுப்பனவுகள்
உ+ம் (1) காசுக் கொள்வனவும் காசுக் கொடுப்பனவும்
(2) நிலைய நிர்வாக செலவுகள் செலுத்தியது
(3) விற்பனை விநியோக செலவுகள் செலுத்தியது
(4) நேர்க்கூலிச் செலவுகள் செலுத்தியது
(5) உற்பத்தி மேந்தலைச் செலவுகள் செலுத்தியது
(6) செலுத்திய வருமானவரி பங்குலாபம்
(7) பங்கு கடன் மீட்பு
(8) நிலையானசொத்துக்களின் கொள்வனவுகள்

## காசுப் பாதீட்டின் அமைப்பு

31-3xx ல் முடிந்த பிரபா நிறுவனத்தின் காலாண்டுக்கான காசுப்பாதீடு

| விபரம் | January | February | March |
|---|---|---|---|
| ***எதிர்பாக்கப்படும் பெறுவனவுகள்*** | | | |
| காசு விற்பனை | XX | XX | XX |
| கடன்பட்டோரிடம் பெற்றகாசு | XX | XX | XX |
| ஏனைய வருவுமானம் | XX | XX | XX |
| மொத்தப் பெறுவனவு | XX | XX | XX |
| ***எதிர்பாக்கப்படும் கொடுப்பனவுகள்*** | | | |
| காசுக் கொள்வனவு | XX | XX | XX |
| கடன் கொடுநருக்கு செலுத்தியது | XX | XX | XX |
| நிர்வாக செலவுகள் | XX | XX | XX |
| விற்பனைச் செலவுகள் | XX | XX | XX |
| இயந்திரம் கொள்வனவு | XX | XX | XX |
| மொத்தக் கொடுப்பனவுகள் | XX | XX | XX |
| தேறிய காசு | XX | XX | XX |
| (+) ஆரம்பக்காசு | XX | XX | XX |
| இறுதிக்காசு | XX | XX | XX |

உதாரணம்:-
வரையறுத்த பிரபா கம்பனி 2001 ம் ஆண்டுக்கான பின்வரும் விபரங்களை பாதீடு செய்துள்து.

| | ஜனவரி | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | யூன் |
|---|---|---|---|---|---|---|
| விற்பனை (அலகு) | 18000 | 20000 | 16000 | 14000 | 17000 | 12000 |
| இறுதி இருப்புகு (அலகு) | 4000 | 7500 | 6000 | 5000 | 8500 | 2500 |

மேலதிக தகவல்கள்
(1) அலகிற்கான விற்பனை விலை 40/= ஆகும் விற்பனையில் 50% உடனடியாக பெறப்படுவதுடன் மீதி தொடரும் 2 மாதங்களில் சமனான தொகைகளாகப் பெற்றுக் கொள்ளப்படும்
(2) மார்ச் மாதத்தில் மோட்டார் ஒன்று 25000 க்கு கொள்வனவு செய்யத்திட்ட மிடப்பட்டதுடன் ஏப்ரல் மாதத்தில் 40000 பங்குலாபம் செலுத்தவும் மே மாதத்தில் 42000 வருமானவரி செலுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.
(3) பொருளின் ஒரு அலகினை உற்பத்தி செய்வதற்கு 4kg மூலப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றது. மூலப்பொருட்கள் 1kg 4/= படி கொள்வனவு செய்யப்படுகின்றது. கொள்வனவுக்கான பணம் ஒருமாத கடன் அடிப்படையில் செலுத்தப்படும்.

(4) ஒரு அலகினை உற்பத்தி செய்ய 2 மணித்தியால நேர்க்கூலி சேவை தேவைப்படுகின்றது. ஒரு மணித்தியாலத்துக்கான நேர்க்கூலிக் கொடுப்பனவு 10/= ஆகும். நேர்க்கூலிச் செலவு ஏற்பட்ட மாதத்திலேயே செலுத்தப்படுகின்றது.

(5) அலகுக்கான மாறும் மேந்தலை 1 ரூபா ஏற்பட்ட மாதத்திலேயே செலுத்தப்படும்

(6) குறித்த மாத மூலப்பொருள் இறுதி இருப்பானது அடுத்தமாத உற்பத்தி தேவையின் 25% ஆகும்.

(7) மாதாந்த நிலையான மேந்தலைச் செலவுகள் 15000 ரூபாவுடன் அம்மாத விற்பனைப் பெறுமதியின் 5% ஐ கூட்டவருவதாகும். நிலையான மேந்தலைச் செலவின் 40% அம்மாத பெறுமானத் தேய்வாகும். இது ஏற்பட்ட மாதத்திலேயே செலுத்தப்படுகிறது.

(8) 1.மார்ச் 2001 ல் வங்கிக்கடன் மீதி 60000 ஆகவும் காசுமீதி 20000 ஆகவும் இருந்தது. காசு மீதியானது ஆகக்குறைந்தது மாதத்திற்கு 20000 ரூபா பேணப்படல் வேண்டும். வங்கிக்கடன் வட்டி ஆண்டுக்கு 6% ஆகும். அந்தந்த மாத வட்டியானது அம்மாத தொடக்கத்திலுள்ள கடனில் கணிக்கப்பட்டு அம்மாத இறுதியில் செலுத்தபட்டு அம்மாத இறுதியில் செலுத்தப்படும். வங்கியானது எவ்வளவு கடனையும் தரச் சம்மதித்துள்ளது. தயாரிக்க மார்ச், ஏப்பரல், மே, மாதங்களுக்கான காசுப்பாதீடுகளைத் தயாரிக்க.

| விபரம் | | மார்ச் | ஏப்ரல் | மே |
|---|---|---|---|---|
| பெறுவனவுகள் | | | | |
| கடன்பட்டோரிடம் பெற்றது (1) | | 700,000 | 640,000 | 640,000 |
| கொடுப்பனவுகள் வங்கிக்கடன் வட்டி(7) | | 300 | 140 | - |
| மூலப்பொருள் கொளடவனவு (23) | | 310,000 | 226,000 | 238,000 |
| மோட்டார் கொள்வனவு | | 25,000 | - | - |
| பங்கிலாபம் | | - | 40,000 | - |
| வருமானவரி | | - | - | 42,000 |
| நேர்க்கூலி | (4) | 290,000 | 260,000 | 410,000 |
| மாறும் மேந்தலை | (5) | 14,500 | 13,000 | 20,000 |
| நிலையான மேந்தலை | (6) | 28,200 | 25,800 | 29,400 |
| | | 688,000 | 564,940 | 739,900 |
| தேறிய காசு | | 32,000 | 75,060 | 99,900 |
| (+) ஆரம்பக் காசு | | 20,000 | 20,000 | 67,000 |
| இருக்கக்கூடிய காசு | | 52,000 | 95,060 | 32,840 |
| வங்கிக்கடன் | | (32,000) | (28,000) | 52,840 |
| இறுதிக்காசு | | 20,000 | 67,060 | 20,000 |

செய்கை

(1) *கடன்பட்டோரிடம் பெற்றபணம்*

| விபரம் | மார்ச் | ஏப்ரல் | மே |
|---|---|---|---|
| ஜனவரிமாத விற்பனையிலிருந்து | 180,000 | - | - |
| பெப்ரவரி மாத ,, ,, | 200,000 | 200,000 | - |
| மார்ச்மாத விற்பனையிலிருந்து | 320,000 | 160,000 | 160,000 |
| ஏப்ரல்மாத ,, ,, | - | 280,000 | 140,000 |
| மேமாத ,, ,, | - | - | 340,000 |
| | 700,000 | 640,000 | 640,000 |

(2) உற்பத்தி அலகு கணிப்பு

| | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே |
|---|---|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 4000 | 7500 | 6000 | 5000 |
| உற்பத்தி அலகு | (23500) | (14500) | (13000) | (20000) |
| விற்கத்தயாரான அலகு | 27500 | 22000 | 19000 | 25500 |
| இறுதி இருப்பு | 7500 | 6000 | 5000 | 8500 |
| விற்ற அலகு | 20000 | 16000 | 14000 | 17000 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆகவே மூலப்பொருள் பாவனை | 23500x4kg | 14500x4kg | 13000x4kg | 20500x4kg |
| | 84000kg | 58000kg | 52000kg | 82000kg |
| 1 kg விலை | 4/= | 4/= | 4/= | 4/= |
| ∴மூலப்பொருள்பாவனை | 336000/= | 232000/= | 208000/= | 328000/ |

(3) மூலப்பொருள் கொள்வனவு கணிப்பு

| | பெப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே |
|---|---|---|---|---|
| ஆரம்ப மூலப்பொருள் | 84000 | 58000 | 52000 | |
| மூலப்பொருள்கொள். | (310000) | (226000) | (238000) | |
| உற்பத்தியாரானமூல. | 394000 | 284000 | 290000 | |
| இறுதிமூணலப்பொருள் | (58000) | (52000) | (82000) | |
| பயன்படுத்திமூலப்பொருள் | 336000 | 232000 | 208000 | 328000 |

(4) நேர்க்கூலிச் செலவு

| | | மார்ச் | ஏப்ரல் | மே |
|---|---|---|---|---|
| உற்பத்தி அலகு | | 14500 | 13000 | 20500 |
| 1அலகுக்குநேர்கூலிமணித்தி | 2 | 2 | 2 | |
| நேர்கூலிமணித்தியாலயம் | | 29000 | 26000 | 41000 |
| 1மணிக்கான கூலி | | 10/= | 10/= | 10/= |
| நேர்க்கூலி | | 29000 | 260000 | 410000 |

(5) மாறும் மேந்தலை

| | மார்ச் | ஏப்பரல் | மே |
|---|---|---|---|
| உற்பத்தி அலகு | 14500 | 13000 | 20500 |
| 1அலகுக்குமாறும்மேந்தலை | 1/= | 1/= | 1/= |
| மாறும்மேந்தலை | 14500/= | 13000/= | 20500/= |

(6) நிலையானமேந்தலை

| | மார்ச் | ஏப்பரல் | மே |
|---|---|---|---|
| | 15000+32000 | 15000+28000 | 15000+34000 |
| | 47000 | 43000 | 49000 |
| பெறுமானத்தேய்வு | (18800) | (17200) | (19600) |
| | 282000 | 258000 | 29400 |

(7) வங்கிக்கடன் வட்டி மார்ச் ஏப்பரல் மே

கடன்மீதி $60000 \times {}^{6}/_{100} \times {}^{1}/_{12}$ $28000 \times {}^{6}/_{100} \times {}^{1}/_{12}$

= 300 140


உசாத்துணை (REFERENCE)

**A.W.Willsmore**

*Business Budgets and Budgetary Control*

# விலையிடற் கொள்கை PRICING POLICY

## அறிமுகம் Introduction

ஒரு பொருளைக் கொள்வனவு செய்ய நாம் தீர்மானிக்கும் போது அக்கறை காட்டும் கூறு விலையாகும். அதேபோல சந்தைப்படுத்தல் தொழிற்பாட்டிலும் முக்கியமான கூறாக விலையிடல் காணப்படுகின்றது. பொருட்கள் அல்லது சேவைகளின் பெறுமதியினை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவியே விலை எனப்படும். அதாவது பொருட்கள் சேவைகளை பயன்படுத்தும் போது அதற்காகச் செலுத்தப்படும் பணப்பெறுமதி விலையாகும். விலையானது இடத்திற்கு இடம் சேவைக்கு சேவை வேறு பெயர் கொண்டு அழைக்கப்படுவதனை நாம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

உதாரணம்:

(1) வீட்டில் குடியிருப்பதற்காக செலுத்தப்படும் விலை வாடகை எனவும்

(2) வைத்தியருடைய சேவைக்காக செலுத்தப்படும் விலை கட்டணம் எனவும்

அழைக்கப்டுவதனைக் குறிப்பிடலாம். பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் எந்தவொரு நிறுவனமும் சரியான விலையிடல் கொள்கையைத் தெரிவு செய்து நடைமுறைப்படுத்திக் கொள்வதன் மூலமே தனது நிலையினை சந்தையில் உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

### *விலையிடல் கொள்கையின் நோக்கம்* (Objectives of Pricing Policy)

இலாப நோக்குடைய எந்தவொரு நிறுவனமும் பின்வரும் மூன்று அடிப்படை நோக்கத்தையும் அடைவதில் தமது பிரதான கவனத்தைச் செலுத்தும்.

1) நிறுவனம் தொடர்ந்து நிலைத்திருத்தல்
2) நிறுவனத்தின் தொடர்ச்சியான வளர்ச்சி
3) உச்ச இலாப நோக்கம்

மேற்காட்டிய மூன்று அடிப்படை நோக்கங்களையும் அடைந்து கொள்ளக்கூடியதாக ஒரு சிறந்த விலையிடல் கொள்கையினைத் தீர்மானித்துக்கொள்ளும் போது பின்வரும் காரணிகளில் கவனத்தைச் செலுத்துதல் இன்றியமையாததாகும்.

### i) *போட்டி நிறுவனங்களின் பலம்*

பலமான போட்டியாளர்கள் சந்தையில் காணப்படும் போது அவற்றின் விலையிடல் கொள்கையினைக் கருத்தில் கொண்டு அவற்றின் போட்டியினை சந்தையில் முறியடிக்க கூடிய விதமான விலையிடல் கொள்கையைத் தெரிவு செய்தல் வேண்டும்.

### II) *அரசாங்கத்தின் சட்டவிதிகள்*

அரசு சமூக நலன் கருதி விலையிடலில் தலையீடு செய்கின்றது. தனியார்துறையின் ஈடுபாடு அதிகரிக்க அதிகரிக்க மக்கள் மீது ஏற்படும் சுரண்டலும் அதிகரிக்கின்றது. இச்சுரண்டலில் இருந்து பொது மக்களை பாதுகாப்பதற்காக அரசு கட்டுப்பாட்டு விலையினை நிர்ணயிக்கின்றது. இவ்வாறு கட்டுப்பாட்டு விலைக்கு உட்பட்ட பொருட்களுக்கு விலையினை நிர்ணயிக்கும் போது இக்கட்டுப்பாடு கருத்தில்கொள்ளப்பட வேண்டும்.

### III) *குறிப்பிட்ட பொருட்கள் சேவைகளை நுகருகின்ற மக்களுடைய வாழ்க்கைத்தரம்*

குறிப்பிட்ட பொருட்கள் சேவைகளை நுகருகின்ற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தினைக் கருத்தில் கொண்டே விலை

சோ. கெங்காதரன்
(2002 வர்த்தகம்)

நிர்ணயிக்கப்பட வேண்டும். நுகர்வோருடைய கொள்வனவுச் சக்தி வருமானத்தின் மூலமே நிர்ணயிக்கப்படுகின்றது, எனவே நுகர்வோருடைய வாழ்க்கைத் தரத்தினைக் கருத்தில் கொள்ளாமல் விலையிடப்படின் குறிப்பிட்ட பொருட்கள் சேவைகளைச் சந்தைப்படுத்திக் கொள்வதில் குறிப்பிட்ட நிறுவனம் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். எனவே விலையிடலின் போது குறிப்பிட்ட நுகர்வோருடைய வாழ்க்கைத்தரமும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

### iv) *நாட்டினது பொருளாதார நிலை*

விலையிடல் கொள்கையை தீர்மானிக்கும் போது நாட்டின் பொதுவான பொருளாதார நிலையினையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். ஒரு நிறுவனம் முதன்முதலில் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்கையில் சரியான ஒரு விலையிடல் கொள்கையை நிர்ணயித்துக்கொள்ளல் வேண்டும். பின்பு காலத்திற்கு காலம் விலையில் மாற்றங்களைச் செய்ய வேண்டிய போது இவ்விலையிடல் கொள்கையைக் கருத்தில் கொண்டு விலையினை மீளாய்வு செய்ய முடியும்.

### v) *குறிப்பிட்ட பொருளுக்கு சந்தையில் கேள்வி*

விலை நிர்ணயிக்கப்படும் போது சந்தைக்கேள்வினையும் கருத்தில் கொள்ள வேண்டும். தீர்மானிக்கின்ற விலை வேறுபட்ட கேள்விக்கு இட்டுச் செல்லும். சந்தைப்படுத்தல் இலக்கிலும் வேறுபாடு ஏற்படும். ஆகவே விலை நிர்ணயிக்கப்படும் போது விலைக்கும் கேள்விக்கும் இடையிலான தொடர்பு மிகக் கவனமாக ஆராயப்பட்டு முடிவு எடுக்கப்படல் வேண்டும். அப்போது தான் குறிப்பிட்ட விலையிடல் எதிர்பார்த்த விளைவினை ஏற்படுத்தும்.

### vi) *ஏற்படுகின்ற கிரயம்*

பொருட்களுக்கு விலை குறிக்கும் போது அது தொடர்பாக ஏற்படும் கிரயங்கள் மிக முக்கியமாக மதிப்பீடு செய்யப்பட்டுக் கருத்தில் கொள்ளப்படவேண்டும். அத்துடன் அக்கிரயங்கள் எத்தன்மை வாய்ந்தது என்பதனையும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். அதாவது உற்பத்தி தொடர்பான செலவா, விற்பனை விநியோகச் செலவா அல்லது ஏற்படும் இழப்பீட்டுச் செலவா போன்றன கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## *விலையிடலுக்கான படிமுறைகள்*

சிறந்ததும் பயனுறுதித்தன்மை வாய்ந்ததுமான விலை ஒன்றினைத் தீர்மானித்துக் கொள்வதற்கு பின்வரும் படிமுறைகள் பின்பற்றப்பட வேண்டியது அவசியமாகும்.

### (i) *விலையிடலில் நோக்கத்தினை நிர்ணயித்தல்* (Identifying Pricing Objective)

ஒரு நிறுவனம் தனது பொருள் அல்லது சேவைக்கு விலையினைத் தீர்மானிப்பதற்கு முயலும் போது தனது நோக்கத்தினை மிகத்தெளிவாக வரையறுத்துக்கொள்ளுதல் வேண்டும். எந்தவொரு நிறுவனத்திற்கும் பின்வருவனவற்றில் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டனவோ நோக்கமாக அமையலாம்.

#### (a) *உச்ச இலாபம்*

எல்லா நிறுவனங்களும் விலையிடலின் போது கருத்தில் கொள்வது இலாபமாகும். ஒரு நிறுவனம் நீண்ட காலத்தில் இலாபத்தை உழைத்தல் அல்லது குறுங்காலத்தில் இலாபத்தினை அதிகரித்தல் அல்லது குறிப்பிட்ட வீதத்தினை இலாபமாக உழைத்தல் போன்றவற்றில் ஏதாவது ஒன்றைத் தனது நோக்கமாக கொண்டிருக்கலாம். அனேகமான நிறுவனங்கள் இலாபத்தினை உச்சப்படுத்தும் வகையில் விலையினை நிர்ணயிக்க முற்படுவர். இத்தகைய நோக்கத்தினைக் கொண்ட நிறுவனங்கள் பொருளின் கேள்வி செலவு பற்றிய மதிப்பீட்டினை மேற்கொண்டு அதனடிப்படையில் விலையினை நிர்ணயித்துக் கொள்ளும்.

#### (b) *சந்தைப்பங்கு*

நிறுவனங்கள் சந்தையில் கூடுதலான சந்தைப் பங்கினைக் கொண்டிருத்தல் வேண்டுமென்ற நோக்கத்தினைக் கொண்டிருக்கலாம். இவ்வாறான நோக்கத்தைக் கொண்ட நிறுவனங்கள் போட்டியாளர்களின் விலையிலும் பார்க்க குறைவாக விலையினை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

(c) *சமூகப் பொறுப்பு*

குறிப்பிட்ட நிறுவனம் வாடிக்கையாளனதும் சமூகத்தினதும் நலன்களைப் பேணுவதனைத் தனது நோக்கமாக கொண்டு செயற்படலாம். இந்நிலையில் இலாபம் உழைத்தல் என்ற தனது நிலையினை கைவிட்டு சமூகப் பொறுப்பினை நிறைவேற்றக் கூடியவாறு விலையினைத் தீர்மானித்துக் கொள்ள ஏற்படும் வேறுபாடு காரணமாக விலை பெரிதும் வேறுபட்டால் இதனைப் பெரிதும் கருத்தில் கொள்ள வேண்டும்.

(d) *நிலைத்திருத்தல்*

நிறுவனங்கள் சில சந்தர்ப்பங்களில் இலாபம், சந்தைப்பங்கு, சமூகப் பொறுப்பு போன்ற நோக்கங்களிலும் பார்க்க தொடர்ந்து நிலைத்திருத்தலை முக்கியமாக கொண்டிருக்கும். அவ்வாறான நிறுவனங்கள் அதற்கேற்ப தமது விலையினைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

(ii) ***கேள்வியினை மதிப்பீடு செய்தல்***
(Estimating Demand)

நிறுவனம் விலையிடல் தொடர்பான சரியான நோக்கத்தினை நிர்ணயித்த பின் அடுத்ததாக பொருள் தொடர்பான கேள்வியினை மதிப்பீடு செய்தல் வேண்டும்.

(iii) ***செலவினை மதிப்பீடு செய்தல்***
(Determine Cost)

கேள்வியினை மதிப்பீடு செய்த பின்பு செலவுகளை மதிப்பீடு செய்தல் வேண்டும். விலைக்கும் செலவுக்கும் தொடர்புண்டு என்பதால் செலவுகளை சரியான முறையில் கணிப்பிடல் அவசியமானதாகும். செலவுகளை மொத்தச்செலவு, நிலையான செலவு, மாறும் செலவு என பாகுபடுத்திக் கணிப்பீட்டினை மேற்கொள்ள முடியும்.

(iv) ***போட்டியாளரின் விலையினை ஆராய்தல்***

செலவுகளை மதிப்பீடு செய்த பின்பு போட்டியாளரின் விலையினை ஆராய்தல் வேண்டும். போட்டியாளர் எவ்வெவ் விலையில் பொருட்களை வழங்குகின்றனர் என பார்வையிட்டு அவ்விலைகளுக்கு அண்மித்ததாக தமது விலைகளை நிர்ணயிப்பதே சிறந்ததாகும். எனினும் தரத்தில் ஏற்படும் வேறுபாடு காரணமாக விலை பெரிதும் வேறுபட்டால் இதனைப் பெரிதும் கருத்தில் கொள்ள வேண்டியதில்லை.

(v) ***பொருத்தமான விலையிடல் முறையினைத் தெரிவு செய்தல்***
(Select Appropriate Pricing Method)

போட்டியாளரின் விலையினை ஆராய்ந்த பின்னர் விலையினை நிர்ணயிப்பதற்கு வசதியாக பொருத்தமான விலையிடல் முறையினைத் தெரிவு செய்து கொள்ளுதல் வேண்டும்.

நடைமுறையில் பின்வரும் ஐந்து விலையிடல் முறையினைத் தெரிவு செய்து கொள்ளுதல் வேண்டும்

i) கேள்வியினை அடிப்படையிலான முறைகள்
ii) செலவினை அடிப்படையான முறைகள்
iii) இலாபத்தினை அடிப்படையான முறைகள்
iv) போட்டியினை அடிப்படையான முறைகள்
v) ஏனைய முறை

I) ***கேள்வியினை அடிப்படையிலான விலையிடல் முறை***
(Demand Based Pricing Method)

கேள்வியினை அடிப்படையிலான விலையிடலில் பொருளின் உற்பத்திச் செலவு இலாபம் என்பவற்றினை விட நுகர்வோரின் தெரிவு, சுவை என்பன கூடிய செல்வாக்கினைச் செலுத்துகின்றன. அதாவது ஒரு பொருளுக்கான ஆக்கச்செலவோ, இலாபவீதமோ முக்கியமாகக் கருதப்படாமல் பொருட்களுக்கான எதிர்காலக் கேள்வியை அடிப்படையாகக் கொண்டு விலை நிர்ணயிக்கப்படுவதே இம் முறையாகும். இவ்விலையிடல் முறையில் பின்வரும் நான்கு முறைகள் உள்ளடக்கப்படுகின்றன.

a) ***கௌரவ விலையிடல்*** (Prestige Pricing)

கௌரவ விலையிடல் என்பது தமது அந்தஸ்தினைப் பேணும் அல்லது வெளிப்படுத்த விரும்பும் நுகர்வோர்களை திருப்திப்படுத்தும் பொருட்டு உயர்வான விலையினைப் பொருட்களுக்குக் குறிப்பதனைக் கருதும். பொதுவாக அழகுசாதனப் பொருட்களுக்கான விலையானது அதன் தரத்தை குறிப்பதுடன் தமது அந்தஸ்து, கௌரவம் என்பவற்றையும் குறித்து நிற்பதாக கருதுகின்றனர்.

b) ஊடுருவல் விலையிடல்
(Penetration Pricing)

ஊடுருவல் விலையிடல் என்பது போட்டிச் சந்தை யொன்றில் புதிதாக நுழையும் நிறுவனம் தனது பொருளை நோக்கி வாடிக்கையாளரை கவர்வதற்காக ஏற்கனவே சந்தையில் காணப்படும் பொருட்களின் விலையிலும் பார்க்கக்குறைவான விலையினை குறிப்பதனைக் குறிக்கும். இவ்வாறு சந்தையில் குறைவான விலையினைக் குறிப்பதனூடாக போட்டியாளரின் வாடிக்கையாளரைப் புதிய நிறுவனம் தன்பக்கம் கவரக்கூடியதாக இருக்கும்.

உ) கடைதல் விலையிடல் (Skimming Pricing)

கடைதல் விலையிடல் முறையில் நுகர்வோர் வாழ்க்கைத்தரத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் பல்வேறு சந்தைத் துண்டங்களாக ஆரம்பத்தில் பாகுபடுத்தப்படுவர் பின்னர் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை உடைய சந்தைத் துண்டத்திலுள்ள நுகர்வோரின் கேள்வியினைப் பூர்த்திசெய்யக் கூடிய வகையில் உயர்ந்த விலை நிர்ணயிக்கப்பட்டு பொருள் சந்தைப்படுத்தப்படும். அச்சந்தைத் துண்டத்தில் உள்ளோரின் கேள்வி பூர்த்தி செய்யப்பட்டதும் அடுத்த சந்தைத் துண்டத்தில் உள்ளோரின் கேள்வியினைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் விலை குறைக்கப்படும்.

இவ்வாறான விலையிடல் முறையைப் பின்பற்றும் சந்தைப்படுத்துவோர் தமது சந்தைப்படுத்தும் பொருட்களை அடிக்கடி மாற்றி அமைத்துக் கொண்டிருந்தாலே சந்தைப்படுத்தலில் வெற்றி கொள்ளக்கூடியதாக அமையும்.

d) உளவியல் ரீதியான விலையிடல்
(Psychological Pricing)

நுகர்வோர் உயர்ந்த விலை என்ற உளவியல் ரீதியான தாக்கம் அடைந்து பொருள் தெரிவில் இருந்து விலகுவதனை தடுக்கும் நோக்கில் விலை குறிக்கப்படுவதனையே உளவியல் ரீதியான விலையிடல் எனப்படும்.

உதாரணமாக இலங்கையில் பாட்டா பாதணி நிறுவனம் தனது பாதணிகளுக்கான விலையை இம்முறையிலேயே நிர்ணயிக்கின்றது. ஒரு பாதணியின் விலையை ரூபா 200 என குறிப்பதிலும் பார்க்க ரூபா 199.90 என குறிப்பதால் குறைந்த விலையென்ற உளவியல் ரீதியான தாக்கத்தை நுகர்வோர் மனதில் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். இதன் மூலம் பொருட் தெரிவிற்கு நுகர்வோரைத் தூண்டக் கூடியதாக இருக்கும்.

2) செலவின் அடிப்படையிலான விலையிடல் முறை
(Cost Based Pricing Method)

செலவினை அடிப்படையிலான விலையிடல் முறையில் விலை நிர்ணயிக்கும் போது ஆக்கச் செலவும், சந்தைப்படுத்தல் செலவும் கருத்தில் கொள்ளப்பட்டு விலை நிர்ணயிக்கப்படுகின்றது. இவ்விலையிடல் முறையில் பின்வரும் இரு பிரிவுகள் காணப்படுகின்றன.

a) கொள்விலையுடன் கூட்டி விலையிடல்
(Cost Plus Pricing)

இம்முறையின் பிரகாரம் நிறுவனம் தனது பொருட்களின் ஆக்கச் செலவுடன் எத்தனை வீதத்தினைக் கூட்டி விலையினை நிர்ணயிப்பது என முன்னரே தீர்மானித்துக் கொள்ளும். அதன் பிரகாரம் தனது செலவுடன் தீர்மானிக்கப்பட்ட வீதத்தினையும் சேர்த்து விலையினை நிர்ணயித்துக் கொள்ளும். இம்முறையில் வேறு எக்காரணியும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

உதாரணம்:

X நிறுவனம் தனது ஆக்கச்செலவுடன் 10% த்தினைச் சேர்த்தே விலையினைத் தீர்மானிப்பது என தீர்மானித்துள்ளது. எனக் கொள்வோம். இந்நிறுவனத்தின் குறிப்பிட்ட பொருளின் ஆக்கச் செலவு ரூபா 100/= ஆக அமையின் விலை (100/= x 10% = 10/=) ஆக்கச் செலவுடன் 10% உம் கூட்டப்பட்டு (100 + 10 ) ரூபா 110/= ஆக நிர்ணயிக்கப்படும். இங்கு ஆக்கச் செலவு கூடக்கூட சேர்க்கப்படும் தொகையும் கூடிச் செல்வதனை அவதானிக்கலாம்.

b) செலவினையும் நிலையான தொகையையும் கூட்டி விலையிடல்
(Cost Plus Fixed Fee Pricing)

இவ்விலையிடல் முறையில் ஆக்கச் செலவுடன் எவ்வளவு தொகை கூட்டப்பட்டு விலை நிர்ணயிக்கப்படும் என முன்னரே தீர்மானிக்கப்பட்டு அதனடிப்படையில் விலை நிர்ணயிக்கப்படும்.

உதாரணம்:

X நிறுவனம் தனது ஆக்கச்செலவுடன் ரூபா 30/= ஐ கூட்டி விலையை நிர்ணயிப்பது என தீர்மானித்துள்ளது எனக் கொள்வோம். இந்நிறுவனத்தின் ஆக்கச்செலவு ரூபா 100 ஆக அமையின் விலை (100 + 30)ரூபா 130/= ஆக அமையும். அதேவேளையில் ஆக்கச் செலவு ரூபா 2000/= ஆக அமையின் விலை (2000 + 30) ரூபா 2030/= வாக அமையும். இங்கு ஆக்கச் செலவு கூடக்கூட இலாபவீதம் குறைவடைந்து செல்வதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

3) ***இலாபத்தினை அடிப்படையிலான விலையிடல் முறை***
(Profit Based Pricing Method)

இலாபத்தினை அடிப்படையாக கொண்டு விலையிடல் முறையில் உழைக்கப்பட வேண்டிய இலாப அளவு அல்லது இலாபவீதம் நிர்ணயிக்கப்பட்டு அதனை அடைவதற்கு ஏற்ற முறையில் விலை நிர்ணயிக்கப்படுவதனைக் குறிக்கும். இம்முறையின் கீழ் பின்வரும் இரு பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

a) ***இலக்கு இலாபத்திற்கு விலையிடல்***
(Target Pricing)

இம்முறையின் பிரகாரம் குறிப்பிட்ட நிறுவனம் குறிப்பிட்ட காலத்தில் தான் உழைக்க வேண்டும் எனத் திட்டமிடப்பட்ட இலக்கு இலாபத்தை அடையக்கூடியதாக விலையினை நிர்ணயித்துக் கொள்ளும். இங்கு ஏற்படுகின்ற அனைத்துச் செலவுகளும் இலக்கு இலாபமுமே கருத்தில் கொள்ளப்படுமே யொழிய வேறு காரணிகள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

உதாரணம்:

A நிறுவனம் குளிர்சாதனப் பெட்டிகளை உற்பத்தி செய்கின்றது. இதனது வருடாந்த உற்பத்தி 300 குளிர்சாதனப் பெட்டிகள். இந்நிறுவனம் வருடாந்தம் ரூபா 200,000/= வை *இலாபமாக உழைக்க வேண்டும் என இலக்கினை நிர்ணயித்துள்ளது. இந்நிறுவனத்திற்கான வருடாந்த நிலையானசெலவு 160,000/=. ஒரு குளிர்சாதனப்* பெட்டி உற்பத்திக்கான மாறும் செலவு ரூபா 20,000/= எனின் அதனது விற்பனை விலை பின்வருமாறு கணிப்பிடப்படும்.

மொத்த வருமானம் = மொத்தச் செலவு

தொகைX விலை = நிலையான செலவு + மாறும் செலவு + இலாபம்

200 x விலை= 160000+(20000x300)+200000

= 160000+6000000+200000

300xவிலை = 6360,000

விலை $= \frac{6360000}{300}$

விலை = 21 200/=

ஆகவே ஒரு குளிர்சாதனப் பெட்டிக்கு நிர்ணயிக்க வேண்டிய விலை ரூபா 21200/= வாக அமையும்.

b) ***விற்பனை மீதான வருவாயை இலக்காகக் கொண்ட விலையிடல் முறை***
(Target Return On Sales Pricing)

இம் முறையின் பிரகாரம் விற்பனை விலையில் குறிப்பிட்ட விகிதம் இலாபமாக உழைக்கப்பட வேண்டும் என முன்னரே இலாப இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பின்னர் விற்பனை விலை தீர்மானிப்படுவதை அம் முறை கருதுகின்றது.

**உதாரணம்:**

A நிறுவனத்தின் வருடாந்த விற்பனை 1250 அலகுகள். மேற்படி நிறுவனம் தனது விற்பனை விலையில் 20% ஐ இலாபமாக பெறவேண்டும் என இலக்கினை நிர்ணயித்துள்ளது. இந்நிறுவனத்தின் நிலையான செலவு ரூபா 26000/= அலகிற்கான மாறும் செலவு ரூபா 22/= எனின் அலகிற்கான விற்பனை விலை பின்வருமாறு நிர்ணயிக்கப்படும்.

இங்கு விலை = P ஆக கருதப்படுகிறது
விற்பனை மீதான இலக்கு

$$\text{இலாபவிகிதம்} = \frac{\text{மொத்தவருமானம்} - \text{மொத்தச் செலவு}}{\text{மொத்த வருமானம்}}$$

$$20\% = \frac{1250 \text{ X விலை} - (26000 + 27500)}{1250 \text{ X விலை}}$$

$$0.20 = \frac{1250P - 53500}{1250P}$$

| | |
|---|---|
| 1250 P x 0.20 | = 1250 P - 53500 |
| 250 P | = 1250 P - 53500 |
| 1000 P | = 53500 |
| P | = 53.50 |

எனவே விற்பனை விலையில் 20% த்தினை இலாபமாக உழைக்க வேண்டுமாக இருந்தால் நிர்ணயிக்க வேண்டிய விலை ரூபா 53.50 சதமாகும்.

### 4) போட்டி அடிப்படையிலான விலையிடல் முறை (Competition Based Pricing Method)

போட்டி அடிப்படையிலான விலையிடல் முறையில் விலை நிர்ணயிக்கப்படும் போது இலாபம், உற்பத்திச் செலவு, சந்தைக் கேள்வி என்பன கருத்தில் கொள்ளப்படாது போட்டியாளரின் விலை மாத்திரம் கருத்தில் கொள்ளப்பட்டு விலை நிர்ணயிக்கப்படும்.

இங்கு போட்டியாளரின் விலைக்குச் சமமான விலையோ அல்லது குறைவான விலையோ நிர்ணயிக்கப்படும்.

உதாரணம்:

A என்ற சவக்கார நிறுவனம் அலகிற்கான ஆக்கச் செலவாக ரூபா 10/= வினை மேற்கொண்டு உற்பத்தியினை மேற்கொள்கின்றது. மேற்படி நிறுவனம் சந்தையில் பிரவேசிப்பதற்கு விலையினைத் தீர்மானிக்க உள்ளது. போட்டியாளர்கள் இதையொத்த சவர்க்காரத்தை ரூபா 8/= இற்கே சந்தைப்படுத்துகின்றனர். எனின் சந்தைப்படுத்தலில் வெற்றிகொள்வதற்காக A நிறுவனமும் தனது சவற்காரத்திற்கு ரூபா 8/= ஐ அல்லது அதிலும் குறைவான விலையையே நிர்ணயிக்க வேண்டும்.

இவ் விலையிடல் முறையை போட்டிச் சந்தை ஒன்றில் புதிதாக பிரவேசிக்கும் நிறுவனங்கள் அதிகமாகப் பின்பற்றிக் கொள்ளுகின்றன. போட்டியை அடிப்படையாக கொண்ட விலையிடல் முறையின் கீழேயே ***முத்திரையிடப்பட்ட விலையிடல் முறை*** அமைகின்றது. இம் முத்திரையிடப்பட்ட விலையிடல் முறையில் போட்டியாளர்களால் கோரப்படும் என எதிர்பார்க்கப்படும் விலையை விடக் குறைவான விலையே கோரப்படுகின்றது.

### 5) ஏனைய விலையிடல் முறை (Other Pricing Method)

கேள்வியினை அல்லது செலவினை அல்லது இலாபத்தினை அல்லது போட்டியினை அடிப்படையாகக் கொண்டு விலை நிர்ணயிக்கப்படாது ஈடுபடுத்தப்பட மூலதனம் விரைவாக மீட்டெடுக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்டுவதனை இம்முறை கருதுகின்றது. இவ் விலையிடல் முறையானது ***விரைவு பணமீட்பு உபாய விலையிடல்*** என அழைக்கப்படுகின்றது.

விரைவுபணமீட்பு உபாய விலையிடத் முறை பின்வரும்காரணங்காளோலேயே பின்பற்றப் படுகின்றது.

a) எதிர்கால நிச்சயமற்ற தன்மையினையும், ஆபத்தினையும் தவிர்த்து விரைவாக முதலீட்டினைத் திரும்பப் பெறுவதற்கு
b) வேறு முதலீட்டு திட்டங்களில் முதலீடு செய்ய.
c) குறிப்பிட்ட தொழிலை விருத்தி செய்ய

விரைவு பணமீட்பு உபாய விலையிடலை பின்பற்றி விலை நிர்ணயிக்கப்படும் போது சந்தைப்படுத்தக்கூடிய ஆகக்கூடிய விலையே நிர்ணயிக்கப்படும்.

### 1.3 முடிவுரை

பொதுவாக மேற்குறிப்பிட்ட ஏதாவதொரு முறையைப் பின்பற்றி நிறுவனங்கள் தனது பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையிடல் கொள்கையைத் தீர்மானித்துக் கொள்ளும். எந்தவொரு நிறுவனம் திறனான விலையிடலை மேற்கொள்கின்றதோ அந்நிறுவனமே சந்தையில் திறனாக தொழிற்பட்டு போட்டியினை ஏற்படுத்துகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

1. தே.ஜெயராமன் ~
முகாமைத்துவத்துக்கு ஓர் அறிமுகம்
2 விருட்சம்

# மனித வளத் திட்டமிடல்
## Human Resources Planning

ஆளணி முகாமைக் கருமங்களின் அடிப்படையான தொழிற்பாடாக அமைவதே மனித வளத் திட்டமிடலாகும். நிறுவனமொன்றில் தேவையான மனிதவளத்தினை சரியான அளவில் பெற்றுக் கொள்வதற்காக இடம் பெறும் முதலாவது இணைத்தல் தொழிற்பாடே இதுவாகும். நிறுவனமானது தனது நோக்கினை அடைவதற்கு நிதிவளம், பௌதிக வளம், மனிதவளம், என்பவற்றினை பயன்படுத்த வேண்டியுள்ளது. எனினும் மனிதவளத்தின் தேவையினை நிறுவனங்கள் உணர்ந்து செயற்படுவதில்லை இதன் காரணமாகவே சில நிறுவனங்கள் தமது நோக்கத்தினை அடைவதில் பின்னடைவுத் தன்மையினை கொண்டுள்ளன.

நிறுவனமொன்றின் நோக்கத்தினை அடைவதற்கு சரியான நேரத்தில், சரியான இடத்தில் தேவைப்படும் எண்ணிக்கை கொண்ட ஆட்களை சரியான வகையில் பெற்றுக் கொள்ள முன் உணரப்படும் கருமமே மனிதவளத் திட்டமிடலாகும்.

தேவைக்கு மிகையாகவோ அல்லது பற்றாக்குறையாகவோ மனிதவளமானது காணப்பட்டலாகாது. எப்போதுமே மிகையான மனிதவளமானது தேவையற்ற செலவினை ஏற்படுத்தும். அதேவேளை பற்றாக்குறையான மனிதவளமானது நிறுவனத்தின் இலக்கினை அடைவதில் தடைகளை தோற்றுவிக்கும். எனவேதான் மனிதவளத்தின் உத்தம பயன்பாட்டினை பெற்றுக் கொள்ள மனிதவள திட்டமிடலானது அவசியமானதாக கருதப்பட்டு வருகின்றது.

மேலும் மிகையான மனித வளம் சம்பளச் செலவுகளை அதிகரிப்பது மட்டுமன்றி ஊழியர்களது தேவையற்ற நிலமையின் போது ஊழியர்களைக் குறைத்துக் கொள்வதற்காக ஏற்படுத்திய விலகல் கொடுப்பன வினை அதிகரிக்க வேண்டிய நிலமையினை கொண்டு வரும். எனவே மிகையான மனிதவளமானது தேவையற்ற செலவினத்தினை ஏற்படுத்தும்.

எனவே மனித வளத் திட்டமிடலின் ஊடாக பின்வரும் நோக்கிங்களை நிறுவனங்கள் அடைய வழிவகுக்கின்றன.

1. நிறுவனங்கள் திட்டமிட்ட நோக்கத்தினை அடைவதற்கு பௌதீக வளம் முக்கிய உடையது போன்று மனிதவளம் முக்கிய பெறுகின்றது. இதனூடாக நிறுவனத்தின் உள்ளீட்டை வரையறுத்து கொள்ள முடிகின்றது.

2. ஊழியர்களைச் சேர்த்து அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பயிற்சிகளை திட்டமிட்டு முன்னரே வழங்க உதவுகின்றது.

3. ஊழியர்களது வினைத்திறனை அதிகரித்துக் கொள்ள உதவுக்ன்றது.

த. குமார்
(2002) வர்த்தகம்

4. ஊழியர்களர் வேலையை விட்டு விலகுவதை குறைந்துக் கொள்கிறது.
5. ஊழியர்களது வரவீனங்களை கட்டுப்படுத்த உதவுகின்றது.
6. ஊழியர்கள் உச்ச திருப்தியினை பெற்றுக் கொள்ள உதவுகின்றது.
7) ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய சன்மானக் கொடுப்பனவுகளை முன் கூட்டியே தீர்மானித்துக் கொள்கின்றது.
8) ஒவ்வொரு நிறுவனமும் ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ள ஒரு கொள்கையினை வகுத்துக் கொள்ள உதவுகின்றது.

மனிதவளம் திட்டமிடும் ஆற்றலினை அதிகரிக்கும் அல்லது அபிவிருத்தி செய்யும் நோக்கில் பின்வரும் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு, பயிற்றுதல் நெறிகளை நடத்தமாறு அரசினால் பணிக்கப்பட்டுள்ளது. அவையாவன.

1. National Institute of Business Management (N.I.B.M)
2. Sri Lanka Institute of Development Association (S.L.I.D.A)

### *மனிதவள திட்டமிடல் நுட்பங்கள்*

மனிதவள திட்டமிடலின் போது பின்வரும் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

*01 தொழிற்பகுப்பாய்வு*

நிறுவனதிற்கு எந்த அளவில், எந்த நேரத்தில் ஊழியர்கள் தேவைப்பாடு ஏற்படுகின்றது என்பதனை அளவீடு செய்ய சிறிய நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் நுட்பமே இதுவாகும். இதனூடாக நிறுவனத்துடன் சம்பந்தப்பட்ட எல்லா வேலையினையும் கண்டறிவதோடு, அவற்றினை ஆற்றுவதற்கு தேவையான மொத்த ஊழியர்களது எண்ணிக்கையினையும் மதிப்பிடலாம்.

02) *மனித வரைபடம்*

நிறுவனத்தின் நோக்கத்தினை அடைவதற்கு என்ன வகையான ஊழியர்கள் என்ன அளவில் தேவைப்படுகின்றார்கள் என்பதனை சட்ட வரைபட மூடாக திட்டமிட்டுக் காட்டும் நுட்பமே இதுவாகும். இதுவும் பெருமளவில் சிறிய நிறுவனங்களால் பின்பற்றப்பட்டு வரும் நுட்பமாக காணப்படுகின்றது.

03. *இடம் கணிக்கும் வரைபடம்*

நிறுவனத்தின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு ஒவ்வொரு மட்டங்களிலும் எவ்வளவு ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதனை திட்டமிட்டுக் காட்டும் வரைபடமே இடம் கணிக்கும் வரைபடமாகும் இங்கு அதிகாரப்படிச் சங்கிலி முறைமையானது பின்பற்றப்படுகின்றது. எனவே நிறுவன மொன்றில் ஊழிய வளம் பற்றாக் குறையாகக் காணப்படுவதற்கான காரணங்களாவன:-

1. இளைப்பாறல்
2. பதவி விலகல்
3. பதவி உயர்வு
4. இறந்து போதல்
5. வேலையிலிருந்து நீக்கப்படுதல்

### *மனித வள திட்டமிடல் செய்முறை*
(Human Resurce Planning Process )

நிறுவனத்துக்கு தேவைப்படுகின்ற மனிதவளமானது எவ்வாறு கண்டறியப்பட முடியும் என்பதே மனிதவளத்திட்டமிடல் செயல்முறையாகும். இத்தகைய செயல் முறையுடன் பல நடவடிக்கைகள் சம்பந்தப் பட்டவையாகும்.

அவையாவன.

1. தேவையை முன்னுணர்தல்
2. நிரம்பலை முன்னுணர்தல்

3. வினைத்திறனையும் செலவையும் முன்னுணர்தல்

4. மனித வளத்தைக் கட்டுப்படுத்தல்

இதில் தேவை பற்றிய முன்னுணர்தலும், நிரம்பல் பற்றிய முன்னுணர்தலும் அறிந்து கொள்ளப்பட்டும் அதன் பின்னர் மனித வளத்தினுடைய வினைத்திறனும் அதற்குரிய செலவும் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். இதனைத் தொடர்ந்து திட்டமிடப்பட்ட மனிதவளம் பெறப்பட்டுள்ளதா என்பது உறுதிப்படுத்தப்படும். எனவே ஆளணி முகாமையிலே எல்லாக் கருமங்களுக்கும் அடிப்படையாக மனிதவளத் திட்டமிடலே அமையும். அதாவது ஆட்சேர்த்தலிருந்து அவர்களுக்கான சன்மானக் கொடுப்பனவு வரை மனிதவளத் திட்டமிடலினூடாகவே ஒழுங்குபடுத்தமுடியும். எனவே தான் ஒவ்வொரு நிறுவனமும் மனித வளத்திட்டமிடலுக்கான செய்முறையை ஒழுங்காகப் பின்பற்றி மனித வளத்தை திட்டமிட்டுக் கொள்கின்றன.

### அ). தேவையை முன்னுணர்தல்

மனித வளத்தை திட்டமிடும் செய்முறையில் முதல் நடவடிக்கையாக அமைவது தேவையினை முன்னுணர்தலாகும். அதாவது மனித வளமானது எந்தளவிலும், தரத்திலும் தேவைப்படுவது என்பதனை முன்கூட்டியே தீர்மானித்துக் கொள்ளும் ஓர் செயற்பாடே இதுவாகும். மனித வளக் தேவையினை முன்னுணர்வதற்கு பின்வரும் 3 முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. முகாமை மதிப்பீடு
2. புள்ளிவிபர முறை
3. வேலைப்படிப்பு தொழில்நுட்பம்

### ஆ) நிரம்பலை முன்னுணர்தல்

மனித வளத் திட்டமிடலின் செய்முறையிலே இரண்டாவது படிமுறையாகக் கொள்ளப்படுவதே நிரம்பல் பற்றிய முன்னுணர்தலாகும். எப்போதுமே தேவைக்கேற்றவாறு நிறுவனங்களின் நிரம்பல் அமைவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தேவையிலும் பார்க்க மனித வளத்தின் நிரம்பல் மிகையாகவோ அல்லது பற்றாக்குறையாகவோ இருத்தல் நிறுவனத்தைப் பொறுத்து பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்

நிறுவனங்களிலே மனித வள நிரம்பலை முன்னுணர 5 நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன. அவையாவன:-

1. நடைமுறையிலுள்ள மனித வளத்தின் நிரம்பலைப் பகுப்பாய்வு செய்தல் .
2. ஊழியர் விரயத்திற்கான இழப்பினைக் கண்டு கொள்ளல்.
3. உள்ளார்ந்த பயன்களின் ஊடாக மனித வள நிரம்பலை கண்டு கொள்ளல்.
4. வரவீனங்களால் ஏற்படுகின்ற மனித வள நிரம்பலை கண்டு கொள்ளல்.
5. மனித வளத்தின் வெளி நிரம்பல் காரணிகளைப் பகுப்பாய்வு செய்தல்

### இ).வினைத்திறனையும், செலவையும் முன்னுணர்தல்

மனித வளத்தை திட்டமிடுவதிலே 3வது செய்முறையாக இது கருதப்படுகின்றது. இங்கு மனித வளத்திற்கான மொத்தச் செலவீனம் அவர்களால் ஏற்படக்கூடும் என்ற வினைத்திறனுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். இவ்வொப்பீட்டின் மூலமே மனித வளத்தின் செலவின் அதிகரிப்பை விட வினைத்திறன்களின் அதிகரிப்பு உயர்வாக இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

நிறுவனங்களில் இடம் பெறும் மனிதவளம் சம்பந்தமான செலவுகளுள் முக்கியமான செலவினங்களாவன

1. சன்மானச் செலவு
2. ஆட்சேர்த்தல் செலவு
3. பயிற்றுதல் செலவு
4. மீளமைத்தல் செலவு
5. விலகல் செலவு
6. உதவிச் செலவு
7. ஆளணி நிர்வாகச் செலவு

மேற்கூறிய 7 செலவினங்களையும் கூட்டுவதனால் வருகின்ற மொத்தத் தொகையே மனிதவளச் செலவாகும். இந்த மனிதவள செலவினத்தை அவர்களின் வினைத்திறனுடன் ஒப்பீடு செய்யப்படும்.

அடுத்து வினைத்திறன் என்பது நிறுவனம் ஒன்றிலே குறிப்பிட்டவகையான ஊழியர்களின் உள்ளீடுகளுக்கு நிறுவனத்தில் கிடைக்கின்ற வெளியீடே ஆகும். ஒரு நிறுவனமானது தனது வினைத்திறனை கணிப்பிடுவதற்கு பின்வரும் முறைகளைப் பயன்படுத்தலாம்.

1. ஒரு ஊழியருக்கான வெளியீட்டை கணிப்பிடுதல்.
2. ஒரு ஊழியருக்கான விற்பனைப் பெறுமதியைக் கணிப்பிடல்.
3. ஒரு அலகுக்கான மனித வள கிரயத்தை அளவிடல்.
4. மனித மணித்தியாலத்திற்கான உற்பத்தி.
5. விற்பனைப் பெறுமதிக்கான மனித வளக்கிரயம்.

*ஈ) மனித வளத்தைக் கட்டுப்படுத்தல்*

மனித வளத் திட்டமிடல் செய்முறையிலே இறுதியாக அமைவது இதுவாகும். பொதுவாக திட்டமிடல் ஒரு முன் நோக்கமாகவும், கட்டுப்படுத்தல் ஒரு பின் நோக்கமாகவும் கருதப்படுகின்றது. எனவே தான் மனித வளத் தேவைபற்றியும், நிரம்பல் பற்றியும் முன் உணர்ந்த பின்னர் வினைத்திறனும் செலவும் ஒப்பிட்டு மனித வளத்திற்கான பாதீடு தயாரித்துக் கொள்ளப்படுகின்றது.

மனித வளத்தின் உண்மை நிலைகள் ஒப்பீட்டுப் படுகின்ற வேலைகளில் நடைமுறையிலுள்ள ஊழியர்களுக்கும் அந்நிறுவனத்திற்கு வர ஆயத்தமாக உள்ளோரும் கருத்திற் கொள்ளப்படும். இதனூடாகவே திட்டமிடப்பட்ட மனித வளத்தை விட கூடிய மனித வளம் அந்நிறுவனத்தில் பெறப்படாது இருப்பதனை உறுதிப்படுத்த மனித வளக்கட்டுப்பாடு என்பது அமைகிறது.

உசாத்துணை நூல்கள்
**தே.ஜெயராமன்** ~
முகாமைத்துவத்துக்கு ஓர் அறிமுகம்

---

**"*SMART*" IT SHOULD BE EMPHASIZED IN SCHOOL TEACHING**

**S - SPECIFIC**
**M - MEASURABLE**
**A - ACHIEVABLE**
**R - RELIABLE**
**T - TIME**

# நுகர்வோர் பாதுகாப்பு

உற்பத்தி நோக்கிய சந்தைப்படுத்தல் என்ற கொள்கையானது கடைப்படிக்கப்பட்ட இரண்டாம் உலகமகாயுத்த காலத்திற்கு முன்னரிருந்தே நுகர்வோர் பாதுகாப்பு முக்கியம் பெறலாயிற்று. இதில் உற்பத்தியாளரது விருப்பப்படியே உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் தீர்மானிக்கப்பட்டன. இதன் காரணமாகவே நுகர்வோர் திருப்தியை கருத்தில் கொள்ளாத நிலை அப்போது காணப்பட்டது. இவ்வாறான காலகட்டத்தில் தான் நுகர்வோர் மத்தியில் நுகர்வோர் பாதுகாப்பு தோன்றியது.

நுகர்வோர் பாதுகாப்பு என்பது நுகர்வோர் செலுத்தும் பணத்திற்கு போதியளவு திருப்தியை பெற்றுக் கொடுப்பதனை உறுதிப்படுத்தும் வகையில் எடுக்கப்பட்டுள்ள சட்டரீதியான பாதுகாப்பு ***நுகர்வோர் பாதுகாப்பாகும்.*** இதன்படி நுகர்வோர் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போதும் சேவையைக் கொள்வனவு செய்யும் போதும் உச்ச திருப்தியை அடைந்து கொள்ளமுடியும்.

***சர்வதேச ரீதியில் ஏற்கப்பட்ட நுகர்வோர் உரிமைகள்:***

### 1. *பாதுகாப்பைப் பெறும் உரிமை*

எந்தவொரு பொருளை அல்லது சேவையைப் பயன்படுத்தும் பொழுதும் நுகர்வோரது சுகாதாரத்துக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அதிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை நுகர்வோருக்கு உண்டு.

### 2. *தகவலறியும் உரிமை*

நுகர்வோர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்கள் சேவைகள் தொடர்பான எத்தகைய தகவல்களையும் பெறுகின்ற உரிமை நுகர்வொருக்குண்டு. இதனாலே தான் Labelling கட்டாயமாகும். குறிப்பாக பண்டங்களின் சுற்றுத்துண்டில் உற்பத்தியாளன் பெயர், உற்பத்தி செய்த திகதி, உற்பத்தி செய்த இடம், விலை, அளவு, காலாவதியாகும் திகதி போன்ற விபரங்கள் நுகர்வோர் பெற விரும்பும் தகவல்களாகும்.

### 3. *தெரிவு செய்யும் உரிமை*

சுதந்திரமாக பொருட்களையும் சேவைகளையும் தெரிவு செய்கின்ற உரிமையாகும். எவரது தலையீடும் இன்றி பண்டங்களைத் தேர்ந்தெடுக்க நுகர்வோரால் முடியும்.

### 4. *கவனத்தை ஈர்ப்பதற்கான உரிமை*

நுகர்வோர் தமக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புக்களை உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி அதனூடே நிவாரணம் பெறும் உரிமை நுகர்வோருக்குண்டு. இலங்கையில் உள்நாட்டு வியாபார ஆணையாளர் அல்லது சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுவதனூடே பாதுகாப்பை பெறமுடியும்.

## *நுகர்வோரது கடமைகள்*

சட்டரீதியாகக் குறித்து வைக்கப்பட்டுள்ள நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஒன்றிணைத்தல், செயற்படுத்தல் ஆகியன நுகர்வோர் கடமையாகும்

உ+மாக

1. நியாயமான விலையைச் செலுத்துதல்.
2. பொருட்களின் தரம் பற்றி கவனம்.
3. உடன்பட்டபடி பொருட்களை பொறுப்பேற்றல்.

**வ. ரஜீகரன்**
**(2001) வர்த்தகம்**

4. வர்த்தகரின் மோசடிகள் பற்றி உரிய அதிகாரிக்கு அறிவித்தல்.
5. சந்தை பற்றிய தகவலைச் சேகரித்தல்.
6. நுகர்வோர் பாதுகாப்பு சங்கம் அமைத்தல்

### நுகர்வோர் பாதுகாப்பின் அவசியம்

உலக மயமாக்கல் நடைமுறைக்கு வருவதனால் போட்டி அடிப்படையில் இயங்கும் நிறுவனங்களால் நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்பட முடியும். குறிப்பாக

1. நுகர்வோருக்கு தேவையற்ற / பொருத்தமற்ற உற்பத்திகள் விற்கப்படுதல்.
2. கூடிய விலையில் விற்கப்படுதல்.
3. காலாவதியான பொருட்களையும் தரம் குறைந்த பொருட்களையும் விற்றல்.
4. பொருட்களை பதுக்கலிலும் கலப்படத்திலும் ஈடுபடுத்தல்.
5 அளவைகளிலும் நிறுவைகளிலும் மோசடி இடம் பெறுதல்.
6. கொடுக்கல் வாங்கல்களில் மோசடி இடம் பெறுதல்.
7. நுகர்வோரைப் பயன்படுத்தி / கட்டாயப் படுத்தி வியாபாரங்களை மேற்கொள்ளல்.
8. சூழல் மாசுபடும் நிலைகள் காணப்படுதல்.
9. விற்கப்படும் பொருளுக்கு பற்றுச்சீட்டு வழங்காது விடல்.

### இலங்கையின் நுகர்வோர் பாதகாப்புச் சட்டங்கள்

1. 1946 நிறுத்தல் அளத்தல் சட்டம்.
2. 1956 விற்பனைப் பொருட் சட்டம்.
3. 1974 மெட்ரிக் அளவைச் சட்டம்.
4. 1979 நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்.
5. 1980 உணவுப் பொருட் சட்டம்.
6. 1980 மருத்துப் பொருட் சட்டம்.
7. 1980 போதைப் பொருட் கட்டுப்பாட்டுச் சட்டம்
8. 1981 மோட்டார் வாகனச் சட்டம்.
9. 1982 நுகர்வோர் கடன் சட்டம்.

### நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம்

நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பே இதுவாகும். 1979 ம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இந்த அமைப்பு உருவாக்கப்படும். கிராம சேவையாளர் பிரிவு / பிரதேசசபை / தேர்தல் தொகுதியை மையமாகக் கொண்டு உள்நாட்டு வர்த்தக அணையாளரின் பிரதிநிதி ஒரு கூட்டத்தினை கூட்டுவதன் மூலம் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் அமைக்கப்பட்டது. இதன் தலைவராக கிராம அலுவலர் காணப்படுவார். இதில் உள்ள அங்கத்தவர்களின் இழிவு எண்ணிக்கை 15 ஆகும். இதன் தொழிற்பாடுகளாவன

1. தரக்குறைவான பொருட்களை நுகர்வோர் கொள்வனவு செய்ய வேண்டாமெனக் கேட்டுகொள்ளல்.
2. அங்கத்தவர்களுக்கு பொருள்கள் சேவைகள் பற்றிய தகவல்களை வழங்குதல்.
3. வியாபாரத்தில் இடம் பெறும் முறை கேடுகளை உரிய அதிகாரிகளுக்கு முறையிடல்.
4. போட்டிச் சந்தையில் பொருட்களைத் தெரிவு செய்யத் தேவையான அறிவைப் பெற்றுக் கொடுத்தல்.
5. நுகர்வொருக்கு இருக்கும் இடர்களை நீக்குதல்

### இலங்கையின் நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம் வினைத்திறன் குறைவாக இருப்பதற்கான காரணங்கள்:

1. அரச ஆதரவுடன் உருவாக்கப்பட்டமை.
2. வர்த்தகருக்கும் நுகர்வோருக்கும் இடையில் தனிப்பட்ட தொடர்பு நிலவுதல்.
3. தமக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து முறையிட முன்வராமை.
4. சட்ட திட்டங்கள் பற்றிய போதிய தொழிலின்மை.
5. நுகர்வோரது முறைப்பாடு குறித்து உரிய அதிகாரிகளின் அக்கறையின்மை.

### நுகர்வோர் பாதுகாப்பு நிதியம்

நுகர்வோர் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்ட நிதியம் இதுவாகும். 1979 நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட இந்த நிதியத்திற்கு, பின்வரும் வழிகளில் நிதியீட்டம் செய்யப்படும்.

அ. பாராளுமன்ற நிதி ஒதுக்கீடு
ஆ அன்பளிப்புக்கள்
இ. வியாபாரிகளிடம் குற்றத்திற்காக அறவிடப்படும் அபராதம்

ஈ. வியாபாரிகளிடம் பறிமுதல் செய்யப்படும் பொருட்களிச் பெறுமதியில் 50%

இந்நிதியம் பின்வரும் நோக்கங்களுக்காக பாவிக்கப்பட முடியும்.

1. நுகர்வோர் பாதுகாப்பு சங்கங்களை விருத்தி செய்தல்.
2. நுகர்வோர் கல்வியைப் பெற்றுக் கொடுத்தல்.
3. நுகர்வோருக்கு தகவல் வழங்குதல்.
4. நுகர்வோருக்கான பொது விளம்பரச் செலவை ஏற்றல்.

## *1979 ஆம் ஆண்டு 1ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம்*
## (Consumer Protection Act of 1979)

### *இச் சட்டத்தின் தோற்றம்*

சந்தை விருத்திக் கேற்ப நுகர்வோர்களைப் பாதுகாப்பதற்காகவும், வியாபாரத்தை பன் முகப்படுத்துவதற்காகவும் அக்காலத்தில் வர்த்தக கப்பல் போக்குவரத்து அமைச்சரால் 1979 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் சட்டமாக்கப்பட்டது. இச் சட்டம் அப்போதைய விலைக்கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் இத்திணைக்களம் ***உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம்*** என்ற பெயரைப் பெற்று செயற்படத் தொடங்கியது. இச்சட்டத்தை எமது நாட்டில் செயற்படுத்துவதற்காக ***உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் ஒருவரும், பதில் ஆணையாளர்களும், உதவி ஆணையாளர்களும், பரிசோதர்களும்*** நியமிக்கப்பட்டுள்ளனர். பிரதேச ரீதியாக அரச அதிபர்கள் உதவி வர்த்தக ஆணையாளர்களாக செயற்படுகின்றார். இவர்களைத் தவிர உதவி ஆணையாளர் ஒருவரும், பரிசோதகர்களும் இணைந்து செயற்பட்டுகின்றனர். இச்சட்டம் 1979 ஆம் அண்டு தை மாதம் முதலாம் திகதி முதல் செயற்பட ஆரம்பித்தது.

### *இச் சட்டத்தின் நோக்கம்:*

இதன் நோக்கம் நுகர்வோர்களைப் பாதுகாப்பதைப் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. குடும்ப சுகநலத்தைப் பேணிக் கொள்வதற்காக பொருட்களை தெரிவு செய்து கொள்வதற்கும், அவற்றின் விலையமைப்புப் பற்றியும் அவற்றின் கலப்பும் பற்றியும், நியாயத்தை வியாபாரப் போட்டிகளைப் பற்றி பொறுப்பாணவர்களுக்கு அறிவூட்டுவதன் தன்மையைப் பெற்றுக் கொள்வதற்குமான வாய்ப்புக்கள் ஏற்படுமானால் நுகர்வோர் என்ற ரீதியில் தங்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. எனத் திருப்தி அடைந்து கொள்ள முடியும்.

பின்வரும் சேவைகளும் இச்சட்டத்தில் உள்ளடக்கப்படும்.

* உயிருட்டமான தகவல்கள் வழங்குதல்.
* குறித்த விலைக்கு விற்பனை செய்தல்.
* நுகர்வோர் வழிதவறிச் செல்வதைத் தவிர்த்தல்.
* பாதகமான நிபந்தகைகளுக்கு அளாகாதிருத்தல்
* விலை பேதப்படுத்தலுக்கு தூண்டப்படாதிருத்தல்
* விலைகள் குறித்து வைத்தல்.
* சுகாதார சேவைகளைப் பாதகாத்தல்.

## *நுகர்வோர் பாதுகாப்புக்கான அரச நிறுவனங்கள்*

### 1. உள்நாட்டு வியாபாரத்திணைக்களம்/ உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம்

நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தவென அரசு அறிமுகப்படுத்திய முதல் நிறுவனம் இதுவாகும். உள்நாட்டு வியாபார ஆணையாளரைத் தலைவராகக் கொண்ட இத்திணைக்களம் பின்வரும் பணிகளைச் செய்கின்றது.

- விலைக்கட்டுப்பாட்டைச் செயற்படுத்தல்.
- நுகர்வோருக்கள் ஆலோசகை வழங்குதல்.
- நுகர்வோருக்கான தகவல் வழங்குதல்.
- நுகர்வோர் முறைப்பாடுகளை விசாரித்தல்.
- தவறு செய்யும் வியாபாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல்.
- நுகர்வோர் கல்வியை மேம்படுத்தல்.

### *நியாய வியாபார ஆணைக்குழு*

இலங்கையிலே போட்டிப் பொருளாதாரத்தை ஊக்கப்படுத்தும் நோக்குடன் நிறுவப்பட்ட நிறுவனம்

இது ஆகும், இதுவே தனியார் மயமாக்கலை அறிமுகஞ் செய்தது. கட்டுப்பாட்டுவிலையினை தீர்மானிப்பதும் இந்நிறுவனமாகும். கூடிய தரத்திலும், குறைந்த விலையிலும் பொருட்கள் சேவைகள் கிடைப்பதனை உறுதிப்படுத்தும் இது பின்வரும் பணிகளை ஆற்றுகின்றது.

- தனியுரிமையை நீக்குதல்.
- போட்டிக்கெதிரான காரணிகளைத் தவிர்தல்.
- வியாபாரச் சேர்க்கைகளைத் தவிர்த்தல்.
- தேசிய விலைக் கொள்கையை வகுத்தல்.
- பொருட்களின் விலைகள், சேவைகளுக்கான கட்டணங்கள் பற்றிய பிரச்சினைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தல்.
- அரசுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.
- நுகர்வோரிடையே தொடர்புகளை அதிகரித்தல்.
- நாட்டின் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
- காலத்துக்குக் காலம் அமைச்சர் வழங்கும் பணிப்பரைகளை நடைமுறைப்படுத்தல்.

### 3. *இலங்கைத் தர நிர்ணய நிறுவனம்*

உற்பத்திப் பொருட்களும் சேவைகளும் உயர்ந்த தரத்தில் இருப்பதனை உறுதிப்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட நிறுவனமாகும். இது உயர்ந்த தரத்தில் உற்பத்திப் பொருள் இருப்பதனை உறுதிப்படுத்தும். இதற்கேற்ப உற்பத்திகள் உயர்ந்த தரத்தில் இருப்பதனை உறுதிப்படுத்தும். இது முடிவுப் பொருட்களுக்கு மட்டும் ("SLS" Sri Lanka Standard) எனும் அடையாளத்தை வழங்கும் இதன் பணிகளாவன:

- முன்னோக்குல் நடவடிக்கையாக தரநிர்ணயம் செய்தல்.
- பின்னோக்கல் தரக்கட்டுப்பாட்டை மேற்கொள்ளல்.
- இறக்குமதிப் பொருட்களுக்கு பரிசோதனைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்
- ஏற்றுமதிப் பொருட்களுக்கான தரப்பிரிசோதனையை மேற்கொள்ளல்.
- தரக்கட்டுப்பாடு பற்றிய பயிற்சி வழங்குதல்.
- நுகர்வோரது கல்வியறிவை மேம்படுத்தல்.
- நூலக சேவையை வழங்குதல்.
- தரத்தை உறுதிப்படுத்தும் இலட்சினையான "SLS" வழங்குதல்

உசாத்துணை நூல்கள்

*இ. ரட்ணம் – வணிகக்கல்வி*

நன்றாக எழுதுவதைப் போன்றே நேர்மை.
அது பழக பழகத்தான் சரியாக வரும்.

- *ஜோன் ரஸ்கின்*

*உங்களுக்கு வாழ்க்கை முக்கியமல்ல;*
*வாழ்க்கையில் நீங்கள் காட்டும் மனவுறுதிதான் முக்கியம்.*

- *ஜோன் கேல்ஸ்வொர்த்தி*

# ஊக்கப்படுத்தல் OR செயலூக்கமளித்தல் MOTIVATION

எந்த ஒரு நிறுவனத்துக்கும் நோக்கம் என்ற ஒன்று உண்டு. அங்கே கடமைபுரியும் ஊழியர்களும் அத்தகைய நோக்கத்தினைக் கொண்டிருக்க வேண்டும். ஊழியர்கள் தனிப்பட்ட நோக்கத்தினைக் கொண்டிருந்து, அது நிறுவனத்தின் நோக்கத்திலிருந்து வேறுபடின் அந்த ஊழியர்களை நிறுவனத்தின் நோக்கத்தினை அடையும் பொருட்டு தூண்டுதல் செய்தல் வேண்டும் மறுபுறத்தில் ஊழியர்களை ஊக்கப்படுத்த வேண்டும். எந்த ஒரு ஊழியனின் செயற்திறன் நிறை வேற்றலானது ஆற்றலிலும் ஊக்கப்படுத்தலிலும் தங்கியுள்ளது. இதனை கீழ்வருமாறு குறிப்பிடலாம்.

ஊழியரின் செயற்திறன் = ஆற்றல் X ஊக்கப்படுத்தல்
இங்கு
ஆற்றல் = அறிவு X திறன்

போதிய ஆற்றலைக் கொண்டிருந்தும், ஊக்கப்படுத்தல் இன்மையால் வினைத் திறமையான செயல் திறனைப் பெற்றுக் கொள்ள முடியாது. அத்துடன் குறைவான ஊக்கப்படுத்தலைக் கொண்ட ஊழியர் மத்தியில் பின்வரும் குறைபாடுகள் காணப்படுமென ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன. அவையாவன.

1. வேலையில் அக்கறையின்மை தோன்றும்.
2. சலிப்புத் தன்மை தோன்றும்.
3. கவனக் குறைவு ஏற்படும்.
4. நேரத்தினை விரையம் செய்வர்.
5. வரவு ஒழுங்கீனம் காணப்படும்.
6. தேவைக்கு மேலான மருத்துவ லீவுகள் எடுப்பார்கள்.
7. நிறுவனத்தின் இலக்கனை அடைவதற்கான பங்களிப்புக் குறையும்.

நிறுவனம் திறமையாக இயங்குவதற்கும் ஊழியரிடமிருந்து வினைத் திறமை உடைய செயற்திறனைப் பெற்றுக் கொள்வதற்கும் ஊக்கப்படுத்தல் அவசியம். ஊக்கப்படுத்தல் இன்றி எந்தொரு செயற்பாடும் திறமையாக இயங்காது. ஊக்கப்படுத்தல் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய மூன்று மூலகங்களைக் கொண்டது. அவையாவன

1. தேவை - Need
2. உந்துதல் - Drived
3. இலக்கு - Tracket

ஊக்கப்படுத்தல் எனப்படுவது தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு செயற்பாட்டை மேற்கொள்வதற்கான உந்துதல் ஆகும். ஊக்கப்படுத்தல் செய்முறையினை பின்வருமாறு காட்டலாம்.

தேவை → உந்தல் → செயற்பாடு
Need Drive Action

இச் செயற்பாடுகள் இலக்கினை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்படும். அத்துடன் காலத்திற் கேற்ப மாறுபடக் கூடியது. அத்துடன் தேவைகள் எவ்வாறு செயற்பாடுகளாகக் மாற்றப்படுகின்றது என்பதும் தனிப்பட்டவர்களுக்கு இடையில் வேறுபடலாம். செயற்பாடுகள் மூலம் பெறப்படும் திருப்தி உந்தலைக் குறிக்கும்.

### ஊக்கப்படுத்தலின் தன்மைகள்

1. ஊக்கப்படுத்தலானது நிதி சார்ந்ததாகவோ நிதிசாராததாகவோ இருக்கலாம்.

நிதி ரீதியான ஊக்குவிப்பு எனும் போது சம்பளம், படிகள், உபகாரப்பணம், மேலதிகக் கொடுப்பனவு, போன்றனவாகும்.

நிதி ரீதியற்ற ஊக்குவிப்பு என்பது கௌரவம், அந்தஸ்து, பொறுப்புக்கள் என்பவற்றை

அ.துஸ்யந்தன்
2001 வர்த்தகம்

வழங்குவதோடு தீர்மானம் எடுத்தலில் பங்கு பெறச் செய்தல் சேவைக்கான விருதுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்

2. *ஊக்கப்படுத்தல் தொடர்ச்சியானது*

மனிதத்தேவைகள் அளவிட முடியாதது தனிப்பட்ட ஒருவர் ஒரு தேவையினை அடைந்த பின்னர் மற்றைய தேவையினை அடைமுயல்வர். எனவே மனிதவுடைய தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு ஊக்கப்படுத்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3. *ஊக்கப்படுத்தல் முழுமையானது*

அது பிரிக்கக் கூடியது அல்ல தொழிலாளரைப் பிரிக்கமுடியாத அலகாகக் கருதி அவர்களின் விரும்பங்கள் ஆசைகளை அறிந்து அவர்களை ஊக்கப்படுத்தல் வேண்டும்.

4. *ஊக்கப்படுத்தலானது மனித தேவைகளால் தீர்மானிக்கப்படும்*

மனிதன் தனது தேவைகளின் நிறைவு செய்யும் பொருட்டு செயற்படுகின்றான். தனது தேவைகள் நிறைவு செய்யப்பட்டதும் தொழிலில் தனது அக்கறையினை இழக்கின்றான். அவனால் திருப்திப்படுத்த முடியாத தேவைகளே ஊக்கப்படுத்தலை தீர்மானிப்பதாக அமையும்

## ஊக்கப்படுத்தலின் முக்கியத்துவம்

### 1. உற்பத்திக் காரணிகளின் உயர்ந்த பயன்பாடு

ஊக்கப்படுத்தல் செயற்திறன் வாய்ந்த ஊழியர்களை அவர்களது நோக்கத்தை நோக்கி வெற்றிகரமாகச் செயற்பட உதவும். இது நிறுவனம் தனது பௌதீகவள, நிதிவள, மனிதவளங்களை உச்ச அளவில் பயன்படுத்த உதவும்.

### 2. புரள்வு வீதத்தினைக் குறைக்கும்

கவர்ச்சிகரமான நிதி ரீதியான, நிதி ரீதியற்ற ஊக்குவிப்புத் திட்டங்கள் தொழிலாளர்களை நிறுவனத்தில் நிலைத்திருக்கச் செய்கிறது. ஊழியர்கள் இலகுவில் போட்டி நிறுவனங்களினால் கவரப்படமாட்டார்கள், இது தொழிலாளர் புரள்வு வீதத்தைக் குறைக்கும். அத்துடன் நீண்டகாலத்திட்டங்களை செயற்படுத்த உதவும்.

### 3. தகுதியான ஊழியர்கள் கிடைத்தலை உறுதிப்படுத்தும்

இவ் ஊக்குவிப்பினால் ஆற்றலுள்ள ஊழியர்களை நிறுவனத்தில் தொடர்ந்து தக்க வைப்பதற்கு வெளியிலிருந்து தகுதி வாய்ந்த ஊழியர்களை பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கும்.

### 4. வினைத்திறமையையும் வெளியீட்டினையும் அதிகரிக்கும்

மகிழ்ச்சிகரமான வேலைப் படையானது அதிகரித்த வினைத்திறமையையும் உயர்ந்து வெளியீட்டினையும் உயர்த்துவதற்கு இவ் ஊழியர்களின் செயற்றிறனில் ஏற்படும்அதிகரிப்பானது நிறுவனத்தின் இலாப அளவையும் அதிகரிக்கும்.

*நல்ல ஊக்கப்படுத்தல் முறையின் அம்சங்கள்*

பொதுவாக சிறந்த ஊக்கப்படுத்தலானது பின்வரும் அம்சங்களைக் கொண்டிருத்தல் விரும்பத்தக்கது.

1. ஊழியர்களை வேலை செய்யும்படி தூண்டுதல் வேண்டும்.
2. உற்பத்தி அதிகரிப்பினை ஏற்படுத்துவதாகக் காணப்படல் வேண்டும்.
3. சிறந்த ஊக்கப்படுத்தல் ஊழியர்களின் சகல தேவைகளையும் திருப்திப்படுத்துவதாகக் காணப்படல் வேண்டும்.
4. நெகிழ்வுத் தன்மையினை கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஊக்கப்படுத்தல் திட்டம் எல்லோரையும் ஒரே மாதிரியாக நடத்துவதாகக் காணப்படல் வேண்டும்.

*ஊழியர்களை ஊக்குவிப்பது தொடர்பாக பின்வரும் விடயங்களில் முகாமையாளர் கவனம் செலுத்தல் வேண்டும்*

1. ஊழியர் ஒருவரின் தேவைகளை அறிதல்.
2. ஊழியர்களுக்கு கட்டளை இடுவதனைக் காட்டிலும், அவர்களை வழிநடத்தல் வேண்டும்.
3. தன்கீழ் பணிபுரிபவர்களுக்கு தாம் ஓர் முன்மாதிரியாக விளங்குதல்.
4. தங்கள் கீழ் பணிபுரிபவர்கள் (Sabordinates) மீது நம்பிக்கையை வைத்தல்.
5. பணியாளர்களின் கருத்துக்களை அவதானமாகக் கேட்டல்.

6. ஊழியர்களையும் தீர்மானம் எடுப்பதில் பங்குகொள்ள வைத்தல்.
7. ஊழியரின் செயல் திறமையை (performance) அளவீடு செய்து பின்னூட்டியினை வழங்குதல்.
8. ஊழியர்களின் முன்னேற்றத்தில் அக்கறையைக் காட்டுதல்.
9. ஊழியர்கள் வேலையை சிறப்பாக மேற்கொள்ளும் பொருட்டு போதியளவு சுதந்திரம், அதிகாரக் கையளிப்பினை வழங்குதல் வேண்டும்.

### *ஊக்கப்படுத்தல் கோட்பாடுகள்*

ஊக்கப்படுத்தலுக்கு எவை காரணங்கள், ஊக்கப்படுத்தல் எவ்வாறு மேற்கொள்ளப்படுகின்றது இவ் ஊக்கப்படுத்தல் கோப்பாடுகள் இரு வகைப்படுகின்றது.
1. உள்ளடக்கல் கோட்பாடு
2. செய்முறைக் கோட்பாடு

உள்ளடக்கல் கோட்பாடானது ஊக்கப்படுத்தலுக்கு என்ன காரணமாக உள்ளது என்பதில் கவனத்தினைச் செலுத்துகின்றது. உள்ளடக்கற் கோட்பாட்டிற்கு உதாரணமாக மாஸ்லோவின் படிமுறைக் கோட்பாடு, ஹேர்ஸ் பேர்கின் இருகாரணிக் கோட்பாடு போன்றவற்றைக் கூறலாம்.

செய்முறைக் கோட்பாடானது எவ்வாறு ஊக்கப்படுத்தப்படுகின்றது என்பதில் கவனம் செலுத்துகின்றது. இக் கோட்பாட்டிற்கு உதாரணமாக எதிர்ப்புக் கோட்பாடு, சமனிலைக் கோட்பாடு போன்றன வற்றை குறிப்பிடலாம்.

### *மாஸ்லோவின் படிமுறை அமைப்பு தேவைக் கோட்பாடு*
(Maslow`s Hierachy of Needs Theory)


H. Maslow வினால் இக்கோட்பாடு முன்வைக்கப்பட்டது. அவர் மனித தேவைகள் பற்றியும், அவை திருப்தி செய்யப்படும் முறை பற்றியும் சில கருத்துக்களை முன் வைத்தார் அவையாவன.

1. மனிதனுக்கு எப்போதும் ஒரு தேவை இருந்து கொண்டிருக்கும். ஒரு தேவை பூர்த்தி செய்யப்பட்டதும் இன்னொரு தேவை உண்டாகும்.
2. ஒரு தேவையானது பூர்த்தி செய்யப்படின் அதன் மூலம் அவர்களை ஊக்கட்படுத்த முடியாது
3. மனிதனின் தேவைகள் படிமுறை அமைப்பில் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.
4. மனிதனின் வேலையானது இத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவமுடியும். அவன் தனது வேலையூடாக எதனை எதிர்பார்க்கின்றான் என்பது குறிப்பிட்ட வேளையில் எத் தேவையைப் பூர்த்தி செய்ய உள்ளான் என்பதில் தங்கியுள்ளது.

இவர் மனித தேவைகளை பின்வருமாறு பாகுபடுத்தியுள்ளார். அவையாவன
1. பௌதீகத் தேவை Physiological Need
2. பாதுகாப்புத் தேவை Safety - Need
3. சமூகத்தேவை Social Need
4. கௌரவத் தேவை Esteem Need
5. சுய அந்தஸ்து தேவை Self Realisation Need

**மனிதத் தேவை பற்றிய படிமுறை அமைப்பு பின்வருமாறு காணப்படுகின்றது.**






மேலும் பௌதீகத் தேவை என்பது மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிட வசதிகளைக் குறிக்கின்றது.

பாதுகாப்புத் தேவை எனும் போது பொருளாதார ரீதியான பாதுகாப்பு, இயற்கை அழிவு என்பவற்றிலிருந்து பாதுகாப்பு, நோய்களிலிருந்து பாதுகாப்பும் பெறல் என்பவற்றினைக் குறிக்கும்.

மனிதன் பாதுகாப்புத் தேவையினைப் பூர்த்தி செய்த பின்னர் சமூகத் தேவையினை பூர்த்தி செய்வதிலே முனைகிறார். இதில் சமூக உறவு, சமூக நிகழ்ச்சிகளில் பங்குபற்றுதல் ஆகியவற்றைப் பூர்த்தி செய்வதில் அதிக கவனம் செலுத்துதல் என்பவற்றை சமூகத்தேவை குறித்து நிற்கின்றது.

கௌரவத் தேவை என்பது பிறருடைய மதிப்பினைப் பெற்றுக் கொள்வதனைக் குறிக்கின்றது. அதாவது குறிக்கப்பட்ட மேற்கூறிய நிலமைகள் பூர்த்தி செய்யப்பட்டதும் சமூகத்தில் தன்னைஉயர்த்திக் காட்டுகின்ற நிலை ஆகும். இந் நிலையில் அதற்கேற்ப அவரது தேவையினைப் பூர்த்தி செய்யக்கூடிய நடவடிக்கைகளை கையாளுவதன் மூலம் அவரைத் தூண்டலாம்.

உ-ம் ஆடம்பர வாகனங்களைக் கொள்வனவு செய்தல்.

விலைக்கூடிய வீட்டுத் தளபாடங்களை கொள்வனவு செய்தல்

சுய அந்தஸ்து தேவை என்பது தன்னுடைய ஆற்றல் மூலம் அடையக் கூடிய அதி உச்சத் தேவையினைக் குறிக்கின்றது.

## இரு காரணிக் கோட்பாடு
(Two Factor Theory)

1960 இல் பிரடெறிக் ஹேர்ஸ்பேக்கும் அவரது ஆய்வாளரும் இணைந்து மனிதத்தேவை தொடர்பாக ஆய்வு ஒன்றில் ஈடுபட்டனர். பிறாஸ் பேர்க்கிலுள்ள கைத்தொழிற்சாலையில் 200 பொறியியலாளர், கணக்காளரைக் கொண்ட தொகுதியினரை கொண்டு இவ் ஆய்வு மேற் கொள்ளப்பட்டது. அவர்களிடம் இரண்டு கேள்விகள் கேட்கப்பட்டன. அவர்களுக்கு வேலையில் திருப்தியினை ஏற்படுத்தும் அம்சம் எவை, அதிருப்தியை ஏற்படுத்தும் அம்சம் எவை என்ற கேள்விகள் கேட்கப்பட்டு விளைவுகள் ஆராயப்பட்டன. திருப்திக்கும் அதிருப்திக்கும் ஆன காரணங்கள் 2 வேறுபட்ட காரணித் தொகுதிகள் என அடையாளம் காணப்பட்டது.

திருப்தியினை ஏற்படுத்தும் காரணிகள் வேலையின் உள் சார்ந்தவையாகும் அதாவது இவை வேலை உள்ளடக்கம் சார்ந்தவையாகும். இக் காரணிகள் பின்வருவன என அடையாளம் காணப்படுகின்றது.

1. சாதனை
2. அங்கீகாரம்
3. பொறுப்பு
4. வேலையில் முன்னேற்றுவதற்கான வாய்ப்பு திருப்தியினை ஏற்படுத்தும்

திருப்தியினை ஏற்படுத்தும் காரணிகள் ஊக்குவிப்புக் காரணிகள் எனப்படும்

திருப்தியின்மையை எற்படுத்தும் காரணிகள் வேலை தொடர்பாக வெளிச்சார்ந்த


வையாகும். அதாவது வேலைச் சூழலின் ஒரு பகுதியாகும். அவையாவன:

1. கம்பனிக் கொள்கை
2. மேற்பார்வையின் தன்மை
3. வேலை நிபந்தனை
4. வேலையின் பாதுகாப்பு
5. வேலை அந்தஸ்து
6. சம்பளம்

திருப்தியின்மைக்கான காரணிகள் சுகாதாரக் காரணிகள் என அழைக்கப்படுகிறது. இவரது கருத்துப்படி சுகாதாரக் காரணிகள் பூர்த்தி செய்யப்படாத போது, வேலையில் திருப்தியின்மை தோற்றுவிக்கப்படும். ஆனால் இவற்றினைப் பூர்த்தி செய்வதன் மூலம் வேலையில் திருப்தியினை ஏற்படுத்த முடியாது. திருப்தியோ / திருப்தியின்மையோ அற்ற நிலையினையே ஏற்படுத்த முடியும் எனக் கூறப்பட்டது. ஊக்குவிப்புக் காரணிகளை வழங்குவதன் மூலம் வேலையில் திருப்தியினை ஏற்படுத்தலாம் எனக் கூறப்படுகின்றது.

மாஸ்லோவின் படிமுறைத் தேவைக் கோட்பாட்டிற்கும் இரு காரணிக் கோட்பாட்டிற்கும் இடையில் ஓர் தொடர்பினை அவதானிக்க முடியும். மாஸ்லோவின் மேல்மட்ட தேவைகளை ஊக்குவிப்புக் காரணிகளும் ஏனைய தேவைகளை சுகாதாரக் காரணிகளும் வெளிப்படுத்துகின்றது.

*கீழேயுள்ள விளக்கப்படம் அதனை எடுத்துக் விளக்குகின்றது.*




ஊக்குவிப்புக்காரணி
சாதனை, பொறுப்பு
அங்கீகாரம் வேலையில்

சுகாதாரங்காரணி
கம்பனிக் கொள்கை சம்பளம்
வேலைச் சூழல் மேற்பார்வைத்

1. பௌதீகத்தேவை
2. பாதுகாப்புத்தேவை
3. சமூகத்தேவை
4. கௌரவத்தேவை
5. சுய அந்தஸ்துதேவை

Reference
முகாமைத்துவத்திற்கு ஓர் அறிமுகம்

## MANAGEMENT THOUGHTS

Resources such as money, man, meterial and mechines are shortage. Human wants are growing. So we must use the resources maximum. In this time managements are needed. Thus the management concepts were growing according to the above situation managerial problems were created. So the biggest and immediate challange before the world is to develop strategies to produce more, using less resources.The subject of management deals whith this challenge. Management is defined in very broad terms as efficient use of resources. In other words management teaches us the way and means of producing more goods and services using limited resources. Historically, thoughts on management fall into four major schools.

1) The classical school of managent
2) The human relations movement
3) The mathamatical school
4) Contingency approach to managent

***The classical school of managment***

It branches out into three major approaches

1) The bureaucratic approach.
2) Scientific management movement
3) Administrative management

***The Bureaucratic approach***

It was developed by Max Weber, a German social historian. He advocated that a clearly defined set of rules, regulations and procedures must be developed to carry out the organisational activities managers must have greater authority, power and expertise than their subordinates. So that the managers can enforce a given set of rules, regulations and procedures. Efficiency was to be achieved through the use of authority of managers. So the followings are the main points of the bureaucratic approach.

* Managers set rules and Subordinates implement them.
* Subordinates donot have freedom.
* Rules and regulation donot promote new ideas because it defines only "what should be done ?"

***Scientific management movement***

It was developed by Federic Taylor, known today as the *Father of Modern Management.* He identified two fundamental characteritics in every task.

A) Completion of task takes time.
B) Every task involves the movement of people and physical items.

Taylor suggested that organisational efficiency could be achieved by minimising the time and motion associated with the task. He

K. P. Sureshkumar
**Final year**


beleived that a given task can by carried out in more than one way. But there is only one way which will minimise time as well as motion of men and materials. He proposed that every worker in the organisation should specialized in one particular job rather than perfoming several duties. Greater specialisation will develop one's technical skills and enable him to complete a task in a shorter time, with greater specialisation and by motivating workers through increased payment of wages, the workers will produce a lager volume of goods and services.Managers were expected to pay a significant role in organising the work place. So that the motion or the movement of men and meterial were minimised.

The followings are the main points of scientific management movement.

* Find out more ways to complete the given task.
* Every employee should be specialised in one job and promoted by highly waged.
* Recruitment and trainning must be done based on the scientific approach.

***Administrative management***

It was developed by Hentry Fayol. Fayol views an organisational structure as having vertical and horizontal dimensions. The vertical strcture shows the position or levels in the organisation while the horizontal structure shows the various functions at the same level.




Vertical structure shows starting from the chairman, the general manager and a set of managers at same level. The indication is that the chairman has more power and authority than the general manager and the set of managers. The group of managers at the same level have equal authority but are engaged in different functions.

Fayal introduced the following management functions.

i. Planning for the future.
ii. Organisation of resources.
iii. Commamding the subordinates
iv. Developing coordination among different division.
v. Control of activities.

***Human Relation school***

It was devoloped by Elton Moyo. He beleived that greater organisational efficiency could be achieved through improved human relations in the organisation. The willingness of a worker to perform a job with enthusiasm and satisfaction is determined by many other non physical benifits. Most of these benifits are concerned with the relationship that a worker maintain with those in his environment.

The basic assumption of human relation model are

i. Workers are motivated by needs that they fulfill by working in a group.

ii. Workers respond positively to social forces rather than to a manager to the incentives and controls laid down by managers.

iii. Workers will respond to a manager to the extent that they identify him as a leader.

***The mathematical school of management***

Managerial problems ars solved using mathematical techniques. The focus of this school is the development of mathematical models to represent managerial situation. This approach is widely used today in the area of stock control quality control, planning and forcasting.

***The Contingency approach***

Managers must realise the nature of the situation or the problem before they decide on a particular approach to solve the problem. For instance, a conflict between a supervisor and his group may best be solved through the human relation approach rather than by a mathematical model.

School Activities must be Measured by three " E"s.

First "E" - Efficency
Second "E" - Effective
Third "E" - Economy

# சங்கமருவியகால இலக்கியம் - ஒரு மீள் பார்வை

சங்க காலத்தை மருவி வந்த காலம் சங்கமருவிய காலம் என்று கூறப்படும். காலமும் கருத்தின் அடிப்படையில் அறநெறிக்காலம் எனப்படுகின்றது. கி.பி. 4ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6ம் நூற்றாண்டு வரையுள்ள காலம் பொதுவாக சங்க மருவிய காலம் எனப்படுகின்றது. இக்காலப்பகுதியில் மூவேந்தர் ஆட்சி நிலைதளர வடக்கேயிருந்து வந்த களப்பிரிவினரின் ஆதிக்கம், அந்நியப்படையெடுப்புகள் என்பனவற்றிற்குத் தமிழகம் உள்ளாகியது. மேலும் இக்காலப்பகுதியிலேயே தமிழகத்தில் ஆரிய நாகரிகத்தின் தாக்கம் ஆரம்பமாகத்தொடங்கியது. மன்னர்கள், மக்கள் யாவரும் இச்செல்வாக்கினால் கவரப்பட்டனர். அரசர்கள் யாகங்கள் செய்ய விரும்பினர். இதனால் சமூகத்தில் பிராமணர்களின் நிலை உயர்வடையத் தொடங்கியது. அந்தணர்கள் புரோகிதராகவும் அமைச்சர்களாகவும் அரசகருமங்களில் முதன்மை பெற்றனர். ஆரியரின் வருனப்பாகுபாட்டிற்கேற்ப அரசர்கள் தம்மைச் சத்திரியர்களாகக் கூறிக் கொண்டு அவர்களுக்குரிய பழக்கவழக்கங்களைப் பின்பற்றினர். இதேசமயம் வடநாட்டிலிருந்து சமணமும் பௌத்தமும் தமிழ்நாட்டிற்கு வந்து, திராவிட சங்கங்கள் போன்ற சங்கங்களை அமைத்து, தமிழ் மொழியைக் கற்று தம் சமயக் கருத்துக்களைப் பரப்பலாயினர். இத்தகையதோர் பின்னணியிலேயே இக்காலப்பகுதி ஆராயப்படவேண்டும்.

*சங்கமருவிய கால நூல்கள்*

இக்காலத்தில் எழுந்தநூல்களைக் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

I கீழ்க்கணக்குநூல்கள்
II சிலம்புமேகலை
III பக்திப் பாடல்கள்
IV தொல்காப்பியம் என்ற இலக்கணநூல்

## 1. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

சங்ககாலத்தில் தோன்றிய எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் மேற்கணக்குநூல்கள் என்று கூறப்படும். இவை முன்தோன்றியவை என்றபொருளில் மேற்கணக்கு நூல்கள் எனவும் அதுற்றைத் தொடர்ந்து பின் அமைந்தவை கீழ்க்கணக்கு நூல்கள் எனவும் பெயர் பெற்றன. குறைந்த அடிகளில் முப்பொருளை அடுக்கி ஒழுங்குபடுத்திக் கூறுவது ***கீழ்க்கணக்கு நூல்கள்*** என்று விளக்கப்படுகின்றது.

*'அடிநிமிர் பில்லாச் செய்யுட்டொகுதி*
*அறம் பொருள் இன்பம் அடுக்கியவ்வகைத்*
*திறம்பட உரைப்பது கீழ்க்கணக்காகும்'*

என பன்னிருபாட்டியல் என்னும் இலக்கண நூல் விளக்கந்தருகின்றது. அந்நூல்கள் வருமாறு

*'நாலடி நான்மணி நானாற்பதைந்திணைமுப்*
*பால் கடுகங்கோவை பழமொழி – மாமூலம்*
*இன்னிலைய சொல் காஞ்சியோடேலாதி என்பதூஉம்*
*கைந்நிலையு மாங் கீழ்க்கணக்கு'*

இச் செய்யுளின் மூலம் நாம் அறிந்து கொள்ளும் கீழ்க்கணக்கு நூல்கள் வருமாறு நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது திருக்குறள் திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழிநானூறு சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை.

இந்நூல்களை பொருள் மரபாக நான்கு நிலைகளில் வகைப்படுத்தலாமெனினும் ஆய்வுகருதி மூன்று வகையாக வகைப்படுத்தப் படுகின்றன.

**செல்வி. வெ.கலைச்செல்வி** 13A

*(அ). அறவொழுக்கம் பற்றிய நூல்கள்:*

இக்காலத்தில் அறத்தைப் போதிக்கும் நூல்கள் என பதினொரு நூல்கள் தோன்றியுள்ளன. இந்நூல்களின் பண்புகள் வருமாறு.

1. நீதி முறைகள், ஒழுக்க நெறிகள் என்பனவற்றை நேரே எடுத்துக்கூறுவனவாக அமைந்துள்ளன. இதனால் இந்நூல்களில் பிரச்சாரத்தன்மை காணப்பட்டது. இப்படித்தான் வாழவேண்டும் என்று சில நியதிகளை எடுத்துக் கூறுவனவாக அமைந்தன.

2. வடநூற் கருத்துக்களை கூறுவனவாக அமைதல்~
அறநூல்களிற் கூறப்பட்ட கருத்துக்கள் பெரும்பாலும் வடமொழிச் சார்புடையன `சொற்படி ஒழுகும் ஆப்தர்களால் வீட்டில் நன்கு காக்கப்பட்ட பெண்டிர் காப்புடையராகார். தம்மைத்தாமே காத்துக் கொள்ளும் பெண்டிரே நன்கு காக்கப்பட்டவராகயுள்ளவர்கள். என்று மனுஸ்மிருதியில் கூறப்பட்ட சுலோகத்தை

*சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்*
*நிறை காக்கும் காப்பே தலை*
~ என்று குறள் கூறகின்றது.

III. அறநூல்களிற் பெரும்பாலன சமணபௌத்தசமயக் கருத்துக்களோடு தொடர்புடையனவாக காணப்பட்டன. இச்சமயங்களின் முக்கிய கொள்கைகளான உலக வாழ்க்கையை இழிவுபடுத்தல் வாழ்க்கை நிலையாமையைக் கூறுதல், துறவினை வலியுறுத்தல், ஊழ்வினையின் பயனைக் கூறுதல் போன்ற பண்புகளைக் கொண்டிருந்தன.

IV. அறநூல்கள் பெண்களை இழிவுபடுத்துவதோடு பெண்களுக்கு கட்டுப்பாட்டினையும் விதிக்க முற்பட்டன. ஆணைத்துறவியாகக் முயன்ற அறநூல்கள் பெண்ணைபதிவிரதையாகக் முயன்றன.

V. ஒழுக்க ஆசாரங்களை அறநூல்கள் தொகுத்துக் கூறின. நாள்தோறும் வாழ்க்கையிற் பின்பற்றி நடக்க வேண்டிய கடமைகளையும் நித்திய ஒழுக்கங்களையும் எடுத்துக் கூறின.

VI அறக்கருத்துக்களை ஏற்றிராத சமுதாயம் நோய் கொண்டது என நினைத்து அறக்கருத்துக்களை மருந்தாகக் கொண்டு மருந்துப்பெயர்களில் அறநூல்கள் வெளிவந்தமையும் ஒரு பண்பாகும் மருத்துஎவ்வாறு உடல் நோயை தீர்க்க பயன்பட்டதோ அது போல மருத்துப்பெயரில் வெளி வந்த அறநூல்களின் ஒழுக்கங்கள் உளநோயைத் தீர்க்க முற்பட்டன.
பொதுவாக அறநூல்கள் மனிதன் எப்படி வாழவேண்டும் என்று மட்டும் கூறாது எப்படி வாழ்வது என வழியும் கூறுகின்றன.

VII. அறநூல்கள் யாவும் வெண்பா யாப்பில் பாடப்பட்டுள்ளமை இன்னொரு சிறந்த பண்பாகும். அறநூல்களுள் ஒரே புலவன் அடுக்கித் தொகுத்துப் பாடியவையும் உள. திருக்குறள் ஒரே ஆசிரியரால் பாடப்பட்டது. ஆனால் நாலடியார் பல ஆசிரியர்கள் பாடிய தொகுப்பு நூலாகும் என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

### *அறநூல்கள் எழுந்தமைக்கான காரணங்கள்*

சங்கமருவியகாலத்தில் களப்பிரராகிய அன்னியர் தமிழ் நாட்டைக் கைப்பற்றியாண்டு கொடுங்கோன்மை செய்ய அவர்கள் காலத்திலே தமிழ்ச் சமுதாயம் சீர்கேடு அடைந்ததால் தமிழ் மக்கள் வாழ்க்கையை உயர்வடையச் செய்வதற்காக அறநூல்கள் தோன்றின. ஏற்றத்தாழ்வில்லாத சங்ககாலச் சமுதாய வாழ்கை வடநாட்டவர் வருகையிலே ஏற்றத்தாழ்வுடைய சமூக அமைப்பாக மாறியது அரசர்களுக்கும் மக்களுக்குமிடையேயிருந்த நெருக்கமான தொடர்பு அற்றுப்போனது. தமிழ்மக்கள் தமது பாரம்பரிய ஒழுக்கநெறிகளின்று வழுவி அன்னிய வாழ்க்கை நெறியைப் பின்பற்றலாயினர். இவ்வாறு நெறி தவறிய தமிழக மக்களை நல்வழிப்படுத்த விரும்பிய சான்றோர் ஆசார, ஒழுக்க நீதிக்கருத்துக்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் கூறமுற்பட்டனர்.

இக்காலத்தில் சமணபௌத்த மதங்களின் செல்வாக்கும் அறநூல்கள் தோன்றக் காரணமாயிற்று. தமது சமய பிரசாரத்திற்கு இலக்கிய வடிவங்களை கருவியாகப் பயன்படுத்தமுயன்ற இச்சமயங்கள் தம் சமயக்கருத்துக்களினூடாக அறவுரைகளையும், அறிவுரைகளையும் எடுத்துக் கூறின. மேகலையில் அறக்கருத்துக்கள் வலிந்து புகட்டப்படுவது போல காணப்படுகின்றது. சிலம்பில் கதைப்போக்கிலே அறக்கருத்துக்கள் காணப்படுகின்றன. இந்தப் பின்னணியில் வைதீக சமயத்தவரும் தமது சமய நோக்கத்திற்கேற்ப அறக்கருத்துக்களை கூறமுன்வரலாயினர்.

இத்தகைய காரணங்கள் மட்டும் ஒரு சமூகத்தின் வாழ்க்கை பற்றிய கருத்துக்களை மாற்றியமைக்கக் கூடியனவல்ல மக்கள் புறநானூற்றுக்கால வாழ்க்கை முறையை ஏற்றுக்கொண்டிருந்தால் திருக்குறள் முதலியன. அறநூல்கள் தோன்றியிருக்க முடியாது.

"யானும் அவரும் புணர்ந்தகாலை
குருகு பார்த்திஎந்தன
தானது பொய்ப்பின் யான் எது செய்கோ "

என்று தலைவி ஒருத்தி கண்ணீர் விட்டுகலங்கும் காட்சி காணப்படுகின்றது.

" பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

என்று தொல்காப்பியம் கூறுகின்றது. முந்தநாள் போரில் தமையனை இழந்தவள் நேற்று நிகழ்ந்தபோரில் கணவனையிழந்தவள் இன்று போர்பறை கேட்டு போய்வா மகனே என்று வேல்கொடுத்து அனுப்பும் வீரத்தாய்மாரை புறநானூறு சிறப்பிக்கின்றது. இத்தன்மையான அகவாழ்விலும் புறவாழ்விலும் மனம் நொந்த சமுதாயம் கட்டுப்பாடுகள் நிறைந்த வாழ்க்கையை விரும்பியமை அறநூல்கள் தோன்றக் காரணமாகிறது.

வடமொழி இலக்கியத்தின் செல்வாக்கும் இக்காலத்தில் அறநூல்கள் தோன்றக் காரணமாயிற்று. வடமொழிநூற் கருத்துக்கள் மெல்ல மெல்ல செல்வாக்குப் பெறத் தொடங்கின. வடமொழி இலக்கியங்கள் பொதுவாக அறச்சார்பு உடையன. வடமொழியில் உள்ள அர்த்தசாத்திரம் சுக்கிரநீதி, மனுதர்ம சாஸ்திரம், பகவத்கீதை போன்ற நூல்களின் கருத்துக்களே அறநூல்களில் காணப்பட்டன.

இக்காலத்தில் வாழ்ந்த சான்றோர் சிலரின் மனநிலையும் அவர்கள் தம் வாழ்க்கையிற் பெற்ற அனுபவங்களும் அறநூல்கள் தோன்ற காரணமாயிற்று. குறளாசிரியரின் நோக்கம் வையத்துள் வாழ்வாங்கு வாழச்செய்தலாகும். இளங்கோவடிகள் அரசியலில் செங்கோன்மை தவறியவன் அறக்கடவுளால் தண்டிக்கப்படுவான் எனகின்றார். மறுமையின்பம், மோட்ச இன்பம் என்பனவற்றைக் கூறுவதன் மூலமும் அறவழியை ஏற்காதவனுக்கு நரகத்துன்பம் பற்றியும் போதிக்கப்பட்டதால் மக்கள் அறக்கருத்துக்களை ஏற்றுக் கொண்டனர்

## இலக்கியப்பண்பு

இலக்கியப்பரப்பின் விரிவஞ்சி இலக்கிய வரலாற்று ஆசிரியர்களின் காலப்பகுப்புகளாக பகுத்தபொழுது ஒவ்வொரு காலப்பகுதிய்ன் இலக்கியப்பண்பு பின்வரும் அடிப்படையில் இனங்காணப்படுவது பொருத்தமானது என நினைக்கின்றேன்.

## 1. பொருள் மரபு

### 1.1 அறநூல்களின் தோற்றம்

சங்க மருவிய கால இலக்கியங்களின் பொருள் மரபுபெரும்பாலும் அறக்கருத்துக்களோடு தொடர்புடையனவாக காணப்படுகின்றன. பொதுவாக நீதியையும் வாழ்க்கை ஒழுக்கங்களையும் இவை ஒழுங்குபடுத்திக் கூறின. வாழ்க்கை நியதிகள் இப்படித்தான் வாழவேண்டும் என்ற போதனையில் அவை அமைந்தன.

" இன்னாமை வேண்டின் இரவுஎழுக: இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக - தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ் செய்க. வெல்வது
வேண்டின் வெகுளி விடல்"

என்று நான் மணிக்கடிகை கூறுகின்றது. சங்ககால செய்யுட்களின் தனிப்பாடல்களில் ஆங்காங்கே செவியறிவுறுத்தலாகவும், பொருண்மொழிக் காஞ்சியாகவும் வாழ்த்தாகவும் சிற்சில அறிவுரைகளும் பொருளுரைகளும் அறவுரைகளும் கூறப்பட்டன. பரவலாகக் கிடந்த இவ்வனுபவ உண்மைகளே சங்கமருவிய காலத்தில் அறநூல்கள் தோன்ற முன்மாதிரியாக அமைந்தன எனலாம். கீழ்க்கணக்கு நூல்களில் பதினொரு நூல்கள் அறநூல்களாகத் தோன்றின. சிலம்பும் மேகலையும் கதைகளினூடக அறக்கருத்துக்களை கூறின இதனால்தான் இக்காலம் அறநெறிக்காலம் என்று கூறப்பட்டது.

### 1.2 சமயச்சார்பு:-

சங்ககாலத்தில் சமயச்சார்பு இலக்கியத்தில் மிகுதியாக இடம்பெறவில்லை சமயநெறி முதன் முதலாக இடம் பெற்றதென்றால் அது இக்காலத்திலேயே, இக்காலத்தில் சமணர்களும் பௌத்தர்களும் தம் சமயக்கருத்துக்களைப் பரப்பு முகமாக திராவிட சங்கங்கள் போன்ற சங்கங்களை அமைத்து தமிழ் மொழியைக் கற்று தீவிரமாகச் செயற்பட்டனர். இதன் விளைவாகவே சிலம்பும் மேகலையும் இக்காலத்தில் எழுந்தன. சிலப்பதிகாரம் கதைகளினூடாக சமணசமயக் கருத்துக்களை பரப்புகின்றது. மணிமேகலை பௌத்தமதக்

கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வது போல அமைத்தன.

### 1.3 அகப்பொருள் நெறி:–

எந்தவொரு காலப்பகுதியிலும் அதற்குமுந்திய காலப்பகுதியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட இலக்கியங்கள் தோன்றுவது கிடையாது இந்நியதிக் கேற்ப மேற்கணக்கு நூல்களின் அகப்பொருள் மரபு தழுவியதாக கீழ்கணக்கு நூல்களிலும் அறநூல்கள் அகப்பொருள் தழுவியனவாக அமைந்தன.

> "சுனைவாய் சிறு நீரை யெய்தாதென் றெண்ணிப்
> பிணை மானினிதுண்ணவேண்டி – கலைமாத்தன்
> கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர்காதலர்
> உள்ளம் படர்ந்த நெறி "

என்று மான் என்ற கருப்பொருளின் ஊடாக அகப்பொருள் மரபு எடுத்துக் காட்டப்படுகின்றது.

மேலும் திருக்குறள் நாலடியார் போன்ற நூல்களில் காமத்துப்பாலில் களவொழுக்கம் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. சிலப்பதிகாரத்தின் கானல் வரியில் களவொழுக்கம் பற்றிய செய்தியும் இடம் பெற்றுள்ளது.

### 1.4 புறப்பொருள் மரபு:–

களவழி நாற்பது புறப்பொருள் பற்றிய நூலாகும். போர்முடிந்தபின் போர்க்களம் பற்றிய செய்திகளை தெரிவிப்பதனால் பிற்காலத்தில் பரணி நூல்கள் தோன்றுவதற்கு காரணமாக இருந்தது.

### பக்திப் பாடல்கள் :–

சங்கமருவியகாலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்கள் எனக் கருதப்படும் காரைக்காலம்மையாரும் முதலாழ்வார்களும் பாடிய பக்திப்பாடல்களும் இக்கால இலக்கியத்தின் ஒரு முக்கிய பண்பாகும். காரைக்காலம்மையார் சிவனது திருக்கோலம், திருவருள், பேராற்றல் என்பனவற்றை வியந்து உள்ளமுருகிப் பாடியதுபோல முதலாழ்வார்கள் திருமாலைப் பாடினார்.

இத்தகையான பக்திப்பாடல்களே பல்லவர்கால இலக்கியத்திற்கு முன்மாதிரியாக அமைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## 2. செய்யுள்மரபு

### 2.1 வெண்பா யாப்பு:–

சங்கமருவிய கால இலக்கியங்களிற் பெரும்பாலானவை வெண்பா யாப்பில் அமைந்தன இதற்குக் காரணம் அறக்கருத்துக்களை மக்களுக்கு வலிந்து புகட்ட வேண்டியிருந்தது. சங்கப்பாடல்களை உணவு என்று சொன்னால் அறநூல்களை மருந்து என்று கூறவேண்டும். இதனை மனித சமுதாயம் மனத்தில் இருத்த வேண்டுமானால் அதற்கேற்ப ஒரு செறிவான வடிவம் அமைத்து கருத்துக்களில் அழுத்தம் தொனிக்க வேண்டும். நீதியைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறுவதற்கு ஏற்றவடிவம் வெண்பா யாப்பே. அது செப்பல் ஓசையுடையதாய் வினாவிற்கு ஏற்ப விடையிறுக்கும் வடிவத்தில் அமைந்திருந்ததனால் அறக் கருத்துக்களைக் கூறவந்த புலவர்கள் வெண்பா யாப்பினையே பயன்படுத்தினர்.

### 2.2 அகவல் யாப்பு:–

சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்ட அகவல்யாப்பு முற்றாகக் கைவிடப்படவில்லை சமயநெறிகளைப் பரப்ப எழுந்த சிலம்பு மேகலை அகவற்பாவிலேயே பாடப்பட்டது,

### 2.3 யாப்பு பரிசோதனைக்காலம்:–

இக்காலம் யாப்பு பரிசோதனைக் காலமாக விளங்கியது. காரைக்காலம்மையார் தாம் பெற்ற தெய்வீக உணர்வினை வெண்பா யாப்பில் அற்புதத் திருவந்தாதியாகப் பாடினார். அது தெய்வீக உணர்வினைப் புலப்படுத்தத் தகுதியற்றது என்பதை உணர்ந்து திருவிரட்டை மணிமாலையைக் கட்டளைக் கலித்துறையிற் பாடினார். அதன்பின்னர் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களை விருத்தப்பாவில் பாடி பல்லவர் கால இலக்கியத்திற்கு வழிகாட்டினார்.

### 1.4 தொடர்நிலைச் செய்யுட்கள்

சங்க மருவியகால செய்யுள் மரபின் ஓர் அம்சம் தொடர்நிலைச் செய்யுட்களாகும். ஒருதுறை, ஒரு உணர்ச்சி, ஒருபாட்டு என்ற சங்ககாலமரபு இக்காலத்தில் தொடர் நிலைச் செய்யுள் மரபாக அமைந்தது. சிலம்பு, மேகலை கூட தொடர் நிலைக்காப்பியங்களாக அமைந்தன.

## 3. மொழிமரபு:–

சங்கமருவிய காலத்தில் வடமொழி இலக்கியமரபு அதிகரித்ததால் வடசொற்களும் அதிகளவில் எடுத்தாளப்பட்டன.

### உசாவியநூல்கள்


1. தமிழ் இலக்கிய வரலாற்றில் காலமும் கருத்தும் – *கலாநிதி. ஆ. வேலுப்பிள்ளை*
2. தமிழ் இலக்கியவரலாறு –*பேராசிரியர் வி. செல்வநாயகம்*
3. தமிழ் இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகள் *பேராசிரியர் ரா. சீனிவாசன்*
4. தமிழ் இலக்கிய வரலாறும் பாடநூற் தொகுப்பும் – *சாந்தையுரான்*

# புதுக்கவிதை

உயிரினங்களின் வளர்ச்சிப் பரிமாணத்தில் மாற்றம் ஒன்றுதான் மாறாதிருக்கின்றது. மாற்றம் அனைத்திற்கும் பொதுவானது. இது வாழ்வியலுக்கு மட்டுமன்றி கலைக்கும் பொருந்தும். தமிழிலக்கியமும் சங்க காலத்திலிருந்து சமீப காலம் வரைக்கும் உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பல்வேறுபட்ட மாற்றங்களைச் சந்தித்துக் கொண்டுதான் வந்திருக்கின்றது. புவியியலின் அமைப்பிற்கேற்ப வாழ்வியலை அமைத்து முதல் ~ கரு ~ உரிப்பொருளுக்கமைய தனித்தனிச் செய்யுள் வகுத்த சங்கப்புலவன், தொடர்ந்து வந்த காலத்தின் வாழ்வியல் மாற்றத்தால் அறக்கருத்துக்களைப் புகுத்தி தொடர்நிலைச் செய்யுள் அமைக்கின்றான். பிற்காலத்தில் கருத்தரித்த பக்தி இயக்கம் பதிக அமைப்பினைத் தோற்றுவிக்க சோழர் காலமோ காவியத்தினைப் பிரசவிக்கின்றது. நாயக்கமன்னர் காலத்தில் சிற்றிலக்கியங்கள் சிறப்பிடம் பெற, ஐரோப்பியரின் வருகையானது ஒட்டுமொத்தமான தமிழிலக்கியத்தின் பாதையினை முற்றுமுழுதாகத் திசை திருப்புகின்றது. நாவல், சிறுகதை, புதுக்கவிதை, கட்டுரை என்பன தமிழின் கருத்துலகத்திற்கு புதிய பரிமாணம் சேர்க்கின்றன. இதுவரை எந்த இலக்கிய வடிவமும் சந்திக்காத பலத்த எதிர்ப்பினைப் புதுக்கவிதை சந்திக்கின்றது. மரபு வாதிகளோடு துணிவாகப் போராடி வாகைசூடி, மகுடந்தரித்து, சிம்மாசனம்ஏறி, செங்கோல் பற்றுகின்றது.

### புதுக்கவிதையின் வரலாறு

மேலை நாட்டைச் சேர்ந்த எக்ஸ்ரா பவுண்ட் (Ezro Pound) என்பவரே புதுக்கவிதையின் தந்தையாவார். இவர் மரபுக்கவிதையின் இலக்கண வரம்புகளை இல்லாது ஒழித்தார். புதிய புதிய உத்திகளை அறிமுகஞ் செய்து மரபுக்கவிதையில் மாற்றங்களைக் கொண்டுவந்து புதுக்கவிதை எனும் வடிவத்தினைத் திட்டமிட்டு உருவாக்கினார். இவரிற்குப் பின்னர் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வால்ட்விட்மன் என்ற கவிஞர் எழுதிய ``புல்லின் இதழ்கள் (Leaves of grass) என்ற கவிதையானது மக்களிடையே வரவேற்பைப்பெற்றது. எனினும் டி.எஸ் எலியட்டின் "பாழ் நிலம்" (Waste Land) என்ற கவிதை நோபல் பரிசைப் பெற்றுக்கொண்டபோதுதான் உலக மக்கள் அனைவரின் அங்கீகாரமும் புதுக்கவிதைக்குக் கிட்டியது.

தமிழிலக்கியத்தின் பாதையினை செப்பனிட்ட மகாகவி பாரதியால் தமிழிலே புதுக்கவிதையின் பிரசவம் நிகழ்கின்றது. பாரதியின் மேலைப் புலத்தாக்கத்தால் "காட்சிகள்" என்ற வசனகவிதை தமிழிலே கலந்தது. பாரதிக்குப்பின்பு ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா போன்ற பலர் இத்துறையிலே ஆர்வம் காட்டினார்கள்.

### புதுக்கவிதை என்றால் என்ன?

காலங்காலமாக கட்டிக்காத்து வந்த இலக்கண மரபுகளிலிருந்து விலகி புதிய எளிமையும், இறுக்கமும் இணைந்த இலக்கிய வடிவமாக வந்துதித்ததே புதுக்கவிதையாகும். எதுகை, மோனை அணி அலங்காரங்கள், சீர், தளை, அடி, தொடைகளின் கட்டாயக் காப்புகள் என்பவற்றை துறந்ததாக புதுக்கவிதை புறப்பட்டது. ஆனால் இதுபற்றிய முழுமையினை உணர்ந்துகொள்ளாத பலர், வசனங்களை வரி வரியாக வெட்டி மேலிருந்து கீழாக எழுதுவதுதான் புதுக்கவிதையெனக் கற்பிதம் செய்து ஏதேதோ எழுதிக்குவித்தனர். வசனங்கள் கவிதைகளாக முடியாது. வசனத்தின் தொழில் விளக்குவது. கவிதையின் தொழில் உணர்த்துவது. இதனாற்றான் ஆங்கிலக்கவிஞன் *யீட்ஸ்* கவிதை என்பது சொற்களில் இல்லை. சொற்களுக்கு இடையில் இருக்கிறது என முழங்குகிறான்

(" Poetry is not in the words. It is in between the words" W.B .YEATS)

" பேச்சுச்சந்தம், அழுத்தம், உணர்வுநிலை இவற்றிற்கு ஏற்ப வரிகள் அமைய வேண்டும். கருத்தையும் சொல்லையும் இணைக்கும் உட்சந்தம் இருக்கவேண்டும். படிப்பவனை ஆழமாகப் பாதித்துக் கிளர்ச்சி அடையச்செய்யும்

MR. S. Muraleetharan
B.A (Hons)

கூர்மையான செறிவான வெளிப்பாடு இருக்க வேண்டும். நவீன உலகின் கூட்டுக்கலப்பான பிரச்சனைகளைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். இவ்வளவும் இருந்தால் அது அசல் புதுக்கவிதை இல்லையெனில் வெறும் வசனந்தான்'' என்ற புதுக்கவிதை பற்றிய அப்துல்ரகுமானின் வரைவிலக்கணமும் இங்கே குறிப்பிடத்தக்கது.

## புதுக்கவிதை உத்திகள்

எதைச் சொல்கிறோம்? என்பதை விட எப்படிச் சொல்கிறோம்? என்பதில்தான் இலக்கியத்தின் உயிர் தங்கியிருக்கின்றது. உள்ளடக்கத்தினை உணர்த்துகின்ற முறையினையே உத்தி என்பர். புதுக்கவிதையில் படிமம் (Image), குறியீடு (Symbol), அங்கதம் (Solire), முரண் (Panadox) என்ற நான்கு உத்திகளும் பிரதான உத்திகளாகவும், கட்டமைப்பு முறை, பெயரிடுகை, வினாவிடை, பேட்டி, புதுப்பொருள் விளக்கம் போன்ற வேறுபல உத்திகளும் பின்பற்றப்படுகின்றன.

சங்கஇலக்கியங்களிற் காணப்படுகின்ற உள்ளுறை உவமம், இறைச்சி என்பன குறியீட்டு உத்தியின் அன்றைய கால வடிவங்களாகும். கவிதையானது தான் கூறவந்த விடயத்தினை நேரடியாக உரைக்காது தொடர்புடைய ஒத்த இயல்புவாய்ந்த பொருளின் உதவியோடு இயம்புதலே கவிதைக் குறியீடாகும்.

பொறிகளின் வழியாக புறவளப் பொருட்களின் புலனுணர்வுத் தூண்டுதல்களால் மனதில் எழும் பிரதிபலிப்பே படிமம் ஆகும். கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றின் பின்னணியில் சங்க இலக்கியப்படிமங்கள் படைக்கப்பட்டுள்ளன. பொருள், கருத்து நிகழ்வு ஆகியவற்றின் பல்வேறு நிலைகளைப் படிமங்களாகப் படைத்துக்காட்டும் முறையைத் தமிழ்ப் புதக்கவிதையில் காணமுடியும்.

குறியீட்டு உத்தியையும் படிம உத்தியையும் பின்வரும் கவிதையூடாக வேறுபடுத்தி அறியலாம்.

" தீப மரத்தின்
தீக்கனி உண்ண
விட்டில் வந்தது
கனியோ
விட்டிலை உண்டது"

இங்கு விட்டிலானது நெருப்பின் மீது விழுந்து இறந்தது என்பது படிமமாகும். விடுதலை இந்தியாவை உணர்த்தும்போது அதுவே குறியீடாகிறது.

சிந்தனையைத்தூண்டிச் சிரிப்பை உருவாக்கும் முறையே அங்கதமாகும். புதுக் கவிதையில் அதிகமாக பாலியல் ரீதியான கவிதைகளே அங்கதச்சுவை பயக்கின்றன.

" இராமர் தடவி
அணில் கோடு பெற்றதேல்
சீதையைத்
தொட்டதே இல்லையா....?"

என்கிறான் நீலமணி என்றகவிஞன். ஒரேயொரு முறை தடவியதால் அணிலுக்கே இந்த நிலைமை என்றால், சீதையின் நிலை அவனுக்கு அங்கதம் விளைவிக்கின்றது.

ஒன்றுக்கொன்று எதிரான நிகழ்வுகளையோ, பொருளையோ கலந்து பாடுவதே முரண் எனப்படும். விலைமகள் ஒருத்தியின் ஆதங்கம் பின்வருமாறு முரண் உத்தியில் முற்றுப்பெறுகிறது.

" நாங்கள்
நிர்வாணத்தை விற்கின்றோம்
ஆடை வாங்குவதற்காக"

பொங்கிவரும் புதுயுகத்தில் புதுக்கவிதை என்ற போர் வாள் மனிதகுலம் மேம்பாட்டுக்காய் போராடி, ஒப்பில்லாத சமுதாயத்தை உருவாக்க முயற்சிப்பதே இலக்கிய உலகிற்கு புதுக்கவிதை ஆற்றும் அளப்பரிய தொண்டாகும்.

# வெண்புறாவும் வல்லூறுகளும்

நண்பர்களே....! நாட்டிலின்று " வெண்புறாவை வல்லூறு
சீண்டுகின்ற நாடகந்தான்" நாளும் - நாங்கள்
அன்பினுக்காய் தவமிருந்தால் வன்முறையில் வரங்கிடைக்கும்
அகிம்சையதன் மரணபலன் கேளும்

வேதனைகள் சொல்லியழ ஆதரவாய் யாருமில்லை
வெண்புறாவே இன்றெமது தேவை - நேற்று
தூதுவராய் வந்தவரும் சீதமதைத் தந்ததில்லை
துன்பமுற்று நெருங்குகிறோம் சாவை.

நல்லூரின் நாயகனே.....! வல்லூறுக் கூட்டமதன்
நரித்தனத்தால் வெண்புறாவும் மடியும் - அந்த
அல்லாவும் யேசுவும் எம் கொல்லாமைப் புத்தனும்
அருள் சொரிந்தால் வாழ்வெமக்கு விடியும்

ஆதி முதல் வாளெடுத்து அந்நியத்தை கொன்றழித்த
சாதியிலே வந்துதித்த வம்சம் - வெறும்
ஊதியத்தின் மதிப்பறிந்து உயிரிழக்கும் பரம்பரையே
ஊழியில் நாம் உருத்திரனின் அம்சம்

யுத்தத்தின் கோரத்தில் செத்தொழியும் சந்ததியின்
ரத்தத்திலா அமைப்பு வினையும் - இல்லை
புத்தமதம் போதித்த தத்துவத்தைப் புரிந்து கொண்டால்
சத்தியமாய் "ஓய்வெடுக்கும் அலையும் "

அரக்கமன உணர்வுகளை சிரமறுத்து எறிந்துவிட்டால்
அவனியிலே அவதரிக்கும் சாந்தி - நாமும்
விரத்தி நிலை கருவறையில் பிரசவிக்கும் நிலைவிடுத்து
புறப்படுவோம் வெண்புறாவை ஏந்தி!

சு. ஸ்ரீராம் 2002 கலை

# வேணு கொமினிக் கேஷன்

**வாகையடி,**
**இமையாணன் மேற்கு,**
**உடுப்பிட்டி.**



உள்நாடு:- 070-212602
வெளிநாடு:- 0094-70-212602

உரிமையாளர்:- நடராசா சுகதாஸ்

---

*யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்*
*கலை வர்த்தக மன்றத்தின்*
*" அரங்கம் " வெறியீட்டை வாழ்த்துகின்றோம்.*

# இரத்தின மாளிகை



**வல்வெட்டித்துறை.**
உரிமையாளர்:- ந. இராஜேஸ்வரன்

உங்களுக்கு தேவையான :........

- *பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள்*
- *அழகு சாதனப் பொருட்கள்*
- *பாதணிகள்*
- *அன்பளிப்புப் பொருட்கள்*
- *கண்ணாடி வகைகள்*
- *வாழ்த்துப்பாக்கள்*



அனைத்தையும் ஒரே இடத்திலும் குறைந்த விலையிலும் நிறைந்த தரத்திலும் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்



# பிரியங்கா ஸ்ரோர்ஸ்

**வல்வெட்டித்துறை வீதி, உடுப்பிட்டி**

உரிமையாளர்:- வ. கந்தசாமி

---

**அரங்கத்தை வாழ்த்துகின்றோம்**

உங்களுக்குத் தேவையான:-

- கட்டடப் பொருட்கள்
- இரும்புப் பொருட்கள்
- பலசரக்குப் பொருட்கள்
- தொலைத் தொடர்பு



ஆகிய அனைத்துக்கும் நாடவேண்டிய ஒரே நிறுவனம்

# மதுஷன் ஸ்ரோர்ஸ்

**உடுப்பிட்டி**

# -குப்த பேரரசர் காலமும் இந்து மறுமலர்ச்சியும்

வடஇந்திய வரலாற்றுக் காலங்களில் கி.பி. 320~550 வரையிலான காலப்பகுதி குப்தர் காலமாகும். இக்காலப்பகுதியில் முற்கூற்றுப் பகுதியில் பௌத்த மதசெல்வாக்கு காணப்பட பிற்கூற்றுப் பகுதியில் இந்து மதத்தின் செல்வாக்கு மிகுந்திருந்ததனால் வட இந்திய வரலாற்றுக் காலங்களில் "இந்து சமய மறுமலர்ச்சிக்காலம்" என அழைக்கப்படுகின்றது. தென்னிந்திய வரலாற்றுக் காலங்களில் பல்லவர் காலத்திற்கு நிகரான காலமாக விளங்கும் குப்தர்காலம் சோழர் காலத்தினைப் போன்று சகல துறைகளிலும் நிறைவுபெற்ற காலமாக விளங்குவதனால் வட இந்திய வரலாற்றுக் காலங்களில் 'பொற்காலம்' என அழைக்கப்படுகின்றது.

### குப்தர் காலம் பற்றி அறிவதற்கு துணை புரியும் சான்றுகள்

1. இலக்கியங்கள்
2 தொல் பொருட்கள்
3. கோயில்கள், கட்டடங்கள், சிற்பங்கள், ஓவியங்கள்
4. முத்திரைகள் அல்லது இலட்சனைகள்
5 நாணயங்கள்
6 கல்வெட்டுக்கள்
7. பிறநாட்டார் குறிப்புக்கள்

இவ்வகையில் குப்தர் காலத்தில் காணப்பட்ட இந்து மத சிறப்பம்சங்களை மேல்வரும் விடயங்களின் அடிப்படையில் தனித்தனியே ஆராய்வோம்.

அ. அரச சின்னங்களும் அரச ஆதரவும் (அரசியல் நிலை)
ஆ. சமுதாய நிலை
இ. நூல்கள்
ஈ). சமய தத்துவ சிந்தனை.
உ). சமய வளர்ச்சி
ஊ). கலைகள்

### அரச சின்னங்களும் அரச ஆதரவும்

குப்தர் கால இந்து சமய வளர்ச்சிக்கு மன்னர்களது பணிகள் அளப்பரியவை ஆகும். இவ்வகையில் மகாராஜ குப்தன், கடோட் கஜகுப்தன், சந்திரகுப்தன், சமுத்திரகுப்தன், 2ம் சந்திர குப்தன் (விக்கிரமாதித்தன்) குமாரகுப்தன், ஸ்கந்தகுப்தன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

குப்த பேரரசு கி.பி 320 ~ 550 வரை கொண்ட காலமாகும். இம்மன்னர்களது ஆட்சி கங்கைச் சமவெளியில் அமைந்திருந்தது. இவர்களது ஆதிக்கம் வட இந்தியா முழுவதிலும் பரவியிருந்தது. குப்தர்காலத்தில் இந்து கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த ஒரு புதிய யுகம் தோன்றியது என்பதனை பின்வருமாறு வரையறுக்கலாம்.

I. குப்தர் காலத்தில் சைவம், வைணவம், ஸ்காந்தம் ஆகிய நெறிகள் இந்திய துணைக் கண்டம் முழுவதிலும் பரவியிருந்ததனால் இக்காலம் இந்து சமயத்தின் மறுமலர்ச்சிக் காலம் எனப்படுகின்றது.
II. சந்திர குப்தன் என்பவது ஆட்சிக்காலத்தில் எழுச்சிபெற்ற கோயில்களும் நாணயங்களும் அக்கால சமயக் கொள்கைகளும் இந்துமத மறுமலர்ச்சிக்கு சிறந்த சான்றுகள் ஆகும். அற நீதிக்கு முன்னுரிமை கொடுத்த இம்மன்னது

**P.JOTHEES WARN** B.A Dip. in Ed.

ஆட்சிக்காலத்திலே இந்து மத மறுமலர்ச்சி உன்னத நிலைஅடைந்தது.

III. சந்திர குப்தனது (மகாராஜதிராஜன்) ஆட்சிக் காலத்தில் இந்துமத அடிப்படைவழிபாடு, இதிகாச புராணத் தொகுப்புக்கள் இடம்பெற்றன. இவன் அஸ்வமேத யாகத்தை பேரரசின் வெற்றி விழாவாகக் கொண்டாடினான். இந்துப் பண்பாட்டை வளர்த்தெடுத்த இம்மன்னன் தனது ஆட்சிக் காலத்தில் சமய உரையாடல்களில் அதிக நேரம் செலவிட்டதனால் கட்டடம், சிற்பம், ஓவியம், போன்றகலைகள் சிறப்புநிலை அடைந்திருந்தன.

IV குப்தர் காலப் பகுதியிலேயே இந்துமதத்தின் பிரதான நூல்கள் பல தோற்றம்பெற்றன. இவற்றினை மன்னர்கள் ஆதரித்திருந்தனர் இதற்குச் சான்றாக 2ம் சந்திர குப்தனின் (விக்கிரமாதித்தன்) ஆட்சிக் காலத்தில் காளிதாசன் முதற்கொண்டு நவமணிகள் எனப்போற்றப்படும் இலக்கிய விற்பன்னர்கள் வாழ்ந்து இலக்கியங்களைப் படைத்தனர்.

V அரசர்கள் வைதீக மரபைப் பேணியதுடன் பிராமணர்களுக்கு தானம் வழங்கியிருந்தனர். வைதீகக் கல்விக்கு முதன்மை வழங்கியிருந்தனர்

VI)கோயில்களுக்கும் சமய நிறுவனங்களுக்கும் ஆதரவு வழங்கியும் குப்த மன்னர் சமயச் சின்னங்களை தங்களது அடையாளச் சின்னங்களாக பொறித்திருந்தமை, அக்கால இந்து சமயத்தின் சிறப்பினையே சுட்டுகின்றன. இதற்குச் சான்றாக பின்வருவன குறிப்பிடப்படுகின்றது.

a) குப்த மன்னர்களும் அவர்களது ஆதிக்கத்தில் கீழிருந்த சிற்றரசர்களும் தாம் வெயியிட்ட நாணயங்களில் இந்து தெய்வங்களின் உருவங்களையும்,குறியீடுகளையும், விருதுப் பெயர்களையும் பொறித்திருந்தனர்.

b சந்திர குப்தனது நாணயங்களில் விஷ்ணு, கருடக் கொடி பொறிக்கப்பட்டிருந்தன.

e பல மன்னர்கள் தமது நாணயங்களில் தம்மை பரமபாகவதர், பரமேஸ்வரர் எனும் பட்டங்களைப் பொறித்திருந்தனர்.

d வில்வீர நாணயங்களில் விஷ்ணுவின் திருநாமங்களில் ஒன்றாகிய அப்ரதிரதன் எனும் பட்டத்தினை சந்திரகுப்தன் தரித்தான். இப்பட்டத்தை 2ம் சந்திர குப்தனும் சூட்டினான்

e) சந்திர குப்தனது நாணயங்கள் சிலவற்றில் அவர் வீற்றிருந்து வீணை வாசிப்பது போல பொறிக்கப்பட்டுள்ளது. இவரது வேறொரு நாணயத்தில் அஸ்வ மேத யாகத்திற்கு புத்துயிர் அளித்தவர் எனவும் பொறிக்கப்பட்டுள்ளது.

F) 2ம் சந்திர குப்தனுடைய தங்க நாணயங்கள் சிலவற்றில் "தேவஸ்ரீ மகா ராஜாதிராஜஸ்ரீ சந்திர குப்தர்" எனும் சொல்லினைக் காணலாம் இதிலுள்ள "தேவா" எனும் சொல் ஆட்சி தெய்வீகத் தன்மையினையே புலப்படுத்தி நிற்கின்றது.

g) குமார குப்தனது நாணயங்களில் முருகக்கடவுளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கும் தன்மையினை மயிலின் உருவங்கள் குறிக்கப்பட்ட நாணயங்கள் ஆதாரப்படுத்துகின்றன. இவனது வேறொரு நாணயத்தில் தன்னை நரசிம்மரின் அவதாரம் என வர்ணித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### ஆ. சமுதாய நிலைகள்

I. பிராமணர், வைசிகர், சத்திரியர், சூத்திரர் எனும் நான்கு வர்ணத்தினர் காணப்பட்டனர். வர்ணப்பாகுபாடு மிகக் கடுமையான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருந்தபொழுதிலும் திருமணவிதிகளில் நெகிழ்ச்சித் தன்மை காணப்பட்டிருந்தது. இதற்கு காரணம் பிராமணர் தமக்கு வகுக்கப்பட்ட கடமைகளிலிருந்து விலகி படைத்தொழிலில் சேர்ந்தமையும் வைசிகரும் சூத்திரரும் அவ்வப்போது வலிமைமிக்க ஆட்சியாளர்களாக மாறியிருந்தமையும் ஆகும்.

II. குப்தர் காலத்தில் வெளிநாட்டிலிருந்து வந்து ஆட்சி புரிந்தோரும் அவர்களோடு வந்தோர்களும் வர்ண அமைப்புக்குள் சேர்த்துக் கொள்வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் அவர்கள் சத்திரிய வர்ணத்தினுள் உள்வாங்கப்பட்டனர் இவ்வாறு உள்வாங்கப்பட்டவர்களை "சத்திரியபந்து" என அழைத்தனர்.

III. குப்தர் காலப் பெண்கள் ஆண்களைப் போன்றே கல்வியறிவில் மேன்மைபெற்றிருந்தனர். அரச குடும்பத்தினர் அரசாட்சி நிர்வாகத்தில் பங்கு பற்றினர். இசை, நடனம் முதலிய கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர். சுயம்வர முறையில் கணவரைத் தேர்ந்தெடுத்தனர். ஆயினும் அவர்கள் ஆண்களிலேயே தங்கியிருக்க வேண்டுமென "மனுஸ்மிருதி" குறிப்பிட்டு இருந்தது.

IV) இக்காலத்தில் நாலந்தா, பீகார், காசி போன்ற இடங்களில் உயர்கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சமஸ்கிருதம் கல்வி மொழியாக விளங்கியது. இங்கு புராணங்கள், இதிகாசங்கள், ஸ்மிருதிகள், சோதிடம், வைத்தியம், தனுர் வேதம் போன்ற இந்து நூல்கள் பயிலப்பட்டு வந்திருந்தன. சமஸ்கிருதக் கல்வி புத்துயிர் பெற்றிருந்தது.

V பிரமச்சாரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் ஆகிய படிநிலைகள் சமுதாயத்தில் காணப்பட்டிருந்தன. இச் சமுதாயம் தன்னிறைவு பெற்ற பொருளாதார அமைப்பினைக் கொண்டிருந்தது.

### இ). சமய வளர்ச்சி

நவீன காலத்து இந்து சமயம், இந்து கலாசாரம் என்பன குப்தர் கால சமயவளர்ச்சிகளை ஆதாரமாக கொண்டவை ஆகும். சமய சிந்தனைகள் இலக்கியங்கள், நுண்கலைகள், விஞ்ஞானம் ஆகிய அம்சங்களில் இக்காலம் பூரண வளர்ச்சி பெற்றிருந்தது. குப்தர்கால சமய அரசியல் செல்வாக்கு இந்தியத் துணைக் கண்டத்தில் ஏனைய பகுதிகளிலும் அதற்கு வெளியே குறிப்பாக சுவர்ண பூமியிலுள்ள தேசங்களிலும் பரவலடைந்திருந்தது.

II முழுமுதற் கடவுள் வழிபாட்டை அடிப்படையாகக் கொண்ட சைவம், வைணவம், கௌமாரம் போன்றன வளர்ச்சி பெற்ற சிறப்புமிக்க காலமாக குப்தர்காலம் விளங்குகின்றது.

III அரசர், வணிகர், பிரதானிகள் ஆகியோரை பொறுத்த வரையில் துணைக் கண்டத்தில் பெரும்பாலானோர் இந்து சமயத்தை பின்பற்றினர்.

IV வைதீகமும் பொது வழக்கும் சங்கமமாகி இந்து கலாசாரமும் வழிபாட்டு முறைகளும் விருத்தி பெற்றிருந்தன மன்னரும் தமது அரச முத்திரைகளில் சமய சின்னங்களை பொறித்திருந்தனர். சமய நெறிகள் ஆலய வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டதனால் பல கோயில்களும் இக் காலத்தில் எழுச்சி பெற்றிருந்தன.

V ஆகமமுறை வழிபாட்டு நெறியினை வரையறை செய்யும் ஆகமமரபு பிற்காலத்தில் உருவாக்கப்பட்டது. சிறப்பாக சிவன், திருமால், முருகன் போன்ற தெய்வங்களுக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டன. இவை குப்தர் கால சைவ, வைணவ,கௌமார சமய நெறிகளின் வளர்ச்சியினையே எடுத்துக் காட்டுகின்றன. மேலும் அக்காலத்தில் சூரிய வழிபாடு சிறப்படைந்ததற்கான சாசனங்கள் பல கிடைத்துள்ளன.

VI வடஇந்தியாவிலும் வேதகாலத்தின் பின்பு ஓரளவு நலிவடைந்த இந்து மதமானது மறுமலர்ச்சி பெற்ற காலமாக குப்தர்காலம் விளங்குகின்றது.

VII குப்தர் காலத்தில் சைவ வைணவ நெறிகள் மேன்மை பெற்றிருந்த அதே வேளை ஒவ்வொரு மதப்பிரிவிலும் பிரிவுகள் காணப்பட்டிருந்தன.

1. சைவம் - பாசுபதர் காளாமுகர் பைரவர்
2. வைணவம் - பாகவதர், பாஞ்சராத்திரர்
3. சமணம் - சுவேதம்பரர், திகம்பரர்
4. பௌத்தம் - சௌகதர், ஆசீவகர்

VIII குப்தர் காலத்தில் சாசனங்களில் பாசுபதம் பற்றியபல குறிப்புக்கள் காணப்படுகின்றன. அக்கால பாசுபத ஆச்சாரிகளில் ஒருவராகிய உத்தியோதகாரர் என்பவர் வாத்ஸல்யாயரது நியாய சூத்திரத்திற்கு உரை விளக்கம் வழங்கினர்

IX குப்தர் காலத்தில் மும்மூர்த்தி வழிபாடு சிறப்பிடம் பெற்றது இக்காலத்தில் வாழ்ந்த உயர்வர்க்கத்தினரும் அரச அதிகாரிகளும் சிவ வழிபாட்டை மேற்கொண்டனர்.

X விக்கிரமாதித்தனது அமைச்சன் உதய கிரியில் குடை வரைக் கோயிலை சிவனுக்கு அமைத்திருந்தார்.

XI இக்காலத்தில் சிவன், விஷ்ணு, பார்வதி, சூரியன், கார்த்திகேயன் போன்ற பல தெய்வங்களிற்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

XII சீன யாத்திரியனாகிய ஹுவான்சங் தனது வரலாற்றுக் குறிப்பில் குப்தர் காலப்பகுதியில் மகாமகத் தீர்த்த விழாவை நேரில் பார்த்து அதன் மகிமையினையும் ஒற்றுமைப்பாட்டினையும் புகழ்திருந்தார்.

XIII சீன யாத்திரிகனாகிய பாஹியன் தனது வரலாற்றுக்குறிப்பிலே கங்கை நதிப்பள்ளத் தாக்கில் சமயக் கிரியைகளோடு தெய்வப் படிமங்களில் திருவுலாக்களும், தானங்களும் நிகழ்ந்திருந்தது என குறிப்பிட்டுள்ளார்.

XIX மேலும் குப்தர் கால கோயில் கட்டடங்களும் இந்து சிற்பங்களும் புராண இதிகாச கதைகளை விளக்கும் ஓவியங்கள் குப்தர்கால இந்துமத மறுமலர்ச்சிச் சிறப்புக்களையே சுட்டுகின்றன.

### ஈ. கலைகள்

குப்தர்காலமானது கலைகளின் வளர்ச்சியில் உதய காலமாகவே விளங்கியிருந்தது. கலைகளின் மெய்ப் பொருளினை உணர்ந்து அழகியல் உணர்வின் முதிர்ச்சி நிலையோடு நிதானமாகவும் செழுமையாகவும் கலை வடிவங்கள் கையாளப்பட்ட ஒரு காலமாக குப்தர்காலம் விளங்கியது,

இக்காலப்பகுதியிலே வடக்கு, தெற்குப் பிரதேசங்களில் ஆங்காங்கே அமைவு பெற்ற இக்கலை வடிவங்களானவையனைத்துக் காலங்களிற்கும் பொருத்தப்பாடுடையனவாக அமைந்தது மட்டுமன்றி சிறப்பாக இந்துப்பண்பாடு பரவிய தென்கிழக்காசிய நாடுகளிலும் முன்மாதிரியாக அமைவு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### (a) கட்டடக் கலை

குப்தர்காலக் கலை வடிவங்களில் கட்டடக்கலை பற்றி நோக்கும் பொழுது பல்லவர், சோழர் காலத்தினைப் போன்று உயர்த்த கலையம் சங்களைக் கொண்ட கோயில்கள் தோற்றம் பெற்றிருக்கவில்லை. இக்கால கோயில்கள் அளவில் சிறியனவாக அமைந்தாலும் நான்கு விதமான பிரிவுகளை கொண்டுள்ளது அவையாவன.

I. முதலாம் பிரிவு ~ விஷ்ணுவிற்குரியது.
உ+ம் சாஞ்சிகோயில், எறான் கோயில் தைகவா கோயில்

II இரண்டாம் பிரிவு :- பார்வதிக்குரியது
உ+ம்: நாச்சினா கோயில், பூமரா கோயில்

III மூன்றாம் பிரிவு ~ தேவதர் கோயில்

இது தஷாவதாரக் கோயில் அல்லது பஞ்சதனக்கோயில் என அழைக்கப்படும் இங்கு விநாயகர், பார்வதி, சிவன், விஷ்ணு, சூரியன் ஆகிய ஐந்து தெய்வங்களும் இடம் பெறுகின்றன. இக்கோயிலின் மூலமூர்த்தி விஷ்ணு ஆவார்.

IV நான்காம் பிரிவு :- பித்ராக்கன் கோயில்

இங்கு இதிகாச புராணக் கூற்றுக்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இக்கால கோயில்களனைத்தும் மூன்று முக்கியமான அம்சங்களைக் கொண்டிருந்தன. அவையாவன

a. சதுரவடிவிலான இறையகம் (மூலஸ்தானம்)
b. முகமண்டபம்

இறையகத்திற்கும் முகமண்டபத்திற்குமிடையிலான தாழ்வாரம்

இம்மூன்று அம்சங்களுமே குப்தர்கால கோயில்களின் முக்கிய அம்சங்களாகும் சில இடங்களிலே இவற்றைச் சூழ்ந்து திருநடன மாளிகைகளும் தூண்கள் பொருந்திய மேடைகளுடன் கூடிய பிரகாரங்களும் (வீதிகள்) காணப்பட்டன. கோயில் சுவர்களிலே பல வகைப்பட்ட அலங்காரங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

குப்தர்கால கட்டடக்கலைப் பாணியினை மையமாக வைத்தே பிற்காலத்தில் சிற்ப சாஸ்திரங்கள் இந்துக் கோயில்களை நாகரம், வேசரம், திராவிடம் என மூன்று வகைப்படுத்தியிருந்தமையும் காண முடிகின்றது.

### சிற்பக்கலை

குப்தர் காலத்தில் சிற்பக்கலையும் உயர்நிலை பெற்றிருந்தது. இச்சிற்பங்கள் பெரும்பாலும் கல், உலோகம் போன்றவற்றினால் உருவாக்கப் பட்டிருந்தன. பௌத்தம், இந்துமதம், என்பவற்றிற்கான படிமங்கள் கல்லாலும் செம்பாலும் உருவாக்கப்பட்டன. உலோகச் சிற்பங்களில் சமண

பௌத்தமதங்களைச் சேர்ந்த சிற்பங்கள் மிகச் சிறப்பானவை ஆகும்.

"சாரநாத்" எனும் இடத்தில் பல புத்த சிலைகள் கண்டெடுக்கப்பட்டிருந்தன "நாலந்தாவில்" எண்பதடி உயரமான புத்தரின் செம்புப்படிமம் உள்ளது. "சுல்த்தான் கஜ்" எனும் இடத்தில் புத்தரது ஏழரையடி உயரமான வெண்கலப் படிமமொன்றுள்ளது.

குப்தர்காலச் சிற்பங்களில் சிறப்புயாதெனில் அக்கால சிற்பிகள் தமக் கென தனியான பாணியில் சிற்பங்களை அமைத்திருந்தமை ஆகும். அக்காலத்தில் சிவன், விஷ்ணு, விநாயகர், குமாரக்கடவுள், திருமால் அவதாரங்கள் போன்றன அழகிய சிற்பங்களாக அமைக்கப்பட்டிருந்தன.

'ஜான்ஸி" மாவட்டத்தில் "தியோகர்" ஆலயத்தில் சிவன், விஷ்ணு, சிற்பங்கள் கோயிற் சுவர்களில் அழகுமிக்கனவாகப் பொறிக்கப் பட்டிருந்தன. இவை வளர்ச்சி பெற்ற நிலையிலும் கம்பீரம், கவர்ச்சி, தெய்வீகம் என்பன பொருந்தியனவாகவும் ஆன்மீக வெளிப்பாட்டை புலப்படுத்துவனவாகவும் அமைந்திருந்தன.

குப்தர்கால கோயில்களில் மூன்றாம் பிரிவைச் சேர்ந்த தேவதர் கோயிலில் விநாயகர், பார்வதி, சிவன், விஷ்ணு, சூரியன் எனும் ஐந்து தெய்வங்களும் முக்கிய இடம் பெற்று சிற்பங்களாக அமைக்கப்பட் டிருந்தமையும் இங்கு மூலமூர்த்தியாக விஷ்ணு பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தமையும் இக்கால சிற்பக் கலையின் சிறப்பினையே சுட்டுகின்றது.

## C ஓவியக்கலை

குப்தர்காலத்தில் ஓவியக்கலையும் சிறப்பிடம் பெற்றிருந்தது. இதற்குச் சான்றாக இக்கால ஆலயங்களில் இதிகாசப் புராணக் கதைகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருந்ததனையும் உலகப் பிரசித்தி பெற்ற அஜந்தா ஓவியத்தினையும் குறிப்பிடலாம்.

இக்கால அஜந்தா ஓவியமானது ஓவியக் கலையின் முதிர்ச்சி நிலையினைக் காட்டுவதுடன் இந்திய ஓவியக் கலையின் பரிநாம வளர்ச்சியினை உணர்த்தும்பெருந் தொகையான ஓவியங்களாகவும் இவை விளங்குவதனை அவதானிக்க முடிகின்றது.

அஜந்தா ஓவியங்களில் பல பௌத்த சமயம் சார்ந்தவை ஆகும். அதாவது பௌத்த மதத்துடனும் புத்தரது வாழ்க்கையுடனும் தொடர்புபட்ட கதைகள் இவ் ஓவியங்களில் பிரதான அம்சங்களாக விளங்குகின்றன. இங்குள்ள ஓவியங்களில் குப்தரின் உருவங்கள் அவரின் வாழ்க்கையில் இடம்பெற்ற நிகழ்வுகள், யாதகக் கதைச் செய்திகள் கருப்பொருளாக அமைகின்றன.

அஜந்தா ஓவியங்களில் மனித உருவங்கள் அன்றாட வாழ்க்கை, இயற்கைச் சூழல், உயிரினங்கள் போன்றன. சிறப்பாக தீட்டப்பட்டுள்ளன. ஆயினும் தெய்வங்கள், முனிவர்கள் என்போரின் ஓவியங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இவ் ஓவியங்கள் குப்தர்கால கலாசாரங்களிற்கும் வாழ்க்கை நிலைக்கும் முக்கியத்துவம் வழங்குவனவாகவே அமைகின்றன.

## உ/ குப்தர்கால நூல்கள்

குப்தர்காலமானது இந்து இலக்கியவரலாற்றிலே உச்சக்கட்ட காலமாகத் திகழ்ந்தது. இக்காலத்தில் இந்து சமயப்பாடல்கள் பல்வகைப்பட்ட இலக்கண நூல்கள், இலக்கியங்கள், நீதிநூல்கள் சமயநூல்கள், நாடகநூல்கள் எழுச்சி பெற்றிருந்தன. மகாபாரதம் இராமாயணம் போன்றவை இறுதி வடிவம் பெற்று நாடெங்கும் செல்வாக்குப் பெற்றிருந்தன. இவையனைத்தும் இந்துப் பண்பாட்டின் பல்துறை சார்ந்த இலட்சியங்கள் உள்ளடக்கிய கருவூலங்களாக அமைந்திருந்தன.

சமஸ்கிருதம் தேவபாஷையாக கருதப்பட்டது. சூத்திரவடிவிலான சமய இலக்கியங்கள் பல தொகுக்கப்பட்டன. வாயுபுராணம் மச்சய புராணம் போன்றன தோற்றம் பெற்றன அறுவகைத் தரிசனங்களின் விருத்தியுரைகளும் சிறுநூல்களும் எழுந்தன. ஸ்மிருதிகளில் ஞாஞ்ஞவல்கியர் ஸ்மிருதி, நாரதஸ்மிருதி, கார்த்தியாயணர் ஸ்மிருதி பிரகஸ்பதிமிருதி விஷ்ணுஸ்மிருதி என்பன தோற்றம் பெற்றன.

இவைதவிர பிராமண, பௌத்த சமய இலக்கியங்கள் பல இயற்றப்பட்டன. ''ஜைமினியின்'' பூர்வ மீமாஞ்சைக்கு உரைவிளக்கம் எழுதப்பட்டன. மேலும் ஈஸ்வரகிருஷ்ணரின் சாங்கிய காரிகை வாத்ஸ்ல்யாயனரின் நியாய பாஷ்யம் எழுச்சி பெற்றிருந்தன. பௌத்தர்களும் பாளிமொழியையும் வடமொழியையும் மேற்கொண்டிருந்தனர்.

இக்காலத்தில் வரலாற்றுப் புகழ்பெற்ற காலத்தால் அழியாத சிறப்புப் பெற்ற காளிதாச மகாகவியின் சாகுந்தலம், இரகுவம்சம், குமாரசம்பவம் போன்ற நூல்கள் தோற்றம் பெற்றன. இந்நூல்களில் கல்வி, கலாசாரங்கள் முழுமையாக பிரதிபலித்ததுடன் உலக நோக்கும் சம்ஸ்கிருதச் செல்வாக்கும் காணப்பட்டிருந்தது.

மேலும் இக்காலத்தில் மிரிச்சகடிகவு, சாகுந்தலம், மேகதூதம், மாளவிகா அக்கினி மித்திரம், விக்கிரம ஊர்வசியம், இருது சம்காரம் போன்ற நாடக நூல்களும் சிறு காப்பியங்களும் எழுச்சி பெற்றன.

இக்காலத்தில் பாரவி என்பவர் ஹிராதார் ஜீனியத்தையும் மாகன் என்பவர் சிசுபால வதத்தையும், ஸ்ரீகர்ஷர் நைடதத்தினையும் ஜயதேவர் கீத கோவிந்தத்தையும் அருளியிருந்தனர்.

இக்காலத்தில் வடமொழி இலக்கியத்தில் பல பக்திப்பாடல்கள் எழுந்தன. இராமன், சூரியன், கிருஷ்ணன், சிவன், துர்க்கை ஆகிய தெய்வங்களின் மீது பல பக்திப்பாடல்கள் பாடப்பட்டிருந்தன.

மேலும் இக்காலத்தில் காமந்தகனது நீதிசாரம் (நீதி நூல்) தண்டியாசிரியரின் தண்டியலங்காரம் (அணி இலக்கணநூல்) அமரசேகரன் தொகுத்த அமரசேகரம் (நிகண்டு) சந்திரகோமி எழுதிய சந்திர வியாகரணம் (இலக்கணநூல்) ஆரியபட்டர் எழுதிய ஆரியப்பட்டியம் (வானியல் நூல்) போன்றன எழுச்சி பெற்றன. இக்காலத்தில் வாழ்ந்த புகழ் மிக்க விஞ்ஞானிகளில் ஆரியப்பட்டர், வராக மிதிரர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

### ஊ / குப்தர்கால தத்துவ சிந்தனை

குப்தர் காலத்திலெழுந்த தத்துவ சிந்தனைகள் பற்றிநோக்கும் பொழுது அங்கு உபநிடத சிந்தனை மரபுகள் காணப்பட்டிருத்தன இக்கால நூல்களிலும், உரைநூல்களிலும் பிரமம், ஆன்மா, பிரபஞ்சம், வினைப்பயன் போன்ற உபநிடத சிந்தனை மரபுகள் காணப்பட்டிருந்ததுடன் அக்கால பக்திப்பாடல்களில் தத்துவக் கருத்துக்களும் வேதாந்த கருத்துக்களும் உள்ளடக்கப்பட்டிருந்ததனைக் காணலாம்.

குப்தர் காலத்தில் அறுவகைத் தரிசனங்களின் விருத்தி உரைகளும் சிறு நூல்கள் எழுச்சி பெற்றன எனவே அவற்றில் காணப்படும் பின்வரும் தத்துவக் கருத்துக்களினை நாம் அக்கால தத்துவசிந்தனை மரபுகள் என்றே வரையறுக்கலாம். அவையாவன சாங்கீயம், யோகம், நியாயம், வைசேடிகம், உத்தரமீமாஞ்சை, பூர்வமீமாஞ்சை, என்பனவாகும்.

#### சாங்கியம்

சாங்கியம் என்பது வேதம் கூறும் மூலப்பொருள் பற்றிய பூரண அறிவைத் தருகின்றது. இதன் கோட்பாடு அறிவே சொரூபமான புருடன் அறிவற்ற மாற்றமடையும் பொருளாகிய அசேதனம் (பிரகிருதி) ஆகிய மூலப் பொருட்கள் இரண்டு என்பதாகும். இவர்களது உயிர்பற்றிய கொள்கை சித்தாந்திகளை ஒத்ததாகும்.

#### யோகம்

யோகம் சாங்கியத்தோடு ஒத்துச் செல்கின்றது சாங்கியர் கடவுள் கொள்ளையை ஏற்பதில்லை, ஆனால் யோகம் கடவுள் கொள்ளையை ஏற்கின்றது சித்தசுத்தி, ஏற்பட்டு நான் எனது எனும் அறிவு ஒழிதலே ''யோகமாகும்'' இது இயமம் முதல் சமாதி ஈறாக உள்ள எண்வகைப் படிமுறைகளை கொண்டதாகும்.

#### வைசேடிகம்

வைசேடிகம் உயிரும் உலகமும் அதிலுள்ள பொருட்களும் உண்மை எனக்கூறும் பொருட்கள் அழியும் தன்மை உடையவை எனக் கூறும் இவர்கள் அவற்றை உற்பத்தி செய்யும் அணுக்கள்

அழிவடையாது எனக் கூறுவர் உலகின் தோற்றத்திற்கு அணுக்களே காரணம் அணுக்கள் அநாதியானவை இறைவன் அவற்றை கொண்டு உலகை உற்பத்தி செய்கின்றார் எனக் கூறுவர் .

### நியாயம்

வைசேடிகத்தைப் போன்றே நியாயமும் உலகத்தோற்றத்திற்கு அணுவே காரணம் என்கின்றது இவர்கள் ஆன்மாவை நித்தியமான பொருள் என்றும் கூறுவர் ஆன்மா உணர்வு கெட்டு நிற்கும் நிலையே முத்திநிலை என்பர் இவர்கள் கடவுட் கொள்கையை ஏற்பர்.

### மீமாஞ்சை

மீமாஞ்சகர் கடவுட் கொள்கைளை ஏற்பதுடன் மூலப்பொருள் பல என்றும் உயிர்கள் பல என்றும் கூறுவர் இவர்கள் கன்மத்தை காமியகன்மம், பிரசித்தகன்மம், நித்தியகன்மம் என வகுப்பர் முதலிரு கன்மங்களை தவிர்ப்பதும் நித்தியகன்மத்தை மேற்கொள்ளுவதே முத்தியடைய வழியென்பர் இவர்கள் கன்மத்திற்கு முதன்மை வழங்கியிருந்த பொழுதிலும் ஞானமும் தேவை என்பதனையும் வலியுறுத்துவர்.

மேற்குறித்த தத்துவ சிந்தனை மரபுகள் குப்தர்காலத்தில் காணப்பட்டிருந்ததுடன் இச் சிந்தனை மரபுகள் பக்திநெறி வளர்ச்சியோடு இந்து நெறியை வளர்த்திருந்ததனையும் காணமுடிகின்றது.

REFERENCE

1. *A. HISTDRY OF INDIA*
K.A ANTONOTYA G.A BONGARD - LEVIN

2. THE OXFORD HISTORY OF INDIA
VINCENT . A. SMITH

3. வியக்கத்தகு இந்தியா
A/L பஷாம்

4. இந்துக்கலைக் களஞ்சியம்

ஒரு மனித சமுதாயத்தை ஸ்திரமான அஸ்திவராத்தின் மீது என்றென்றும் நிலைநிறுத்தி வைத்திருப்பது, அந்த சமுதாயத்தின் பூர்வீக இதிகாசங்களும் புராணங்களுமாகும்

- *சுப்பிரமணிய சிவா*

பிறரை நலியாமலும், மோசம் செய்யாமலும், நேரான வழியில் ஏராளமான பொருள் சம்பாதிக்கும் வழிகளை மக்களுக்கு எடுத்துக் காட்டுவது அறிஞர்களின் கடமையாகும்.

- *ஞானபானு*

# இந்தியதத்துவங்களின் வளர்ச்சிக்கு உபநிடதங்களின் பங்களிப்பு

பிரஸ்தான திரயங்கள் மூன்று அவையாவன பிரம்மசூத்திரம், பகவத்கீதை, உபநிடதங்கள் என்பவை ஆகும். இவற்றுள் உபநிடதம் பற்றி நோக்கும் பொழுது உபநிடதம் என்பதன் பொருள் குருவிற்கு அருகே சீடன் அமர்ந்து அவர் கூறுகின்ற அறிவு பூர்வமான விடயங்களை கேட்டு தெளிதல் ஆகும். உபநிடதங்கள் வேதாந்தம், வேதச்சிரசு, இரகசியம், மறைமுடிவு போன்ற மறுபெயர்களினால் அழைக்கப்படுகின்றது. இவற்றின் காலம் கி.மு. 1000 தொடக்கம் கி.பி. 700 வரை ஆகும். வேதகால மக்கள் பல தெய்வங்களை வழிபட்டு வந்திருந்தனர். இவ்வகையில் வர்ணனைப் போன்ற உயர்ந்த தெய்வங்களும் இந்திரனைப் போன்ற காமுக தெய்வங்களும் வழிபடப்பட்டிருந்தன. இத்தகைய சூழ்நிலையிலே மக்கள் எதனை வழிபடுவது எதனை நம்புவது என மயங்கி நின்ற நிலையில் இறைவன் ஒருவனே அவனே பரப்பிரமம் என கூற எழுந்தருளியவையே உபநிடதங்களாகும் இவ்வாறு விளங்கும் உபநிடதங்கள் பிற்கால தத்துவங்களின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்திருந்தன.

தத்துவம் என்பது உண்மை பற்றியது, ஆராய்ச்சி பற்றியது. ஆராய்ச்சியும் ஆராய்ச்சி பூர்வமான முடிவுகளையும் கொண்டது காரண காரிய அடிப்படையில் உண்மைகளை நிறுவுவது சந்தேகத்தை அடித்தளமாகக் கொண்ட வினாக்களும் அதற்கு வழங்கப்பட்ட உண்மையான விடைகளுமே தத்துவம் ஆகும். இவ்வகையில் உபநிடதங்களானவை இந்திய தத்துவங்களாகிய பகவத்கீதை, ஐவகை தரிசனங்கள், வேதாந்தம், சித்தாந்தம், சமணம், பௌத்தம், போன்றவற்றின் எழுச்சிக்கு அடிப்படையாக அமைந்திருந்தது.

மேற்குறித்த தத்துவங்களுக்கு அடிப்படையாக அமையும் பிரமம், ஆன்மா, பிரபஞ்சம், வினைப்பயன், மகாவாக்கியங்கள், முத்தி பற்றிய கருத்துக்கள் உபநிடதங்களிலே சிறப்பாக ஆராயப்பட்டிருந்தமை இந்திய தத்துவங்களின் வளர்ச்சிக்கு உபநிடதங்கள் அடிப்படையாக அமைந்த தன்மையினையே சுட்டுகின்றன.

இவ் உபநிடதங்களிலே பிரமம் பற்றி குறிப்பிடும் போது பிரமமானது பிரஹ் எனும் சொல்லில் இருந்து தோற்றம் பெற்றது பிரஹ் என்பதன் பொருள் "தோன்றுதல்" அல்லது "வளர்தல்" என்பதாகும். அதாவது சகல பொருட்களின் தோற்றத்திற்கும் வளர்விற்கும் இறைவனே காரணமாக விளங்குவதனால் பிரமம் என அழைக்கப்படுகின்றது. உபநிடதங்கள் காட்டும் பிரமம் உண்மைப் பொருள், பூரணமானது ஆதியும், அந்தமும் அற்றது. அனைத்திற்கும் ஆதாரமானது, சொற்பதம் கடந்த சோதியானது, ஆண், பெண் வேறுபாடுகளை கடந்தது. அழிவில்லாதது அனைத்திற்கும் பிறப்பிடமானது சர்வ வியாபகத் தன்மை உடையது இத்தகைய பிரமமானது பிரத்தியட்சம் ஆகிய உலகினையும் அனுமானமாகிய உயிரியினையும் அடிப்படையாக கொண்டு உண்மைப் படுத்தப்பட்டது. இவ்வகையில் உலகினை அடிப்படையாக கொண்டு உண்மைப்படுத்தும் போது உலகில் உள்ள இயற்கைப் பொருள்கள் சடப்பொருள்கள் எனவும் அவை என்றைக்கும் தானாக இயங்கமாட்டாது. அவற்றின் இயக்கத்திற்கு ஓர் சக்தி இன்றியமையாதது எனவும் இயற்கைப் பொருள்கள் ஆகிய சடப் பொருட்கள் இயங்குகின்றது இதனால் அவற்றினது இயக்கத்திற்கு ஓர் சக்தி இன்றியமையாததாகின்றது எனவும் அது எதுவோ அதுவே பிரமம் என்றும் உண்மைப்படுத்தப்படுகின்றது. மேலும் உயிரினை அடிப்படையாகக் கொண்டு பிரமம் உண்மைப்படுத்தப்பட்டது. அதாவது உடலினது

வே. ஜெயதர்சினி
2002 கலை

இயக்கத்துக்கு உயிர் இன்றியமையாதது எனவும் இதனை ஏற்றுக் கொள்வோமானால் உயிரினது இயக்கத்திற்கு ஓர் சக்தி இன்றியமையாததாக இருக்க வேண்டும் அது எதுவோ, அதுவே பிரமம் என உண்மைப்படுத்தப்பட்டது. இவ்வாறு உண்மைப்படுத்தப்பட்ட பிரமம் சுடுநீரில் கூட்டினது தன்மை அவற்றின் கலப்பகுதிகளில் எவ்வாறு செறிந்தும் மறைந்தும் கலந்தும் காணப்படுகின்றதோ அவ்வாறே பிரமமும் எங்கும் செறிந்தும் மறைந்தும் கலந்தும் வியாபித்துள்ளது என உபநிடதங்களில் ஒன்றான சாந்தோக்கிய உபநிடதம் குறிப்பிடுகின்றது. மேலும் பிரம்மமானது கேன உபநிடதம், கடோப உபநிடதம் என்பவற்றின் மூலம் உண்மைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் உபநிடதங்கள் பிரமத்தினை இருநிலைகளில் கூறுகின்றன அவையாவன சப்பிரபஞ்சநிலை, நிஷ்பிரபஞ்சநிலை ஆகும். சப்பிரபஞ்ச நிலை என்பது பிரமம் உலகுடன் கூடிய நிலை ஆகும். இந்நிலையில் உள்ள இறைவன் தஜ்ஜலன் என அழைக்கப்படுகின்றான் தஜ்ஜலன் என்பதன் பொருள் உலகினது தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் என்பவற்றிற்கு காரணம் என்பதாகும். நிஷ்பிரபஞ்ச நிலை என்பது பிரமம் ஆனது உலகில் இருந்து விடுபட்ட நிலை ஆகும்.

மேலும் ஆன்மா பற்றிய இந்திய தத்துவங்களின் எழுச்சிக்கு அடிப்படையாக அமையும் உபநிடதங்களில் கூறப்படுகின்றது. அதாவது ஆன்மா பரமாத்மா, ஜீவாத்மா எனும் இருவகையாக ஆராயப்பட்டன. இவற்றில் மிக உயர்ந்த பிரமத்தினை பரமாத்மாவும் உயிரினை ஜீவாத்மாவும் குறிக்கின்றது. ஜீவாத்மா உண்மைப் பொருளாகும் சூக்குமப் பொருளாகும். தன்னில் தானே ஆனந்தத்தை அனுபவிக்கக் கூடியதாகும் அறிவித்தால் மட்டும் அறியக் கூடிய இயல்பினை உடையதாகும். அறிவதில் ஈடுபட்டு எது அறிவாக விளங்குகின்றதோ அதுவே ஆன்மா என்றும் உடலினுள் காணப்படும் ஆன்மாவானது ஐவகைக் கோசங்களினால் மூடப்பட்டுள்ளது என்றும் தைத்திரிய உபநிடதத்தில் கூறப்பட்டுள்ளது. கோசங்களாக அன்மைய கோசம், பிரமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமய கோசம், என்பனவாகும். மேலும் சாந்தோக்கிய உபநிடதமானது ஐவகை கோசங்களினால் மூடப்பட்டுள்ள ஆன்மா, வண்டியிலே குதிரையானது எவ்வாறு பூட்டப்படுகின்றதோ அவ்வாறே ஆன்மா உடலில் பூட்டப்புடுகின்றது என்றும் ஆன்மா வேறு சரீரம் வேறு என்றும் கூறுகின்றது.

மேலும் ஆன்மாவும் பிரம்மமும், அடிப்படையில் ஒன்று என்பதனை அகம் பிரம்மோ அஸ்மி, தத்துவம் அஸி, சோகம் அஸி போன்ற மகாவாக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. மேலும் வினைப்பயன் பற்றிய கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன. கன்மமும் மறுபிறப்பும் பற்றி பிருகதாரணிய உபநிடதமானது குறிப்பிடும் பொழுது பழைய உடைகளை களைந்து விட்டு புதிய உடைகளை அணிவது போல ஆன்மாவும் பழைய உடல்களைக் களைந்து விட்டு புதிய உடலினை எடுக்கின்றது எனக் கூறப்பட்டுள்ளது மேலும் முத்தி நிலை பற்றியும் கூறப்பட்டுள்ளது. முத்தி. அடைவதற்குரிய வழிகளாக வைராக்கியம், ஞானம் போன்றன கூறப்பட்டுள்ளன கன்மங்களிலிருந்து விடுதலை பெற்ற ஆன்மாக்கள் இரு வகையாக முத்தி அடைகின்றன. ஜீவன் முத்தி, விதேக முத்தி, என்பனவாகும். இவற்றைக் கொண்டு நோக்கும் போது உபநிடதங்களிலே ஆராயப்பட்ட தத்துவக் கருத்துக்களானவை இந்திய தத்துவங்களின் எழுச்சிக்கு நிலைக்களமாக அமைந்த தன்மையினையே எடுத்துக்காட்டுகின்றன.

மேற்குறித்த உபநிடதங்களிலே ஆராயப்பட்டிருந்த தத்துவக்கருத்துக்களினை அடிப்படையாகக் கொண்டு இந்திய தத்துவங்களானவை எங்ஙனம் தோற்றம் பெற்றிருந்தன என்பதனைப் பின்வருமாறு நோக்குவோம்.

இந்து தத்துவங்களில் குறிப்பிடத்தக்கதாக விளங்கும், பகவத்கீதை "தத்துவம் அஸி" எனும் மகாவாக்கியத்திற்கு வியாக்கியானம் வழங்குவதாக அமைந்திருந்தது. அதாவது பகவத்கீதையின் முதல் ஆறு அத்தியாயங்களும் துவம் எனப்படும் ஆன்மா பற்றியும் அடுத்த ஆறு அத்தியாயங்களும் தத் எனப்படும் பிரமம் பற்றியும் இறுதி ஆறு அத்தியாயங்களும் அஸி எனப்படும் பிரம்மத்திற்கும் ஆன்மாவிற்கும்

இடையே உள்ள தொடர்பு பற்றியும் கூறுகின்றது. அத்தகைய கருத்துக்களை அடிப்படையாக கொண்ட சாங்கியம், யோகம், நியாயம், வைசேடியம், மீமாம்சை என்னும் தத்துவ தரிசனங்களும் எழுச்சி பெற்றிருந்தன.

இந்து தத்துவங்களில் வேதாந்த தத்துவமும் குறிப்பிடத்தக்கதாகும் இந்து தத்துவங்களிற்கு அடிப்படையாக அமையும் உபநிடதங்களானவை பலரினால் பல காலங்களில் பல இடங்களில் தோற்றம் பெற்றதனால் அவற்றிற்கிடையே முரண்பட்ட கருத்துக்கள் காணப்பட்டிருந்தன. அதாவது பிரமம் ஒன்றெனவும் இரண்டெனவும் ஆன்மா ஒன்றெனவும் பல எனவும் பிரபஞ்சம் உண்மையானதெனவும் பொய்யான எனவும் பல முரண்பட்ட கருத்துக்கள் காணப்பட்டன. இத்தகைய முரண்பாடுகளை நீக்கி அவற்றிற்கு இடையே ஒற்றுமைப்பாடு காணப் பலர் முற்பட்டனர் அவ்வாறு முற்பட்டவர்களில் முதலாவதாக வைத்துக் கூறப்படுபவர் பாதராயணர் ஆவார். பாதராயணர் உபநிடதங்கள் அனைத்தினையும் அலசி ஆராய்ந்து அவற்றினை சூத்திர வடிவமாக அருளினார். இது வேதாந்த சூத்திரம் என அழைக்கப்பட்டது இவரினால் அருளப்பட்ட வேதாந்த சூத்திரமானது தெளிவினை ஏற்படுத்துவதற்கு பதிலாக குழப்பத்தை ஏற்படுத்தியது இதனால் மேலும் பலர் ஒற்றுமைப் பாடு காண முற்பட்ட பொழுது சங்கரரது அத்வைதம், இராமானுஜரது விசிட்டாத்வைதம், மத்துவரது துவைதம் போன்ற வேதாந்த தத்துவக் கருத்துக்கள் எழுச்சி பெறலாயின.

சங்கரரால் பிரமசூத்திரத்திற்கு வழங்கப்பட்ட பாஷ்யமே அத்வைதம் ஆகும். சங்கரர் ஏகம் சத் எனும் உபநிடத மகாவாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு பிரமம் மட்டுமே உள்ள பொருள் ஏனைய உயிர் உலகம் அனைத்தும் வெறும் தோற்றங்கள் எனக் கூறுவதால் இவரது கொள்கை ஒருமை வாதம் எனப்பட்டது. பிரமத்தினை சங்கரர் இருவகைகளாக வகைப்படுத்தினார். அவையாவன நிற்குணப்பிரமம், சகுணப்பிரமம் ஆகும். பிரமம் மாயையில் இருந்து விடுபட்டநிலை நிற்குணப்பிரமம் பிரமம், பிரமம் மாயையுடன் கூடிய நிலை சகுணப்பிரமம் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். இங்கு சங்கரர் காட்டும் பிரமம் ஈஸ்வரர் ஆவார். சங்கரர் பிரமமே மாயையின் காரணத்தால் உலகமாக தென்படுகின்றது. என்பதனை விவர்த்த வாதத்தினூடாக விளக்குகின்றனர் விவர்த்தவாதம் என்பதன் பொருள் "காரணப் பொருள் உண்மை காரியப் பொருள் பொய்" என்பதாகும். இவர் இவ்உலகின் பொய்மை நிலையினை நிறுவுவதற்கு மூவகையான உலகங்களை அறிமுகப்படுத்துகின்றார். அவையாவன பிராதிபாஷிகம், வியபகாரிகம், பரமார்த்திகம் என்பனவாகும் சங்கரர் ஆன்மா பற்றிக் குறிப்பிடும் போது பரமாத்மா ஒன்றே ஆன்மா எனக் கூறுவதால் இவரது வாதம் ஏகான்மவாதம் ஆகும். இவர் பரமாத்மா அவித்தையின் காரணமாக ஜீவாத்மாவாக தென்படுகிறது என்பதனை பின்வரும் வாதங்களினூடாக விளக்குகின்றார். அவையாவன பிரதிவிம்பவாதம், அவச்சேதவாதம் என்பதாகும். இவர் தத்துவம் அஸி எனும் மகாவாக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதிவிம்ப வாதத்தை நிறுவுகின்றார் பிரதிவிம்பம் என்பதன் பொருள் "பொய்த்தோற்றம்" என்பதாகும் இவர் அகம் பிரம்மோ அஸ்மி எனும் மகாவாக்கியத்தின் ஊடாக அவச்சோவாதத்தினை விளக்குகின்றார் அவச்சேதம் என்பதன் பொருள் "பிரித்தல்" என்பதாகும்.

அடுத்ததாக இராமானுஜரால் பிரமம் சூத்திரத்திற்கு வழங்கப்பட்ட ஸ்ரீபாஷ்யத்தின் விளக்கமே விசிட்டாத்வைதம் ஆகும். இவர்காட்டும் பிரமம் மகாவிஷ்ணு ஆவார் ஈஸ்வரர் எனும் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றார் இவர் தனது கொள்கையிலே பிரமம், ஆன்மா, பிரபஞ்சம் ஆகிய மூன்று பொருட்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை மட்டுமன்றி அவை பிரிபடமுடியாதவை என்பதனை அப்பிரதக் சித்திநிலைக் கொள்கையின் ஊடாக விளக்குகின்றார் இவரது கருத்துப்படி பிரமத்தை போன்றே உலகமும் இருக்கின்ற பொருளாகும். உலகினை அசித் எனக் கூறுகின்றார். இவர் உலகின் உண்மை நிலையை பரிநாமவாதத்தினூடாக விளக்குகின்றார் இவர் ஆன்மாவை சித் எனக் கூறுகின்றார். மற்றும் ஆன்மா உண்மைப் பொருள் எனக் கூறுகின்றார். மேலும் ஆன்மாக்களை பல்வேறு வகையாக வகைப்படுத்துகின்றார். இவர் கூறும் முத்தி ஆன்மாக்கள் பிறவித்துன்பத்தில் இருந்து நீங்கி மகாவிஷ்ணுவின் பாதங்களை அடைதல் எனக்கூறி

இதனை அடைவதற்குரிய வழிகளாக கர்மயோகம் பக்தியோகம், ஞானயோகம் என்பவற்றைக் கூறுகின்றார்.

மத்துவரது கொள்கை துவைதம் எனப்படுகின்றது. துவைதம் என்பது இரண்டு அவையாவன பிரமமும், ஆன்மாவும் ஆகும். இவர் பிரமத்தை ஈஸ்வரர் எனவும் ஆன்மாவை ஜீவன் எனவும், உலகை ஜடம் எனவும் குறிப்பிடுகின்றார். இறைவன் உண்டு என்பதை ஏற்கும் இவர் ஏனையவற்றில் இருந்து வேறுபட்டவன் என்பதனை ஐவகை பேதங்களினூடாக விளக்கினார். இருப்பு, ஞானம், ஆனந்தம் எனும் பதார்த்தங்களைக் கொண்ட ஈஸ்வரரை குணபூரணன் எனவும் சர்வோத்தமன் எனவும் குறிப்பிடுகின்றார். இறைவன் தன்னை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தும் போது பல அவதாரங்களை எடுக்கின்றார் எனவும் உலகின் தோற்றத்திற்கு பிரகிருத்தியே முதற்காரணம் எனவும் கூறுகின்றார். இவர் ஆன்மாவை உண்மைப் பொருள் எண்ணிறைந்தவை எனக் கூறி முத்திநிலை பற்றிக் கூறும் போது ஆன்மாக்கள் தமக்கு இயல்பான ஆனந்தத்தை அனுபவிப்பதே முத்தி எனக் கூறுகின்றார்.

உபநிடதங்களிலே ஆராயப்பட்ட தத்துவங்களை அடிப்படையாக கொண்டு எழுந்த தத்துவங்களில் சித்தாந்த தத்துவமும் ஒன்றாகும் சித்தாந்தம் என்றால் முடிந்த முடிவு அல்லது தெளிவான முடிவு எனக் கூறலாம். அதாவது உபநிடதங்களிலே ஆராயப்பட்ட பிரமம், ஆன்மா, பிரபஞ்சம் என்பனவே சித்தாந்த தத்துவங்களிலேயே பதி, பசு, பாசம், எனும் முப்பொருள்களின் ஊடாக விளக்கப்பட்டுள்ளது பிரமத்தினை இருநிலைகளான சொரூபநிலை, தடத்தநிலைகளின் ஊடாகவும், ஆன்மா கன்மமும் மறுபிறப்பும், முத்தியடைவதற்குரிய வழிகள், இலட்சியச் சிறப்புக்கள், முத்தி என்பவற்றை கூறியுள்ளார்.

இந்துமதமானது வேத உபநிடதங்களை அடிப்படையாக கொண்டு எழுச்சி பெற்றதனால் வைதீக நெறி என அழைக்கப்பட்டது. ஆனால் காலப்போக்கில் இவ்வேத உபநிடதங்களை எதிர்த்து சில தத்துவ நெறிகள் தோற்றம் பெற்றன. அவையே அவைதீக மதநெறி எனப்படும். சமணம், பௌத்தம் ஆகும். எனவே இத்தகைய அவைதீக நெறிகளானது தோற்றத்திற்கும் அடிப்படையாக அமைவது உபநிடதங்கள் என்றே கூறலாம்

மேற்கூறப்பட்ட கருத்துக்களைக் கொண்டு நோக்கும் போது உபநிடதங்களைக் கருப்பொருளாக கொண்டு ஐவகைதரிசனங்கள், பகவத்கீதை, வேதாந்தம், சித்தாந்தம், சமணம், பௌத்தம், என்பன எழுச்சி பெற்றிந்தமை பிற்கால இந்திய தத்துவங்களின் வளர்ச்சிக்கு உபநிடதங்களின் பங்களிப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

இப்போது நாம் என்னவாக இருக்கின்றோமோ அது நாம் மனதில் என்றோ எண்ணிய எண்ணங்களின் விளைவே ஆகும். எண்ணங்களே அடிப்படை. ஒரு தீய எண்ணத்துடன் ஒருவன் பேசினாலோ அல்லது செயல் பட்டாலோ, ஒரு வண்டியை இழுத்துச் செல்லும் எருதின் காலடிச் சுவடைப் போல், இந்தத் தீமை அவனை பின் தொடரும். அது போலவே ஒரு தூய எண்ணத்துடன் பேசினாலோ செயல்பட்டாலோ அந்தத் தூய்மை, நிழலைப் போல் அவனை விட்டு நீங்காது.

*- ஓர் அறிஞன்*

# அறுபத்து நான்கு கலைகள்

**01. அக்கர இலக்கணம்:** எழுத்திலக்கணம் இதில் வாசிப்புக்கலையும் அடங்கும்

**02. இலிகிதம்:** எழுத்துத்திறமை அழகிய கையெழுத்து இதில் அடங்கும்

**03. கணிதம்:** எண்ணியல்

**04. வேதம்:** நான்கு வேதங்கள், சங்கிதைகள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள், ஆகியவை

**05. புராணம்:** மகா புராணங்கள்பதினெட்டும் உபபுராணங்கள் பதினெட்டும்

**06. வியாகரணம்:** வேதாங்கங்கள் ஆறினுள் ஒன்று இலக்கணநூல்

**07. நீதி சாத்திரம்:** அரசியல் நீதி உரைக்கும் நூல்

**08. சோதிடம்:** வேதாங்கங்கள் ஆறினுள் ஒன்று-நாளுங் கோளுங் கணிக்கும் வானநூற்கலையும் கோள்களின் நிலையால் மக்களுக்கு ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறும் கலையும் இதனுள் அடங்கும்

**09. தரும சாத்திரம்:** அறமுரைக்கும் நூல் ஆபஸ்தம்பர், போதாயனர், மனு முதலியவர்களால் கூறப்பட்ட அறக்கருத்துக்கள்

**10. யோக சாத்திரம்:** புலன்களை ஒரு நிலைப்படுத்தி தியான நிலையில் நிற்றல் பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரம் மூலநூல்

**11. மந்திர சாத்திரம்:** தெய்வங்களை வாழ்த்தி வயப்படுத்தி நன்மை விளைத்தல் சிறு தெய்வங்களை ஏவல் கொண்டு ஆக்க அழிவு வேலைகளுக்குத் தூண்டும் மாந்திரிகமும் இதில் அடங்கும்.

**12. சகுனசபத்திரம்:** நிமித்த முணர்த்தும் நூல் பறவைகளின் ஒலி வருகை முதலியன கொண்டு எதிர்வு கூறும் கலை

**13. சிற்ப சாத்திரம்:** கோயில் தேர், தெய்வ விக்கிகங்கள் உருவாக்கும் அறிவு

**14. வைத்திய சாஸ்த்திரம்:** நோய் அறிந்து மருந்து கொடுத்தல், மருந்து தயாரித்தல் அறுவைச் சிகிச்சை, வெண்டுண்ட உறுப்புக்களை பொருத்துதல் இக்கலையை ஆயுர் வேதம் என்பர்

**15. உருவ சார்த்திரம்:** உறுப்பமைவுகளைக் கொண்டு உயர்வு தாழ்வு கூறல் இதனைச் சாமுத்திரிகா லட்சணம் என்பர்.

**16. இதிகாசம்:** பூர்வ காலத்துச் சரித்திரம் கூறும் இராமாயணம், மகாபாரதம் ஆகியவை

**17. காவியம்:** வடமொழிக் காவியங்களான இரகுவம்சம், குமாரசம்பவம் போன்றவை தமிழில் சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, மணிமேகலை போன்ற காப்பியங்களில் தேர்ச்சி சிறு காப்பியங்களிலும் தேர்ச்சி

**18. அலங்காரம்:** வடமொழியிலே தண்டி எழுதிய காவ்யாதர்சம் தமிழில் கூறப்படும் தண்டியலங்காரம் போன்ற செய்யுள் அணி இலக்கணத்தில் தேர்வு

**19. மதுர பாடனம்:** இனிமையாகப் பேசும் திறமை

**20. நாடகம்:** அரங்கில் நடிக்கும் கலை

**21. நிருத்தம்:** ஆடற்கலை

**22. சத்தப் பிரம்மம்:** ஸ்வர பேதம் அறியும் அறிவு

**23. வீணை:** வீணையில் திறமை

**24. வேணு:** புல்லாங்குழலில் திறமை

**25. மிருதங்கம்:** தண்ணுமையில் திறமை

**26. தாளம்:** தாளம் இசைப்பதில் திறமை

**27. அத்திரப்பரீட்சை:** வில்வித்தை முதலானவை

**28. கனகப் பரீட்சை:** பொன் முதலியவற்றின் இலக்கண அறிவு

**29. இரதப் பரீட்சை:** தேர் ஓட்டுவதில் திறமை

**30. கஜப்பரீட்சை:** யானையின் இலக்கணம் அறிதல்

**31. அசுவப்பரீட்சை:** குதிரை இலக்கணம் அறிதல்

**32. இரத்தினப்பரீட்சை:** நவரத்தினங்களின் இலக்கணம் அறிதல்

**33. பூமி பரீட்சை;** பல்வகை மண்பற்றிய அறிவு நீறூற்றுக்களைக் கண்டறிவதற்கு மண்ணின் தன்மையை அறிதல்

**34. சங்கிராம விலக்கணம்:** போர்க்கலை

**35. மல்லயுத்தம்:** மற்போர்-குத்துச்சண்டை, மெய்வல்லுநருக்கான பயிற்சி பற்றி அறிதல்

**36. ஆகர்ஷணம்:** மந்திரம், தந்திரம், போன்றவற்றால் ஒருவரைக் கவர்தல்

தொகுப்பு:- இ.விஜயதாஸ்
கலை(2003)

**37. உச்சாடனம்:** பேயோட்டும் வகையும் பேய் முதலியவற்றை ஏவுதலும்

**38. வித்துவேடணம்:** சிநேகமான விடத்து விரோதஞ் செய்யும் கலை

**39. மதனசாஸ்திரம்:** காமக்கலை-ஆண் பெண் உறவின் அறிவு

**40. மோகனம்:** பிறரை மயங்கச் செய்யும் வித்தை

**41. வசீகரணம்:** பிறரை வயப்படுத்தும் வித்தை

**42. இரசவாதம்:** தரங்குறைந்த உலோகங்களை தரம்மிக்கவையாக மாற்றல்

**43. காந்தர்வ வேதம்:** இசைக்கலை

**44. பைபீல் வாதம்:** எறும்பு முதலிய பிராணிகளின் மொழியை அறியும் கலை

**45. கவுத்துக வாகம்:** வருந்துகின்ற மக்களை மகிழ்விக்கும் வித்தை

**46. தாது வாதம்:** நாடித்துடிப்பைக் கொண்டு நோயினை நிச்சயித்தல்

**47. காருடம்:** கருடபாவனை செய்து மந்திரத்தால் பாம்பின் விடத்தை அகற்றுதல்

**48. நட்டம்:** இழந்த பொருளைப் பற்றி அறியும் நிமித்தக்கலை

**49. முட்டி:** கைப்பிடிக்குள் மறைத்து வைத்திருக்கும் பொருளை அறிதல்

**50. ஆகாயப் பிரவேசம்:** ஆகயாத்திற் புகுந்து மறையும் வித்தை

**51. ஆகாய கமனம்:** வான் வெளியில் நடந்து செல்லும் வித்தை

52. **பரகாயப் பிரவேசம்:** யோகப் பயிற்சியியால் உயிர்நீத்த ஒருவரின் உடலில் தனது உயிரைச் செலுத்தும் வித்தை கூடுவிட்டு கூடுபாய்தல்

**53. அதிருசியம்:** தன்னைப் பிறர் காணாமல் மறைக்கும் வித்தை

**54. இந்திரயாலம்:** செப்படி வித்தை, மாயவித்தை

**55. மகேந்திர ஜாலம்:** விண்ணிலும், மண்ணிலும் வியத்தகு செயல்களைப் புரியும் வித்தை

**56. அக்கினித்தம்பம்:** அக்கினிசுடாமலிருக்கும் வித்தை

**57. ஜலத்தம்பம்:** நீரைக் கட்டி அதன்மீது நடக்கும் வித்தை

**58. வாயுத்தம்பம்:** காற்றைக் கட்டும் வித்தை

**59. திட்டித் தம்பம்:** பார்ப்பவர் கண்களைக் காட்சியினின்று விலகாமல் கட்டும் வித்தை

**60. வாக்குத் தம்பம்:** வாய் பேசாமற் கட்டும் வித்தை

**61. சுக்கிலத் தம்பம்:** சுக்கிலம் இறங்காமற் செய்யும் வித்தை

**62. கன்னத்தம்பம்:** புதையல் கிடைக்காமற் கட்டும் வித்தை

**63. கட்கத் தம்பம்:** வெட்டுதற்கு ஓங்கிய வாளைத் தடுக்கும் வித்தை

**64.அவத்தைப் பிரயோகம்:** விரும்பியவாறு தன்உயிரை ஐவகை அவத்தைகளில் ஒன்றில் நிறுத்தி வைத்தல் சூனியம் வைத்துக் கொள்ளுதல்

*நன்றி*
*கலைக்களஞ்சியம்*

உலகத்தில் இரண்டு சக்திகள் இருக்கின்றன. ஒன்று கத்தி தரும் சக்தி ற்றொன்று ஆத்மா தரும் சக்தி. ஆன்ம சத்தியின் முன்னால், கத்தி தரும் சக்தி சூரிய வெளிச்சத்தின் கீழ் எரியும் மெழுகுவர்த்தியைப் போன்று அற்பமானதாகும். அலெக்சாண்டர், சீஸர், சார்லிமேக்னி, நெப்போலியன் போன்றவர்கள் மாபெரும் சாம்ராஜ்யங்களை உருவாக்கினார்கள். இவர்கள் உருவாக்கிய சாம்ராஜ்யங்கள் ராணுவ பலத்தை அடிப்படையாக கொண்டவை ஆதலால் சிறிது காலத்திலே அழிந்துபோயின. அன்பை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்ட மதங்கள் இன்றும் உலகில் நிலைத்திருக்கின்றன.

- ஆர். ராவ்

# விஞ்ஞானத்தின் வரம்பு

"விஞ்ஞானம்" என்பது அறிதல் என்னும் கருத்தினைப் புலப்படுத்தும் இலத்தீன் அடியைக் கொண்ட Science என்னும் ஆங்கிலப் பதத்தினை ஒத்ததாக அமைந்துள்ளது. இயற்கையை அறிதலும் விளக்குவதுமே விஞ்ஞானத்தின் நோக்கமாகும். மனிதன் தோன்றிய காலத்தில் இருந்தே இயற்கையை விளங்க முயற்சித்திருக்கின்றான். இன்றுவரை தொடரும் இம்முயற்சியின் பயனாக பல வியத்தகு சாதனைகளை படைத்தும் இருக்கின்றான் என்னும் விஞ்ஞானத்தினால் விளக்கமுடியாத விடயங்களையும், விஞ்ஞானத்தினால் தீர்க்க முடியாத பிரச்சினைகளையும் எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

விஞ்ஞானமுறை சிந்தனையை அடிப்படையாகக் கொண்டது. உள்ளுணர்வுகள், இயல்புணர்ச்சிகள் (Instincts), ஆசாபாசங்கள் (desires), சார்பெண்ணங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை விஞ்ஞானம் விலக்குகிறது. இதனால் யோகியர், கவிஞர்கள், கதாசிரியர்கள், அறவியலார் ஆகியோரது கண்டனங்கருக்குள்ளாகியிருக்கிறது. விஞ்ஞானமுறையானது மென்மையும் நெகிழ்ச்சியுமற்ற முறையாகும் சிந்தனையால் அறியமுடியாத இதயத்தால் மட்டுமே உணரமுடிந்த உண்மைகளும் இருக்கின்றன என்று "பாஸ்கல் " எனும் அறிஞர் கூறுகின்றார்.

"இதயத்தையும் ஆன்மாவின் மறுக்க வியலாத அனுமானங்களையும் நம்புவதே விவேகம்" என ஜார்ஜ் சாந்தயானா கூறுகிறார் எனவே விஞ்ஞான முறையில் சரிபார்க்கவும் பரிசோதிக்கவும் இயலாத எல்லாக் கூற்றுக்களும், கணித முறையில் அளவிட்டும் நிறையிட்டும் கூறமுடியாத எல்லாவிடயங்களும் 'பொருளற்ற உரைகள்" (non Sense) ஆகா.

விஞ்ஞானம் தொகுத்தறிமுறை மூலம் கருதுகோளை உருவாக்ககின்றது. ஆயினும் தொகுத்தறிமுறையின் ஆதாரமாகக் கருதப்படும் இயற்கையின் ஒருசீர்மை விதியை விஞ்ஞானத்தால் மெய்ப்பிக்கமுடியாது. பெரும்பாலான விஞ்ஞானக் கொள்கைகளும் இவ்வாறே அடிப்படைத் தத்துவத்தில் முடிவடைகின்றன. உதாரணமாக பரிணாம வளர்ச்சியானது அடிப்படையிலான சில விஷயங்களை விளக்காமல் அவற்றை அவை இருக்கின்றபடியே ஏற்றுக்கொள்கிறது. உயிர் ஏன் எவ்வாறு தோன்றியது? பரிணாமத்தின் நோக்கம் என்ன? ஆகிய கேள்விகளை தத்துவத்தின் துணை கொண்டே விளக்கமுடியும்.

மேலும் அடிப்படை உணர்வுகளாகிய நிறம், வெப்பம், மணம், ஒலி உறுத்துணர்வு (Touch) அமைதி வலி, போன்ற நிலைகளையும் விஞ்ஞானத்தால் விளக்கவியலாது அனுபவத்தின் மூலம் உணரவே முடியும். சடப்பொருட்களின் அடிப்படை இயல்புகளை அதாவது உருவம் உராய்வு, நிறை, இயக்கம் முதலியவற்றை ஒப்புவமை இல்லாமையால் விளக்குவது அரிது பௌதிக இரசாயன விதிகள் தெரிந்திருந்தாலும் தனிப்பட்டவற்றை விளக்குவது சாத்தியமானதல்ல உதாரணமாக கல்லில் உள்ள இரசாயன மூலங்களைப்பற்றி விஞ்ஞானத்தால் கூறமுடியும்

வ. அரவிந்தன்
ஆண்டு 13 (2001 கலைப்பிரிவு)

எனினும் தனிப்பட்ட ஒருகல்லை விஞ்ஞானத்தால் விளக்க முடியாது.

தனிமனித ஆளுமையை பிறப்பாலோ, அவனது கல்வியறிவாலோ அல்லது வாழும் சூழலாலோ விபரிக்கமுடியாது.

அண்மைக் காலங்களில் விஞ்ஞானமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சமூக விஞ்ஞானங்களிலும் விஞ்ஞான முறையை ஒரு வரம்புக்குட்பட்டே பயன்படுத்தமுடியும் உடனடியாகச் செயலாற்ற வேண்டிய இடங்களிலெல்லாம் அக்காரியத்தைச் செய்வதற்கான எல்லா வழிவகைகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடவோ அதைப்பற்றிய நம் தீர்ப்பபை ஒத்திவைப்பதோ (Suspension of Judgment) இயலாது உதாரணமாக ஒருவனுடைய வீட்டில் தீப்பற்றிவிட்டால் அதன் காரணம், அதை அணைப்பதற்கான வழிவகைகள் பற்றிய ஆராய்ச்சி முதலியவற்றில் ஈடுபடாமல் அதை உடனடியாக அணைக்கின்ற செயலில் இறங்குகின்றான். எனவே செயலில் ஆர்வமுடையவர் செய்முறையைப் பற்றி சிந்தனையில் ஈடுபடுவோரைக் கண்டனம் செய்கின்றனர் அதனால் சமூகவியலில் விஞ்ஞான முறைப்பயன்படாது என கூறுவோருமுளர்.

விஞ்ஞானம் எண்ணற்றபல நன்மைகளைத் தந்திருப்பினும் மற்றொருபுறம் நமது சூழலைப் பாதிக்கும் சில காரணிகளையும் கூடவே உருவாக்கியுள்ளது. இத் தீய விளைவுகள் மனித வாழ்வுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்திருப்பதுடன் இதுவரை விஞ்ஞானத்தினால் தீர்க்கமுடியாதும் காணப்படுகின்றன.

(I) ஓசோன் துவாரம்:- புவி மேற்பரப்பிலிருந்து 48 km வரை வளிமண்டல வகைகளில் ஒன்றான மீவளிமண்டலம் காணப்படுகின்றது இதன் மேற்பகுதியில் ஓசோன் உள்ளது இவ்வாயு சூரியனிலிருந்து உயர் ஊதாக் கதிர்களை உறிஞ்சிக் கொள்கின்றது. இக்கதிர்கள் நேரே பூமியை வந்தடைந்தால் மனிதனுக்கும் தாவரங்களிற்கும் பெருந்தீங்கு ஏற்படும் இத்தீங்கிலிருந்து நம்மைக் காப்பது ஓசோன் படையேயாகும்.

இயற்கையால் நமக்கு வழங்கப்பட்ட இவ்வரிய கவசம் இன்று விஞ்ஞான முன்னேற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. அதாவது வாகனங்களின் எரிப்பொருட்களின் துரித பாவனைக்காகவும், குளிரூட்டும் கருவிகள், பூச்சுக்கள், தீயணைப்புப்பதார்த்தங்கள், வீசும் பொருட்கள் பெண்கள் அலங்காரத்திற்கு உபயோகப்படுத்தும் பொருட்கள் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படும் C.F.C (குளோறோ, புளோறோ, காபன்) இலகுவில் ஆவியாகி வளிமண்டலத்தை சென்றடைகின்றன. எனவே C.F.C யே ஓசோன் துவாரத்திற்கு முக்கிய காரணமாகும் இதுதவிர மீபொலி (Super Sonic) விமானங்களின் எரிபொருள் தகனத்தால் வானவெளியில் உள்ள நைதரன் ஒட்சைட்டும் ஓசோன் துவாரத்திற்கு காரணமாகின்றது.

மனித சமுதாயத்தில் C.F.C தொடர்ந்து கையாளப்பட்டால் பெரும் ஆபத்துக்கள் நிகழும் என்பதை விஞ்ஞானிகள் மட்டுமல்ல அரசியல் வாதிகளும் சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றுக் கொண்டுள்ளனர். 2005 ஆம் ஆண்டில் இவ்வுற்பத்தியை முற்றிலும் நிறுத்திவிடுவதென அனைத்துலக மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளது ஆயினும் அதாவது முற்றாக நிறுத்தினாலும் கூட வளிமண்டலத்தில் ஏற்கனவே அடைந்துள்ள C.F.C இன்னும் பல வருடங்களுக்கு ஓசோன் படையை அடைந்து தாக்கிக் கொண்டே இருக்கும் இப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு விஞ்ஞானம் முயன்று கொண்டிருந்தாலும் இதுவரை தீர்க்க முடியாத பிரச்சினையாகவே காணப்படுகின்றது.

### (II) அமில மழை:-

மழை நீரில் சாதாரணமாகவே மிகச் சிறிய அளவில் அமிலம் காணப்படுகிறது விஞ்ஞான முன்னேற்றத்தால் இது அதிகரிக்கின்றது. தொழிற்சாலைகள், வாகனங்கள், அனல் மின் நிலையங்கள் போன்றவற்றிலிருந்து வெளியேறும் சல்பூரிக்கமிலம் நைற்றிக்கமிலம் வளிமண்டலத்திலுள்ள நீராவியுடன் கலந்து மழையாக அல்லது மழையுடன்

கலந்து பெய்வதே அமில மழை எனப்படும். இதனால் இயற்கை சமநிலை குலைந்து உயிரினங்களின் வாழ்விற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றது.

### iii) பச்சை வீட்டு விளைவு:-

மனித நடவடிக்கைகளில் சூழல் மாசடைகின்றது சூழல் மாசடையும் போது காபனீரொட்சைட்டின் அளவு வளிமண்டலத்தில் அதிகரிக்கின்றது. இவ்வதிகரிப்பே பச்சைவீட்டுவிளைவு எனப்படும். புவியின் மேற்பரப்பில் பட்டுத்தெறிக்கும் வெப்பக்கதிர்களை காபனீரொட்சைட் படையானது திரும்பவும் பூமிக்கு தெறிக்கச் செய்கின்றது இதுவும் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகை, சுவட்டு எரிபொருட்களின் அதிகரித்த பாவனை போன்றவற்றாலேயே கூடுதலாக ஏற்படுகின்றது.

### iv) எயிட்ஸ் நோய்

இன்றைய மருத்துவ விஞ்ஞான வளர்ச்சிக்கு சவாலாகவும், கொடிய ஆட்கொல்லி நோயாகவும் எயிட்ஸ் கருதப்படுகின்றது AIDS (Acqired Immune Deficiency Syndrome) எனும் இந் நோய் ஏற்படின் இறப்பு நிச்சயம் இதுவரை இதனைத் தடுக்க மருந்து எதுவும் கண்டறியப்படவில்லை. ஆயினும் நோய் மேலும் பரவாதிருக்க உலகளவிய ரீதியில் பிரசார நடவடிக்கைகள் பல்வேறு உலக நிறுவனங்களும் முடுக்கி விட்டுள்ளன. இதன் நோயரும்பு காலம் 8 - 15 வருடங்களாகக் காணப்படுவதால் நோய் பரவுதற்கு ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது ஏனெனில் நோயரும்பு காலத்தில் எந்தக்குணம் குறியும் தெரியாது. இதனால் இவர்கள் நோயைப் பரப்புபவர்களாக காணப்படுகின்றார்.

HIV தொற்று ஏற்பட்டால் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அழிக்கின்றது இந்நோய் 1981ம் ஆண்டு ஹைவாய் எனும் இடத்தில் கண்டறியப்பட்டது. இன்று உலகில் இந்நோய் பரவாத நாடுகளே அரிதாக காணப்படுகின்றன. 22 மில்லியன் மக்கள் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 13 மில்லியன் சிறுவர்களாகக் காணப்படுவது மிகவும் வருந்தத்தக்க விடயமாகும்.

இந்நோயைக் குணப்படுத்த உரிய மருந்து கண்டுபிடிக்கப்படும்வரை "விஞ்ஞானவளர்ச்சிக்கு" பெரும் சவாலாகவே அமைந்துள்ளது ஆதலால் எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது எல்லா அரசுகளுக்கும் குறிப்பாக சுகாதார வைத்தியத்துறையினருக்கும் இன்றியமையாத கடமையாகும்.

> கண் பார்வை அற்றவன் குருடன்அல்லன்:
> தன் குற்றங்குறைகளை உணராதவன் இருக்கிறானே,
> அவன்தான் சரியான குருடன்
>
> *~மகாத்மா காந்தி.*

யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்
கலை வர்த்தக மன்றத்தின்
“ அரங்கம்” வெளியீட்டை வாழ்த்துகின்றோம்.

**கலா ரஞ்சிதா ஸ்ரோர்ஸ்**



பிரதான வீதி,
வல்வெட்டித்துறை.
உரிமையாளர்:- கோ. தவராசா

யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்
கலை வர்த்தக மன்றத்தின்
“ அரங்கம்” வெளியீட்டை வாழ்த்துகின்றோம்.

**HAMSA STEEL DISIGNERS**



Alwai Road,
Uduppiddy.

*Prop.*:- **S. Thayananthan**

யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்

கலை வர்த்தக மாணவர் மன்றத்தின் "அரங்கம்" சஞ்சிகை ஆண்டு தோறும் வெளிவர உளமார வாழ்த்துகின்றோம்.

# சீவரெத்தினம் வெதுப்பகம்

**வல்வெட்டித்துறை.**







உரிமையாளர்:- அ. வசீகரன்
வல்வெட்டித்துறை.

# கர்நாடக சங்கீதத்திற்கும் ஐரோப்பிய சங்கீதத்திற்கும் ஓர் ஒப்பு நோக்கு

நமது நாட்டினுடைய சங்கீத அறிவை விருத்தி செய்து கொள்வதற்கு பிரதேசத்தில் வழக்கிலிருக்கும் சங்கீதத்தைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்வது அவசியமாகும். புதிய ஆக்கங்களை இத்துறையில் விருத்தி செய்து கொள்வதற்கு எமக்கு மிகவும் பரிட்சயமான இசைகளாக ஹிந்துஸ்தானி இசை, மேலைத்தேய இசை, ஆகியவற்றின் அடிப்படையத் தத்துவங்களை அறிதல் உகந்தது.

இவ்வகையில் நோக்கினால் மேலைத்தேய இசையில் உள்ள மேலைத்தேய இசைக்கருவிகளை நாம் எமது கர்நாடக இசையில் பின்பற்றிக் கொள்கிறோம். இதனை பின்பற்றுவதால் அவ்விசைக்கருவிகளின் தன்மையையும் அவற்றின் மகிமையையும் அறிந்து கொள்கிறோம். இதே போல் எமது இசையாகிய கர்நாடக இசைக்கருவியையும் இம்மேலைத்தேயவர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதனால் அவர்கள் எமது இசையின் அடிப்படைத்தத்துவங்களை தெரிந்து கொள்கிறார்கள் இப்படி பாவனை செய்வதால் எமது இசை அங்கு நிலவி வருகின்றது அதேபோல் அவர்களது இசையும் எமது இசையில் கலந்து அவற்றின் மகிமையை நாம் உணர்ந்து அவற்றை நம் கலாச்சார பண்பாட்டு தேவைகளுக்கேற்ப பயன்படுத்திக் கொள்கிறோம்.

இவ்வடிப்படையில் இவ் விரண்டு இசைகளுக்கும் உள்ள ஒரு ஒப்பு நோக்குகையை நோக்குகையில் அவை பின்வருமாறு சாஸ்திரீய சங்கீதம் யாவும் ஒரேயடிப்படை தத்துவத்திலேயே வளர்ந்துள்ளன. ஸ ~ ப, ஸ ~ ம சம்பந்தமான (வாதி, சம்பாதி) தத்துவங்கள் உலகம் அனைத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவை.

இந்திய சங்கீதத்தில் ஸரிகமபதநி என அழைக்கப்படும் ஸப்தஸ்வரங்கள் மேற்கத்திய இசையில் டோ, ரே, மீ, வா, ஸோ, லா, டி (DOH, RAY, MI, FAH, SOH, LA, TEE) என அழைக்கப்படுகின்றன. இவ்வாறு ஸ்வரங்களை அழைக்கும் முறை இந்தியாவில் மிகப் பழங்காலம் தொட்டே வழக்கிலிருந்து வந்தது. இவ் ஸப்தஸ்வரங்கள் பழங்காலம் தொட்டே வழக்கிலிருந்து வந்தது. இவ் ஸப்த ஸ்வரங்கள் இவ்வாறும் வழங்கி வருகின்றன.

ஸ ரி க ம ப த ந
C D E F G A B

மேற்கத்திய இசையில் அடிப்படையான இராகம் மேஜர் ஸ்கேல் (Major Scale) அதாவது கர்நாடக இசையில் தீரசங்கராபரணத்திற்கும் வடஇந்திய இசையில் பிலாவலுக்கும் ஒப்பானது

மேஜர் ஸ்கேலிலுள்ள ஸ்வரங்கள் நார்சுரல் (NATURAL) என அழைக்கப்படும் நார்சுரல் அல்லாத ஸ்வரங்களை எடுத்துக் கொள்ளும் இராகங்களை அவ் ஸ்வரத்திற்கேற்ப பளட் (FLAT) ஸார்ப் (SHARP) என்றும் குறிப்பிடப்படும்

உதாரணமாக கல்யாணி இராகம் பிரதி மத்திமம் அதனை F (SHARP) என்றும் கரகரப்பிரியாவில் வரும் சாதாரண காந்தாரத்தை E (FLAT) என்றும் குறிப்பர்.

து. காயத்திரி
Arts - (2002)

இந்திய இசையில் உள்ளது போன்றே மூன்று வலய வேறுபாடுகள் மேற்கத்திய இசையிலும் காணப்படுகின்றன அவையாவன.

| | | |
|---|---|---|
| விளம்பித லயம் | - | SLOWTEMPO |
| மத்திய லயம் | - | MEDIUMTEMPO |
| துரித லயம் | - | FASTTIMPO |
| துரித விளம்பித | - | ALLE GRO |
| துரித மத்திம | - | ALLEGRO MODERATO |
| துரித துரித | - | ALLEGRO ASSAI |

இவ்வாறு அழைக்கலாம்

இந்திய இசையில் பாடகர் தன் குரல் வளத்திற்கு ஏற்ப சுருதியை தேர்ந்தெடுப்பதற்கு சுதந்திரம் உண்டு. மேற்கத்திய இசையிலே பாடல் எந்த KEY (PITCH) இல் எழுதப்பட்டுள்ளதோ அந்த KEY பாட வேண்டும் மனோதர்ம சங்கீதம் என்பது இந்திய சங்கீதத்திற்கும் உரிய வரப்பிரசாதமாகும். ஆலாபனை கற்பனாஸ்வரம் நிரவல், பல்லவி, தானம் போன்ற வித்துவான்களின் கற்பனாஸ்வரம் நிரம்பி, பல்லவி, தானம் போன்ற வித்துவான்களின் கற்பனை வளத்தை எடுத்துக்காட்டும் அம்சங்கள் மேலைத்தேய இசையில் காணப்படவில்லை.

மேற்கத்திய இசையில் ராகத்தை ஸ்கேல் என அழைப்பர் ஸ்கேல் என்னும் பதமானது இலத்தீன் மொழியிலுள்ள ஸ்காலா (SCALE) என்னும் பதத்திலிருந்து வந்ததாகும் ஸ்காலா என்றாலஇலத்தீன் மொழியில் ஊணி என்று பொருள்படும். இவ்வகையில் பிரதான ஸ்கேல்களான மேஜர் மைனர் (MINIOR) ஆகிய இரண்டும் 17ம் ~18ம் இடைப்பட்ட காலத்திலேயே உருவாயின. இவ் மேஜர் ஸ்கேல்லிருந்தே புதிய இராகங்கள் கிரக பேதத்தின் மூலம் உருவாகின.

ஆங்கில இசையில் காணப்படும் பைத்கோரியன் (PHTHOGORIOMMALA) மேளமானது அதன் ஆரோகண ஸ்வரங்கள் வேறுபட்டிருந்தாலும் அவரோகண ஸ்வரங்களானவை கர்நாடக இசையில் வழங்கும் தேவ காந்தாரி இராகத்திற்கு ஒப்பாகும். வேறு சில இத்தால்ப் பாடல்கள் நமது குறிச்சி, நாத நாமகிரியா, ஆரபி போன்ற இராகங்களுக்கு ஒப்பான மெட்டுக்களில் அமைந்துள்ளன. சிம்மேந்திர மத்திம இராகம் மேலை நாட்டு ஜிப்ஸி சங்கீதத்தில் காணப்படுகின்றது.

ஹார்மனிக் மைனர் ஸ்கேல் நமது கீரவாணி இராகத்திற்கு ஒத்ததாகும்.இந்திய சங்கீதத்தில் ஒரு சமயத்தில் ஒரு ஸ்வரத்தை பாடவோ வாசிக்கவோ முடியும். ஒன்றுடன் சம்பந்தமான ஸ்வரங்களை ஒரே தருணத்தில் ஒலிக்கச் செய்வது ஹார்மனிக் சங்கீதம் ஆகும். இவ்வடிப்படையில் வளர்ந்ததே ஐரோப்பிய சங்கீதமாகும்.

இவ் ஐரோப்பிய இசையில் ஸ்வரங்களை நோட் (Note) என்றும் சுருதியை பிச் (PICH) என்றும் அழைப்பர்.

கர்நாடக சங்கீதத்தில் காணப்படுவது போன்று பெருவகையான தாளங்களோ இராகங்களோ மேற்கத்திய இசையில் இல்லை. இந்திய இசை பக்தியை அடிப்படையாக கொண்டது. இவ்விசைக்கச்சேரியில் இரண்டு அல்லது மூன்று பக்கவாத்தியக்காரர்களே காணப்படுவர் மேற்கத்திய கச்சேரிகளில் வாத்தியமே பிரதானமாக காணப்படும் ORCHESTRA (பல்லியம்) முக்கிய இடம் வகிக்கிறது மேலைத்தேய இசையில் CONIDUCTOR முக்கிய இடம் வகிக்கிறது.

இந்திய இசையில் கமகம் மனோதர்மம் என்பவை முக்கிய அம்சங்களாகும். ஆனால் மேற்கத்திய இசையில் இல்லை மேற்கத்திய இசையில் மனோதர்மம் என்னும் அம்சம் வாத்திய காரரிடமே மட்டும் எதிர்பார்க்கப்படுகிறது.

# கலையின் தொடர்பியலும் குறியீடும்

இயற்கையானது மிக உன்னதமான முறையில் அமைந்து காணப்படுகின்றது. இங்கு உயிருள்ளவைகளும், உயிரற்றவைகளும் நிரம்பிக் காணப்படுகின்றன. பார்ப்போரிற்கு வியப்பூட்டக்கூடிய இயற்கைக் காட்சிக்கள், பறவைகள், காட்டுவிலங்குகள் என்பன இயற்கையை அமைப்பிலே இணைந்து வாழும் மிகவும் புத்திக்கூர்மையுள்ள விலங்காக மனிதன் கருதப்படுவதன் காரணம் அவன் பெற்றுள்ள அறிவுதான். மனிதனது மனதில் உதயமாகும் எண்ணங்கள் சூழலினால் சமூகம் பெறும் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகள் என்பன அவன் புதிய விடயமொன்றைச் சிந்திக்கவும், புதியனவற்றைச் செய்யவும் உதவுகின்றன. இயற்கையாகக் கிடைத்துள்ள பொருட்களைக் கொண்டு மனிதன் மேலதிகமாகக் பல பொருட்களை ஆக்கி வருகின்றான். இயற்கையினால் உருவாக்கப்படாத ஒன்றை மனிதன் உருவாக்குவதே கலையாகும். இயற்கையிலுள்ள மூலப்பொருட்களைப் பயன்படுத்தி கலைஞன் தனது ஆற்றலினால் உருவாக்கும் கருத்துள்ள ஆக்கமே கலை எனப்படும்.

ஒருவனது மனத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவாறு தனது ஐம்பொறிகளின் மூலம் கருத்தாற்றல்களை முன்வைக்க கலைஞன் முயல்கின்றதன் பிரதிபலனாக கலைகள் தோற்றம் பெறுகின்றன. இக்கலைகளுள் சில ஆக்கங்கள் உருவமும் உள்ளடக்கமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரித்துப்பார்க்க முடியாத அளவிற்கு இணைந்து மிக நுண்ணிதான ஆக்கமாக ஆக்கப்படுகின்றன. இவை நுண்கலைகள் எனப்படுகின்றன. நுண்கலைகளாகக் கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம் என்பன கருதப்படுகின்றன. இக்கலைகள் ஏதோ ஒருவகையில் எம்மோடு தொடர்பு கொள்கின்றன. கலைகள் மனிதனுக்கு இன்பத்தைக் கொடுப்பதோடு அறிவையும் புகட்டுவனவாக அமைகின்றன. இவ்வாறு அமையும் போது அவை ஏதோ ஒரு செய்தியை நமக்குத் தருகின்றன என்பது தெரிகின்றது.

தொடர்பு என்பது எல்லாக் கலைகளிற்கும் பொதுவானது. ஒவ்வொரு கலைகளிலும் தொடர்பாடல் எவ்வாறு நிகழ்கின்றது என்பது முக்கியமானது. அதாவது கலைஞன் தனது படைப்பில் எவ்வாறு கவர்ச்சியைக் கொண்டு வருகின்றான் என்று பார்க்குமிடத்து கலைகளின் தொடர்பாடல் பற்றிப் புரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு கலைவடிவமும் வேறுபட்டு நிற்பதற்குக் காரணம் அவை தம்மிடையே தனித்துவங்களைக் கொண்டிருப்பதனாலேயே எனலாம். இத்தனித்துவ அம்சங்களே கலையில் தொடர்பாடலுக்கு உதவுகின்றன. அதாவது கலைஞன் தான் சொல்ல விரும்புகின்ற செய்தியை சுவையாக உருவக்கின்றான். நுகர்வோன் படைப்பை இரசிப்பதன் மூலம் கலைஞனது செய்தியை ஏற்றுக்கொள்கின்றான்.

மனிதர்களிடையே தொடர்புகளை ஏற்படுத்துகின்ற அல்லது அதற்குத் துணை புரிகின்ற அல்லது தகவல் பரிமாற்றத் தொடர்பாடலானது குறியீடுகளைக் கொண்ட

சி. வசந்தன்

செயல்முறையாகும். தொடர்பு கொள்ளல் செயல்முறையில் நாம் பயன்படுத்தும் முக்கிய குறியீடு மொழி ஆகும். தொடர்பு கொள்ளலுக்கு மொழியைக் குறியீடாகப் பயன்படுத்தும் ஆற்றல் மனித இனத்திற்கு மட்டுமே உண்டு. எனினும் சொற்கள் பயன்படுத்துவது மட்டுமன்றி சொற்கள் இல்லாத குறியீடுகள் மூலமே கூடுதலான அர்த்தத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. இலக்கியம் தவிரக் கலைகள் பெரும்பாலும் மொழி பயன்படாத குறியீடுகளைக் கொண்டவையே இதனால்தான் கலைகள் தொடர்பாடலில் முக்கியமாகின்றன.

ஓவியக்கலையை எடுத்து நோக்குவோமாயின் ஓவியம் ஒன்றின் வெளிப்பாட்டில் அல்லது தொடர்பாடலின் அடிப்படைப்பிற்கு வர்ணப்பயன்பாடு வர்ண ஒளிநிழல் காட்டப்பட்டவிதம், வரையப்பட்ட கோடுகளின் தன்மை போன்றன. முக்கியமான கருத்தை விளக்கும் அம்சங்களாக இருக்கும் அதாவது ஓவியங்களில் வர்ணங்கள் இரேகைகள் தொடர்பாடற் குறியீடுகளாகக் காணப்படும். இந்தக் குறியீட்டுப் பண்பு காரணமாகவே நேரடியாகப் பிரதிபலித்துச் செய்யாத அருபப்படைப்புகளாற் கூட ஒரு செய்தியைத் தரக்கூடியதாக உள்ளது.

சிற்பக்கலையை எடுத்துக் கொண்டால் சிற்பக்கலை ஏனைய கலைகளைப் போலல்லாமல் புலன் உறுப்புகளுக்கும், ஸ்பரிச உணர்வுக்குரிய கலை வடிவமாகும். இது ஒரு நிலையான வார்ப்பாகவோ அல்லது செதுக்கல் முறையிலோ அமைந்திருக்கும் அடிப்படையில் இது ஒரு அசையாப் பொருளாக இருந்தாலும் தன்னுள்ளே அது ஒரு அசைவைக் கொண்டிருப்பதையும் ஏதோ ஒரு செய்தியை எமக்குச் சொல்வதையும் நல்லதொரு சிற்பத்தைப் பார்க்கும்போது அதனூடாக எமக்குக் கிடைக்கும் உணர்வுகள் மூலம் விளங்கிக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

மேலும் இசைக்கலைக்குரிய தனித்துவமான பண்புகளை எடுத்துக்கொண்டால் அது பிரத்தியட்ச பண்பற்றது. அனுபவமானது, தரப்பட்ட ஒலி, அதன் ஏற்ற இறக்கங்கள் மூலமே இசைக்கலைஞன் தான் நினைத்த உணர்வுகளை வெளிப்படுத்துகின்றான். நடனக்கலையிலும் அபிநயங்கள், முத்திரைகள் மூலமே இசைக்கலைஞன் தான் நினைத்த உணர்வுகளை வெளிப்படுத்துகின்றான். நடனக்கலையிலும் அபிநயங்கள்,முத்திரைகள் மூலமே அவை குறித்து நிற்கும் அர்த்தங்களை விளங்கிக்கொள்ளமுடியும். இதே போலவே நாடகக்கலையும் குறியீட்டியல் மூலம் அறிவைப் புகட்டுவதாகவும், ஒழுக்கத்தைப் போதிப்பதாகவும், இன்னும் பலவுமான பணிகளைச் செய்கின்றது இவ்வாறாக ஒவ்வொரு கலை வடிவங்களும் தமக்கேயுரிய தனித்துவமான அம்சங்களினூடாக தம்மை புலப்படுத்திக் கொள்கின்றன. அவை அவ்வாறு தம்மைப் புலப்படுத்திக் கொள்வதில் கலைக்குறியீடுகள் முக்கியபங்கு வகிக்கின்றன.

ஒரு சமூக வட்டத்துள் பயன்படுத்தப்படும் குறியீட்டு அம்சங்களை எடுத்துக் கொண்டால் அது அந்த சமூகவட்டத்துள் என்ன அர்த்தத்தைக் கொண்டுள்ளது. என்பது பற்றிய தெளிவு இருத்தல் முக்கியம். அந்தக் குறியீட்டுஅம்சத்தின் அர்த்தம் விளங்காத போது அந்தக் குறியீட்டால் குறித்த செய்தியைப் பெறமுடியாது போய்விடும் அதாவது தொடர்பாடல் செயற்பாடு படைப்பாக்கத்தில் குத்துவிளக்கொன்று சுடர்விடும் காட்சியில் நாம் பல அர்த்தங்களைப் பெறலாம். அவ்வாறான அர்த்தங்களைப் பெறவேண்டுமாயின் எமது பண்பாட்டில் குத்துவிளக்கிற்கு தெய்வீகத்தன்மை கற்பிக்கப்படுகின்றது என்பது விளங்க வேண்டும். அப்போதுதான் அக்குறியீடு குறித்து நிற்கும் பல்வேறுபட்ட விளக்கங்களை விளங்கிக்கொள்ள முடியும். அல்லாவிட்டால் அதற்கு எம்மால் சரியான செய்தியைப் பெறமுடியாது போய்விடும் இதேபோல நடனத்தில் வரும் அபிநயங்கள்,

முத்திரைகள் குறிக்கும் அர்த்தங்கள் தெரியாவிட்டால் நடனநிகழ்வு தரும் செய்தியை விளங்கிக் கொள்ள முடியாது போய்விடும்.

20ம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்த துறையாகவே இந்த குறியீட்டியல் ஆய்வு காணப்படுகின்றது. உளவியல், மெய்யியல், அளவையியல் போன்ற துறைகள் கலையிலும் குறியீட்டியலின் இன்றியமையாமை உணரப்பட்டுள்ளது. இன்றைய நாடகங்கள், ஓவியங்கள் குறியீடுகள் மூலமே கருத்தை உணர்ச்சியை வெளிப்படுத்துவனவாகக் காணப்படுகின்றன. அதாவது இலக்கியம் ஒன்றின் கருத்தை வெளியிடுவதில் மொழி எவ்வாறு குறியீடாக அமைகின்றதோ அதேபோல் மொழிபயன்படாக் கலைகளான கட்புலக்கலைகளிலும் மொழிபோன்ற ஒரு குறியீடே கருத்துப்பரிமாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இந்தக் குறியீடுகள் கலையின் சைகைகளாகவும், சமிஞ்ஞைகளாகவும் நின்று அர்த்தப்புலப்பாட்டைச் செய்கின்றன.

கலையிற் குறியீடு என்பது ஏதோ ஒன்றையோ பலதையோ சுட்டியே நிற்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. ஆனால் அது குறித்து நிற்பது அல்லது பிரதிபலிப்பதை ஒன்றினது சாயல் ஒன்றுமையோ அன்றிப் போலச் செய்தலோ என்று கூறிவிடமுடியாது. அதற்கு மேலாக அது பல அர்த்தங்களைக் கொண்டிருக்கும். அதாவது குறியீடு அடிப்படையில் அது சாயல் ஒற்றுமை சாராத பிரதிபலிப்பாகவே இருக்கும். இவ்விடத்திலே கலை வரலாற்று ஆசிரியரான ஹோம்பிறிச் (Gombrich) என்பவராலும் மெய்யியலாளரான நெல்சன் குட்மன் (Nelson Goodman) இனதும் கலையிற் குறியீடுகள் பற்றிய கருத்துக்களை எடுத்து நோக்குவோமாயின் நெல்சன் குட்மனின் கருத்துப்படி கலைகள் ஏதோ ஒன்றினைப் பிரதிபலிப்பது உண்மை என்றாலும் அப் பிரதிபலிப்பு சாயல் ஒற்றுமை கொண்ட பிரதிபலிப்பு அல்ல, அது ஒரு குறியீட்டுப் பிரதிபலிப்பே என்று கூறுகின்றார். மேலும் கலையின் பிரதிபலிப்பு என்பது பரஸ்பரம் வைத்திருத்தல் அல்ல அவ்வாறு எனின் புகைப்படப் பிரதிகளும் கலைப்படைப்பாகிவிடும். அதனால் கலைப்படைப்பொன்றின் பிரதிபலிப்பு போலச்செய்தலோ, சாயல் ஒற்றுமையோ என்று கூறமுடியாது. என்று ஹோம்பிறிச் இவரது கருத்தை ஏற்றுக் கொள்கின்றார்.

எனவே கலைப்படைப்புகளின் சிறப்பிற்குக் காரணமே அது குறியீடாக தன்னைப்புலப்படுத்தி நிற்பதேயாகும். குறியீட்டு மொழியை நாம் புரிந்து கொள்ளும்போதுதான் கலைகள் வெளிப்படுத்தும் செய்தியை முழுமையாகப் பெறமுடியும்.

சுதந்திரம் வேர் ஊன்றத்தொடங்கி விட்டால் அது வேகமாக வளரும் செடி.

- *ஜோர்ஜ் வோஷிங்டன்*

பணக்காரர்களிடமுள்ள பணம் என்றால், அது ஏழைகள் வடித்த வியர்வையாகும்.

- *காண்டேகர்*

# நீங்களும் நாடகம் நடிக்கலாம்

மனிதனுடன் பிறந்து வளர்ந்து நடிப்புக்கலை இளமைக்காலந்தொட்டே அவனுடன் வளர்ந்து வருவது இக்கலை காண்பவற்றைக் கருத்தில் பதிய வைத்து வெளியிட முயலுகிறது அவ்வாறு வெளியிடும் பொது "போலச் செய்தல்" என்ற நடிப்பின் ஒரு கூறு துணை செல்கிறது.

காக்கை போல குழந்தை கரைந்து காட்டுகின்றது. மொழியைக் கற்கும் போது நாய் போல் குரைத்துக் காட்டுகின்றது தாத்தா போல நடந்து காட்டும் போது, மற்றொருவரின் செயலைச் செய்து காட்டுகிறது நாளடைவில் இந்த நடிப்பு மனித வாழ்வில் பல்வேறு நிலைகளில் வெளிப்படுகிறது.

ஷேக்ஸ்பியர் போன்ற நாடக மேதைகள் உலகை ஒரு நாடக மேடையாகவும் அதில் மகிழ்ந்துள்ளனர். சங்கப்புலவர்கள் சிலர் இவ்வுலக மக்கள் விழாக்காலத்தில் வந்து ஆடிச் செல்லும் கூத்தர்களைப் போல வாழ்க்கை எனும் நாடகத்தில் ஆடிச் செல்லுகிறார்கள் என்கிறார். "விழவிற் கோடியர் நீர்மை போல" என்பது அவரது வாக்கு ஆகவே நடிப்பு என்பது மனிதனுடன் பிறந்த இயல்புக்கலை என்பது புலனாகும்.

இந்த நடிப்பு கலை வடிவம் பெற்று அரங்கேறும் போது நாடகமாகிறது ஒருவரோ அன்றிப் பலரோ, ஒரு நிகழ்ச்சியையோ அல்லது கதையையோ நடிப்பின் மூலம் வெளிப்படுத்துவதை நாடகம், என்கிறோம். நாடகம் அரங்கேறும் போது அரங்க அமைப்பு, அதன் ஒலி, ஒளியமைப்பு அரங்கேறும் போது, அரங்க அமைப்பு, அதன் ஒலி ஒளியடைப்பு, காட்சிப் பின்னணியமைப்பு, இசை நடிகர்களின் நடிப்பு, ஒப்பனை, உடையமைப்பு என்ற பல்வேறு துறைகளின் துணையுடன் இயங்குகிறது ஆகவே அரங்கவியலை அறிந்து கொள்ள விரும்புவோர் இவையனைத்தையும் பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாது இவற்றுள் நடிப்பு என்பது முதலிடம் பெறுகிறது.

நடிப்பு என்பது பரந்துபட்ட பொருளையுடையது என்றாலும் நடிகர் ஒருவர் மேடையில் தோன்றி வெளிப்படுத்தும் அனுபவ வெளிப்பாடுகளைத்தாம் நாம் இங்கு நடிப்பு என்று குறிப்பிடுகின்றோம். நடிப்பது என்பது வாழ்க்கையின்றும் முகிழ்ப்பது என்றாலும் நடிப்பே வாழ்க்கையாகிவிடாது. இந்த இரண்டிற்கு மிடையே வேறுபாடு உண்டு இந்த வேறுபாடுகளைத் தாம் நடிப்ப உத்திகள் என்கிறோம் (இதனால் நாடகத்தை கூட்டுக்கலை கலை என்றும் அழைக்கின்றோம்) நடிக்க விரும்புவோர் ஒவ்வொருவரும் நடிப்பு உத்திகளைக் கற்றுக் கொண்டுதான் ஆக வேண்டுமென்பதில்லை. ஆடல், பாடல் என்பது மனிதருடன் பிறந்த இயல்பான கலைகள்தாம். ஆனால் இதன் உத்திகளை நன்கு கற்றுத் தேர்ந்து பயிற்சி செய்தவர்கள் சிறந்த நடிகர்களாக வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஆரம்பத்தில் நடிக்க விரும்பு வோர் பின்வரும் விடயங்களில் முக்கியமாக கவனமெடுக்க வேண்டும்.

ஒரு ஆற்றுகையின் போது நடிகனின் பேச்சு அவையோர் அனைவராலும் கேட்கப்பட வேண்டும் அவனுடைய செயல்கள் அனைத்தையும் அவையோர் (பார்வையாளர்)

க. கணேகேஷ்வரன்

காணவேண்டும். அரங்கின் கடைசி வரிசையில் இருப்பவர்களுக்கும். நடிகனின் தோற்றம் புலனாகும் வகையில் நடிகன் காட்சியளிக்க வேண்டும்

நடிகர்கள் ஒருபோதும் அவையிலுள்ள குறிப்பிட்ட பார்வையாளரை பார்த்து நடித்தல் தவிர்க்கப்பட வேண்டிய தொன்றாகும்.

நாம் ஏற்றுக் கொண்ட பாத்திரமாக மாறி நடிப்பவரைச் சிறந்த நடிகர் என்கின்றோம் தாம் ஏற்றுக் கொண்ட பாத்திரத்தை மனக்கண்முன் நிறுத்தி தன்னுடைய தோற்றம் அனுபவத்தோடு இணைத்து உள்ளத்தினுள் ஒரு ஒத்திகை நிகழ்த்தி அதனை வெளிப்படுத்த வேண்டும் நடிகரின் கற்பனைத் திறக் வெளிப்படுத்த வேண்டும் நடிகரின் கற்பனைத் திறன் இதற்கு உதவியாக அமையும் முதியவராக நடிக்க விரும்பும் ஒருவர் தாம் மேற்கொள்விருக்கும் பாத்திரத்தின் இயல்பு சூழல், வயது ஆகியவற்றை ஆராய்வது தாம் கண்டு கேட்டறிந்துள்ள முதியவர்களின் நடை, உடை பாவனைகளோடு இணைத்துப் பார்த்துத் தேவையானவற்றை வெளிப்படுத்த வேண்டும் நடை, அங்க அசைவுகள் முகபாவங்கள் ஆகியவற்றின் எவ்வொற்றிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தேர்ந்தெடுக்கும் நடிகனே சிறந்த படைப்பாளி ஆக முடியும் இவ்வாறு சிறந்த கற்பனைத் திறனும் ஈடுபாடும் கொண்டு தகுந்த வெளிப்பாடு முறைகளைக் கையாள்வோரையே சிறந்த நடிகர்கள் எனலாம்

நாம் தாம் ஏற்றுக் கொள்ளும் பாத்திரத்தின் இயல்புகளை உயர்ந்து உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டும் உணர்ச்சியோடு நடித்தலா? உணர்ச்சி வசப்பட்டு நடித்தலா? என்ற கேள்விகள் மேலைநாட்டு நாடகத்திறனாய் வாளர்களிடையே நீண்ட காலமாக சுவையான விவாதங்களை எழுப்பி வந்துள்ளன. உணர்ச்சி வசப்பட்டு நடித்தல் தற்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை,

சிறந்த நடிப்பு எது என்பதனை தீமானிப்பது பார்வையாளரே அனாலும் இவர்களின் விரும்பும், ஈடுபாடும் தீமானமும் நிலையானது அல்ல யதார்த்த நடிப்பு இயல்பு நடிப்பு என்ற தொடர்கள் நாடக அறிஞர்களினால் கூறப்பட்ட போதும் அவை நடைமுறைக்கு சாத்தியமாக படவில்லை காரணம். எந்த வித அசைவுகளும் இன்றி, குரலில் ஏற்ற இறக்கமின்றி, உணர்வகழள வெளிப்படுத்தும் முகபாவம் எதுவும் இன்றி நடிப்போரை பார்வையாளர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இயந்திரத்தனமான நடிப்பு வேறு நடிகரை பின்பற்றி நடித்தல் போன்றவை நீண்டகால வெற்றியைத்தராது

நடிகர்தம் உடல் தம் விருப்பிற்கும் கட்டளைக்கும் ஏற்ப வளைந்து கொடுக்கும் ஆற்றலை பெற வேண்டும். உள்ளத்தைக் கட்டுப்படுத்தும் தியானம், யோகம், உடலை நெறிப்படுத்தும் உடற்பயிற்சிகள் இவற்றை மேற்கொள்ள வேண்டும் பயிற்சிகளால் தம் உடற்குறைகளை அறிந்து போக்கிக் கொள்ள இயலும் பொலிவான தோற்றம் வளமான குரல் இசைவான அசைவுகள் ஆகியவற்றை நடிகர்கள் தம் உடற்பயிற்சியால் பெற முடியும்.

நடிகர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டிய சில விடயங்கள்

நல்ல கதையை தேர்வு செய்து விரும்பிய பாத்திரத்தில் நடிக்க முன வரவேண்டும் தனக்கு பொருத்தமான வேடம் என தெளிவான பின்னரே அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்

நடிப்பு என்பது கற்பனை, குரல், அங்க அசைவு அகியவற்றின் ஒட்டு மொத்தமான வெளிப்பாடாகும். என்பதை நடிகர்கள் நன்க பரிந்து கொள்ள வேண்டும்.

வீட்டிலுள்ள கண்ணாடி முன்நின்று முக உணர்ச்சிகளை ஒத்திகை பார்த்துக் கொள்ளலாம் கழந்தை நடிகராக இருந்தால் பல முறை நடிப்பை கற்றுக் கொடுத்து ஊக்குவிக்கலாம்

இயக்குநர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் சக நடிகர்கள் அரங்க அமைப்பாளருடன் ஒத்துப் போகவும் பழக வேண்டும்

வாழ்க்கையில் பேசுவது போன்றதில்லை நடிப்பு சிறிது மிகையான நடிப்புத் தேவைதான் ஆனால் அதற்காகக் காரணமேயில்லாத மிகையான நடிப்புக் கூடாது "மிகையாக நடிக்கும் முறையை நீங்கள்

தவிர்க்க வேண்டுமென்று விரும்புகின்றேன் அதற்காக உணர்ச்சியே இல்லாமல் உயிரற்று இருந்து விடாதீர்கள் வசனத்திற்குத் தகுந்த நடிப்பையும், நடிப்புக்குத் தகுந்த வசனத்தையும் கையாளுங்கள் இயற்கையைக் கண்ணாடிபோல் எதிரொலிப்பதுதான் எழில் மிக்க நடிப்பின் குறிக்கோளாகும் என்றார்'' ஷேக்ஸ்பியர்.

பிற நடிகர்களைக் காட்டிலும் தனது நடிப்பு மேலோங்கி இருக்க வேண்டுமெனக் கருதுதல் கூடாது

நடிப்பின் போது மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும் கவனம் சிதறினால் பாத்திரமாகவே மாறி இயல்பாக நடிக்க முடியாது.

ஒரு நடிகர் வசனத்தை மறந்து போனால்,அவருடன் உரையாடல் கொண்டிருப்பவர் வசனத்தை அவரிக்கு கூறலாமல் சூழலை அனுசரித்து பார்வையாளர் அறியவாறு சமாளிக்க வேண்டும்.

ஒரு நடிகர் பேசுகையில் அவர் முடிக்கு முன் தான் தான் முந்துதல் கூடாது தானும் அவர் பேசுவதற் கேற்ப முக பாவங்களைக் காட்ட வேண்டும் தான் பேசும் போது மட்டுமே நடித்தால் பொதுமென இருக்க கூடாது.

மற்ற நடிகர்களுடைய வசனம் உரையாடல் நடிப்பு, உத்திகள் என்பவற்றை இயலுமானவரை சக சடிகர் தெரித்து வைத்திருத்தல் வேண்டும்.

சிறந்த நடிப்பிற்கு இடைவிடாத பயிற்சிகள் தேவை என்பதை அறிதல் வேண்டும்.

ஒப்பனையிலும் கவனம் செலுத்துதல் வெண்டும். பாத்திரபடைபிற் கேற்ப ஒப்பனை அவசியம் ஒவ்வொரு நடிகரும் தானே ஒப்பனை செய்து கொள்ளும் ஆற்றலை ஆறிந்து கொள்ள வேண்டும்

ஒப்பனையிலும் கவனம் செலுத்துதல் வேண்டும் பாத்திர படைப்பிற்கேற்ப ஒப்பனை அவசியம் ஒவ்வொரு நடிகரும் தானே ஒப்பனை செய்து கொள்ளும் ஆற்றலை அறிந்து கொள்ள வேண்டும்.
எந்த சந்தர்ப்பத்திலும் நடிகருக்கு சமாளிக்கும் சூழல் நோக்கு அவசியமாகும்.

நாடக சந்தர்ப்பத்திலும் நடிகருக்கு சமாளிக்கும் சூழல் நோக்கு அவசியமாகும்.

நாடக ஒத்திகையானது பல முறை சிறப்பாக இடம் பெற வேண்டும் (உடை அலங்காரம் உட்பட)

மேற்பா விடயங்களையும் கவனத்தில் எடுப்பின் நீங்களும் நடிகராக வருவதற்கு எந்த வித தடையுமிராது.

" ALL THE WORLD IS A STAGE ANG ALL THE MEN AND WOMEN MERELY PLAYERS"

*SHAKESPEARE*

---

உசாத்துணை நூல்கள்
அரங்கவியல்
" சத்தியப்பெருமாள்''

அஞ்சாமை என்பது அழகுதான்
அதனிலும் அழகு நேர்மை.

- *ஓர் அறிஞர்*

கண்ணியம் மிக்க மனிதர் பொய் சொல்லவே தெரியதவனாக இருக்க வேண்டும்.

- *எமர்சன்*

உள்நாட்டு வெளிநாட்டு தொடர்பகங்களுக்கு
நாட வேண்டிய ஒரே இடம்

# கோபிகா தொலைத் தொடர்பகம்



உள்நாடு:- 070-212267
வெளிநாடு:- 0094-70-212267

உரிமையாளர்:-
சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர் J.P

வல்வெட்டி

அரங்கம் வெளியீட்டை வாழ்த்தும்

தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த கல்வி நிறுவனம்





# நவீன கல்வி நிலையம்

வல்வெட்டி

நிர்வாகி:- கு. தவக்குமார்


யா / உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின்
கலை வர்த்தக மன்றத்தின்
" அரங்கம்" வெளியீட்டை வாழ்த்துகின்றோம்


# சிதம்பரப்பிள்ளை புத்தக சாலை




நெல்லியடி,
கரவெட்டி.









# ஸ்ரீ கிருஸ்ணா கிறீம் கவுஸ்



- ஸ்பெசல் கிறீம்
- சொக்லேட் கிறீம்
- நட்ஸ் கிறீம்
- கிறீம் சர்பத்
- சர்பத்
- ஒரேஞ் யூஸ்
- ஐஸ் பழம்



ஆகியவற்றை சுகாதார முறைப்படி தயாரித்து
விநியோகிப்பவர்கள்

* கொடிகாமம் வீதி, நெல்லியடி. *

வாடிக்கையாளர்கள்: –
ஸ்ரீ கிருஸ்ணா மணப்பந்தல் சேவைக்கும்
தொடர்பு கொள்ளவும்

# திருவிவிலியம்

உலகத்தில் முதல் முதல் அச்சேற்றப்பட்டதும் உலக மொழிகள் பலவற்றின் (எண்ணிக்கையில் அதிகமாக) மொழி பெயர்க்கப்பட்டதும். உலகின் எல்லாப்பகுதிகளிலும் எல்லா இனமக்களாலும் வாசிக்கப்படுவதும் நாளாந்தம் கிறிஸ்தவ மக்களின் வழிபாட்டு முறைகளில் முக்கிய இடம் வகிப்பதும் புனிதத்தன்மை நிறைந்ததும் வேதாகமம் ஆகும். இது வைபிள் வேதநூல், விவிலியம், ஆகியபெயர்களால் அழைக்கப்படுகிறது. ஆரம்ப காலம் தொடக்கம் கிறிஸ்தவ சமுதாயம் இதனை மிகவும் புனிதம் நிறைந்த நூலாக ஏற்றுக் கொண்டு போற்றிப் பூசித்துவருகின்றது. இது இறைவன் அருளிய நூல். இறைவனின் வாழ் வளிக்கும் வார்த்தைகள் அடங்கிய நூல். மற்றெல்லா நூல்களிலும் பார்க்க மகத்துவம் நிறைந்த நூல். இதன் வழியாக இறைவன் மனிதனைச் சந்திக்கிறார். மனிதனுடன் உரையாடுகின்றார். மனிதனை வாழ்வாங்கு வாழ வழிநடத்துகிறார். அத்துடன் தம்மை தமது பிரசன்னத்தை வெளிப்படுத்திகிறார். இத்தனை சிறப்புக்களுக்கும் ஆதாரமாய் விளங்குகிறது வேதாகமம். இதன்காரணமாகத்தான் இந்நூலுக்குப் பெரும் மதிப்பும் மகத்துவமும் கொடுக்கப்படுகிறது உலகெங்கும் பரந்துவாழும் யூதர்களும் - கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் இதனை ஒரு புனிதநூலாகக் கருதிப்போற்றி வருகின்றனர். இதனுடைய புனிதத்தன்மைக்கு மேன்மைக்கு புகழுக்கு பெருமைக்கு கிறிஸ்தவர்கள் தங்களது குருதியைச் சிந்தி சான்று பகர்ந்துள்ளார்கள். வேதகலாபகைகளின் போது இதனைப் பகைவர்களிடம் இருந்து பாதுகாப்பதற்காக தாங்கள் எங்கெங்கு சென்றார்களோ அங்கெல்லாம் இந்நூலை எடுத்துச் சென்று பாதுகாத்தனர்.

வேதாகமம் திடிரென்று தோன்றவில்லை பல்லாண்டு காலத்தின் ஊடாகப் படிப்படியாகத் தோன்றியது இறைவன் மக்களோடு தொடர்பு கொண்டு தம்மை, தம்மைப்பற்றிய உண்மைகளைத் தம் இயல்பை தம் பிரசன்னத்தை பல முறைகளில் பல விதமாகப் படிப்படியாக வெளிப்படுத்தினார். இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ராயேல் இனத்தவர்கள் தமது வரலாறு வழியாக நாம் பட்டனுபவித்த வரலாற்று நிகழ்வுகள் வழியாக இறைவனை உணர்ந்து இறை அறிவிலே வாழ்த்துவந்தனர். காலா காலமாக தாம் பெற்ற இவைகளை தம்சந்ததியினருக்கு வாய் மொழியாக அளித்து வந்தனர். இஸ்ராயேல் வரலாறு வழியாகவும் பிதாப்பிதாக்கள், நீதிபதிகள், அரசர்கள் இறைவாக்கினர் வழியாகவும் வெளிப்படுத்தப்பட்ட உண்மைகள் படிப்படியாக வளர்ந்து இறை மகன் இயேசுவிலே முழுமைபெற்றது.

இறைவனால் தெரிந் தெடுக்கப்பட்ட இஸ்ராயேல் மக்கள் இயற்கை நிகழ்வுகளையும் தாம்பட்டனுபவித்த சம்பவங்களையும் பிரச்சினைகள் அழிவுகள், அனர்த்தங்கள் யாவையும் இறைவன் செயலாகக் கண்டனர். காலத்தின் குறிகள் வழியாக இறைவன் தம்மைச் சந்திப்பதையும் பேசுவதையும் உணர்ந்தனர் அவை வழியாக இறைவனின் அன்பு, இரக்கம் கருணை,மன்னிப்பு, நீதி, பிரமாணிக்கம், நடுநிலை ஆகிய பண்புகளையும் வரலாற்று ரீதியாக நாம் பெற்ற அனுபவங்களையும் தமது அடுத்த தலை முறைக்கு வழங்க வேண்டும் என்பதால் தமது பிள்ளைகளுக்கு வாய்மொழியாக எடுத்துரைத்தனர் இவ்விதம் காலத்தினூடாக இஸ்ராலேயரின் இறை அறிவு, இறை அனுபவங்கள் வளர்ந்து விரிவடைந்து வந்தன பிற்காலத்தில் அவை எழுத்துவடிவம் பெறும் வரை பாதுகாக்கப்பட்டுவந்தன. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மொசப்பத்தேமியாவில்

க.செபநேசன;B.A. Dip in Ed

எழுத்து முறைகள் கண்டு பிடிக்கப்பட்டன. ஆரம்பத்தில் படங்கள் சித்திரங்கள் குறியீடுகள் அடையாளங்கள் வழியாகக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. களிமண்ணிலும் கற்களிலும் மரத்திலும் சுவர்களிலும் புல்தண்டுகளிலும் செதுக்கி வரைந்து வந்தனர். இப்படிப்பல நூற்றாண்டு காலமாக மெதுவாக படிப்படியாக வளர்ந்தது கி.மு. 2000 ஆண்டளவில் தான் முதல் எழுத்துத் தோன்றியது இதன்பின்னரும் பல்லாண்டு காலங்கள் சென்றபின் தான் முறையான எழுத்துருவம் உண்டாயிற்று. அந்தக் காலகட்டத்திலே தான் இறைவன் எழுத்தாளர்களைக் கொண்டு வேதாகமத்தை எழுதுவித்தார்.

வாய்மொழிப்பாரம்பரியமாகப் பாதுகாக்கப்பட்ட உண்மைகளை முழுமையாக எக்காலத்திற்கும் எல்லாச் சந்ததிக்கும் கிட்டவழிசெய்தார். வெவ்வேறு காலகட்டங்களிலே வெவ்வேறு சூழல்களில் வாழ்ந்த ஆசிரியர்களைத் தெரிந்தெடுத்து அவர்களைப் பரிசுத்த ஆவியால் நிரப்பி வாய்மொழி வழியாகவந்த இறை உண்மைகளை, இறை அனுபவங்களை எழுத்தில் வடிக்கச்செய்தார். அவர்கள் தம் காலத்துச் சூழ்நிலை. மரபுகள்,கலாச்சாரம், இலக்கியநடை என்பவற்றிற்கு ஏற்ப தமது அறிவு, திறமை, அனுபவம், ஆற்றல், விருப்பு, வெறுப்பு, கற்பனை ஆகிய அம்சங்களைச் சேர்த்து எழுதினர். இது கி.பி 50க்கும் கி.பி 100க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்டது வேதாகமம் கடவுளை ஆசிரியராகக் கொண்டது. ஆனால் மனிதர்களைக் கருவிகளாகக் கொண்டுள்ளது கடவுள் தமது இறைவல்லமையால் அவர்களை எழுதத்தூண்டினார் அவர்கள் இறைவனின் தூண்டுதலை சரியாக உணர்ந்து அவற்றை அறிந்து தெளிந்து பரமாணிக்கத்தோடு தகுந்த சொற்களைக் கொண்டு வழுவா உண்மையோடு அவற்றை எழுதினர் ஆகவே வேதாகமத்திற்கு இருவகை ஆசிரியர்கள் உள்ளனர். இறை உண்மைகளை வெளிப்படுத்திய இறைவன் பிரதான மூல ஆசிரியர். இறை சித்தத்திற்கு கட்டுப்பட்ட இறைவன் விரும்பியதை எழுத்தில் தந்த மனிதர்கள் துணை ஆசிரியர்கள். வேதாகமத்தின் மூல ஆசிரியர் இறைத் தன்மையுமையவராய் இருப்பதனால் இது இயற்கைக்கு மேற்பட்டது. புனிதமானது. துணைஆசிரியர்களை இறைவன் எழுதப்பயன்படுத்தினாலும் அவர்களது உணர்ச்சி, பகுத்தறிவு, சுயாதீனம் என்பன மட்டுப்படுத்தப்பட்வில்லை. ஆகவே அவர்கள் தங்களது அறிவு, ஆற்றல், அனுபவம், கற்பனை, ஆகியவற்றைப் பயன்படுத்தி அக்கால சமுதாய அமைப்பு, பழக்க வழக்கங்கள், பண்புகள் என்பனவற்றை உதாரணங்கள் உவமைகள், கதைகள் மூலம் விளக்கி எழுதினர் எனவே வேதாகமத்திற்கு இறைவன் பிரதான ஆசிரியர், இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றியவர்கள் துணை ஆசிரியர்கள். வேதாகாமத்தை மூல ஆசிரியரான இறைவனுக்கும் துணை ஆசிரியர்களுக்கும் உள்ள தொடர்பை, உறவை விரிவாக அறிந்து கொள்ளவேண்டும்.

வேதாகாமம் இரண்டு பெரும் பிரிவுகளைக் கொண்டது பழைய ஏற்பாடு, புதிய எற்பாடு என்பனவாகும் பழைய ஏற்பாடு இஸ்ராஜேலரின் இரண்டாயிரம் வரலாற்றைக் கூறுகின்றது புதிய எற்பாடு ஆதிகிறிஸ்தவர்களின் ஏழுபதாண்டு வரலாற்றைக் கூறுகின்றது பழைய ஏற்பாட்டில் 46 நூல்கள் உள்ளன. புதிய ஏற்பாட்டில் 27 நூல்கள் உள்ளன.

யூதர்கள் பழைய ஏற்பாட்டையே பின்பற்றி ஏற்றுக்கொண்டு வந்தனர். யூதர்களில் இரண்டு பிரிவினர் இருந்தனர் பலஸ்தீனிய யூதர்கள் எபிரேய மொழி பேசுவோராகவும் சிதறுண்ட யூதர்கள் கிரேக்க மொழிபேசுவோராகவும் இருந்தனர். முதல் கிறிஸ்தவர்கள்யாவரும் யூதரே. வேதாகமத்தில் மூலப்பிரதிகள் எரேபிய மொழியில் எழுதப்பட்டன. பின்னர் கிரேக்கமொழியிலும் காலப் போக்கில் ஏனைய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டன. அவ்விதம் அமைந்த நூல்களைப் பின்வரும் பிரிவுகளில் அடக்கியுள்ளனர்

பழைய ஏற்பாடு

1. ஐந்நூல்
2. வரலாற்று நூல்கள்
3. ஞானாகாமங்கள்
4. இறை வாக்கினர் எனும் பிரிவுகளில் அடங்கும்

ஐந்நூல்

1. தொடக்க நூல்
2. விடுதலைப் பயணம்
3. லேபியர்
4. எண்ணிக்கை நூல்
5. இணைச் சட்டம் என்பனவற்றைக் குறிக்கும்.

வரலாற்று நூல்கள்

1. ஜோசுவா
2. நீதித்தலைவர்கள்
3. ரூத்து
4. 1 - 2 அரசர்கள்
5. 1 - 2 சாமுவேல்
6. 1 - 2 குறிப்பெடு
7. எஸ்ரா
8. நெகேமியா
9. தொலித்து
10 யூடித்
11. எஸ்தர்
12. 1 - 2 மக்கபேயர்

## ஞானாகாமங்கள்

1. யோபு
2. தாவீது அரசர்
3. திருப்பாடல்கள்
4. நீதி மொழிகள்
5. சால உரையாளர்கள்
6. இனிமை மிகுபாடல்கள்
7. சாலமோனின் ஞானம்

போன்றவற்றைக் குறிக்கும்

இறைவாக்கினர்

| | |
|---|---|
| 1. ஏசாய | 2. ஒலதியா |
| 3. புலம்பல் | 4. யோனா |
| 5. பாறூக் | 6. நிக்கா |
| 7. ஏரேமியர் | 8. நாகூம் |
| 9. எசக்கியேல் | 10. அபகூக்கு |
| 11. தானியேல் | 12. செப்பனியா |
| 13. ஒசேயா | 14. ஆகாய் |
| 15. யோவேல் | 16. சக்கரியாஸ் |
| 17. ஆமோஸ் | 18. மலாக்கியர் |

என்பவற்றை குறிக்கும்

புதிய ஏற்பாடு

1. நற்செய்திகள்
2. திருத்தூதர் பணி
3. திருமுகங்கள்
4. திருவெளிப்பாடு எனும் பிரிவுகளில் அடங்கும்

வேதாகமம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு எனும் பிரிவுகளில் அமைந்திருந்தாலும் மேற்குறிப்பிட்ட பல்வேறு நூலல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை அறிந்து கொள்வது மிகவும் விரும்பத்தக்கதாகும்.

தவறுகளை ஒப்புக் கொள்ள மறுப்பதைவிடப் பெரிய அவமானம் வேறு எதுவும் இல்லை.

-மகாத்மா காந்தி

# நிதியுதவி செய்தோர்க்கு நன்றி

| | |
|---|---|
| 1) T. இராஜேஸ்வரன்<br>உடுப்பிட்டி | 1000.00 |
| 2) மு. தயானந்தன்<br>உடுப்பிட்டி | 500.00 |
| 3) இ. தனேஸ்வரன்<br>உடுப்பிட்டி | 500.00 |
| 4) K. மனோகரன்<br>சந்தைவீதி, உடுப்பிட்டி | 500.00 |
| 5) Dr. K. Rathakirishnan<br>D. A. M. S. (ceylon)<br>REGD No 7145<br>Main street,<br>Nelliady. | 500.00 |
| 6) N. தெய்வேந்திரம்<br>இந்திரா கபே<br>பிரதான வீதி, நெல்லியடி. | 250.00 |
| 7) கலைவாணி கண்ணாடிக் களஞ்சியம்<br>பிரதான வீதி, நெல்லியடி. | 250.00 |
| 8) R. இராஜலக்சுமி<br>உடுப்பிட்டி | 250.00 |
| 9) க. லிங்கரத்தினம்<br>உடுப்பிட்டி | 100.00 |


# ஜெகா மோட்டோர்ஸ்

**பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.**

**கிளை நிறுவனம் ஸ்ரான்லி றோட் 242 கோப்பாய்**

*கட்டிடப் பொருட்கள்*
*மின்சாரப்பொருட்கள்*
*மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனையாகின்றன.*





தொலைபேசி இல: 070-212228
021-3237



உரிமையாளர்:- ச. இரத்தினகோபால்


# SUTHA VIDEO & STUDIO

Proprietor:
**THARMALINGAM SUTHAHAR**



For:

- PHOTOGRAPHY,
- VIDEO & AUDIO RECORDING
- WEDDING SERVICES, DECORATIONS, SHED, HAIR STYLE,
- ICING, FURNITURE & SOUND SERVICES & ETC.



***Vathiry Road, Uduppiddy.***


கணாதிபன் அச்சகம் - கரணவாய்